
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்
ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 30 | பக்கங்கள் : 20



08
மகிந்தவிடம் சம்பந்தன் விடுத்த வேண்டுகோள்



09
கவனிக்கப்படுமா சிவில் சமூகங்களின் குரல்?



10
நிச்சயமற்ற உள்ளூராட்சி தேர்தல்களும் நம்பிக்கையற்ற பேச்சுவார்த்தைகளும்!



11
நிற்கும் ரயில் சேவை அச்சுறுத்தும் பயண பயம்!

# தமிழரசு, ரெலோ, புளொட் தனித்தனியாகப் போட்டி!



**மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் தமிழரசு யோசனை கூட்டமைப்பின் பங்காளிகளுடன் பேசி இறுதி முடிவு**

யாழ்ப்பாணம், ஜனவரி 08

**நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் ஆகியன தனித்தனியாகப் போட்டியிடவேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்களால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக கூட்டத்துக்கு தலைமை தாங்கிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி

19

## அரசுடனான பேச்சில் நம்பிக்கை இல்லை!

கொழும்பு, ஜன. 08
அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சில் தமக்கு நம்பிக்கை இல்லை என கூட்டமைப்பின் பாரா

19

## கூட்டமைப்பை பதிவு செய்வதில்லை!

**தமிழரசு நேற்று ஏகோபித்த தீர்மானம்**

யாழ்ப்பாணம், ஜன. 08
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வதில்லை என தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நேற்று ஏகோபித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மிகவிரைவில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், ஒரு வார காலத்தில் இது

19

## பிரிந்து சென்றவர்கள் முன்னர் இருந்த கட்சிகளில் இணைந்து கொள்ளலாம்!

யாழ்ப்பாணம், ஜன. 08
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புதிய கட்சிகளை இணைக்கக்கூடாது. தேவையென்றால், பிரிந்து சென்றவர்கள் முன்னர் எந்தக் கட்சியில் இருந்தார்களோ, அந்தக் கட்சிகளில் இணைந்து கொள்ளலாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாக இருந்து விலகிச்

19

## அமெ. சிறப்புப் பிரதிநிதி இலங்கைக்கு வருகிறார்



கொழும்பு, ஜன. 08
அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் சிறப்பு பிரதிநிதி ஒருவர் எதிர்வரும் 10 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

தெற்காசிய பிராந்தியம் தொடர்பான அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் சுமோனா குஹா என்ற அதிகாரியே

19

## கூட்டமைப்பின் அதிருப்தியை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது!

**கூறுகிறார் பிரதமர் தினேஷ்**

கொழும்பு, ஜன. 08
இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள முன்மொழிவுகள் அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். சர்வகட்சிப் பேச்சு சரியான திசையை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது. கூட்டமைப்பினரின் தற்போதைய அதிருப்தி நிலையை ஏற்க முடியாது."

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் இரா. சம்பந்தன் தலை

19



## உள்ளூராட்சித் தேர்தலுக்காக வடக்கில் முதல் கட்டுப்பணம்!

**வாசுதேவ அணி செலுத்தியது**

வவுனியா, ஜன. 08
இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வவுனியா மாவட்டத்தில் முதலாவது கட்டுப்பணம் நேற்று செலுத்தப்பட்டது.

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளர்கள்

19

## சாதாரண தர பரீட்சை மே மாதம்!

கொழும்பு, ஜன. 08
2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை மே மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்

19

## அடுத்த வாரம் இந்தியாவுக்கு பறக்கிறார் ஜனாதிபதி ரணில்!

**உலகளாவிய தெற்கு உச்சி மாநாட்டில் பங்கேற்பார்**

கொழும்பு, ஜன. 08
இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்தியாவினால் நடத்தப்படும் உலகளாவிய தெற்கு உச்சி மாநாட்டில் பங்கேற்கும் நோக்கில் அவர் அங்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகின்றது.

இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி தலை

19

## யாழ்-இந்தியா கப்பல் சேவை; வணிகர் கழகத்துடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 08
இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பொருட்கள் கொண்டு வருவது தொடர்பில் கப்பல் நிறுவனத்துக்கும் யாழ்.வணிகர் கழகத்திற்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் முப்பத்தி ஐந்துக்கும் அதிகமான ஆயுத இயக்கங்கள் இயங்கிக்கொண்டிருந்தன. அப்போது நகைச்சுவையாக கூறப்படுவது, 'தடக்கி விழுந்தாலும் யாராவது ஒரு இயக்க இளைஞன் மீதுதான் தடக்கி விழவேண்டும்' என்று.

அப்படி பல இயக்கங்கள் இருந்தபோதிலும் அவை எல்லாவற்றினதும் இலட்சியம் ஒன்றுதான். தமிழீழம் என்ற ஒரே இலட்சியத்திற்காகவே எல்லோரும் போராடிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு போராடியவர்களில் பலர் இன்றும் அரசியலில் இருக்கின்றார்கள். ரெலோ, புளொட் மட்டுமல்ல, ஈ. பி. டி. பியின் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி சந்திரகுமார், தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் சுகு சிறிதரன் போன்றவர்களும் தமிழீழத்திற்காக ஆயுதம்தாங்கி போராடியவர்கள்தான்.

தமிழினம் விடுதலை அடையவேண்டும், தமது உரிமைகளைப் பெறவேண்டும் என்று அவர்கள் ஆயுதத்துடன் போராடிக்கொண்டிருந்தபோது அந்தப் போராட்டங்கள் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று கொழும்பிலும் பிற இடங்களிலும் தாமுண்டு தம் வேலையுண்டு என்று இருந்தவர்கள் இன்று தாமே தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்று அரசியலில் முன்னுக்கு நின்று பதவிச்சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அதுவல்ல, இன்று நாம் இங்கு முக்கியமாக சொல்ல வருவது. அப்படி முப்பத்தி ஐந்துக்கு மேற்பட்ட இயக்கங்களும் ஓரணியாக அன்று போராடியிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதை இன்று ஊகிக்கமுடியவில்லை.

ஆனாலும் அவர்கள் ஒரே இலட்சியத்துக்காக போராடிக்கொண்டிருந்தபோதிலும், ஏனோ அவர்களால் ஒன்றிணைய முடியவில்லை.

இப்போதும் நம் மத்தியில் பல்வேறு அமைப்புக்களும் இயக்கங்களும் தினம் தினம் புதிதாக முளைத்துக்கொண்டிருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்னைக்காக போராடுவதற்காக பல இயக்கங்கள் இருக்கின்றபோதிலும் அவர்களின் கோரிக்கை ஒன்றாக இருந்தாலும், ஏனோ அவர்களால் ஓரணியாக செயல்பட முடியவில்லை.

இதேபோலவே அரசியல் கட்சிகளும். ஆனால், என்ன ஒரே வித்தியாசம் அவர்கள் மத்தியில் தமிழர்களின் பிரச்னைக்கு ஒரே தீர்வை முன்வைக்க முடியவில்லை.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

கடைசியாக சில சிவில் சமூக பிரதிநிதிகளும், சில ஆன்மீக தலைவர்களும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை ஒன்று இந்த ஊர்க்குருவியின் பார்வைக்குக் கிடைத்தபோது அதனை வாசித்து அவர்கள் என்னதான் கேட்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

'தமிழ்த் தேசிய இனப்பிரச்னைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தின் கண்காணிப்பின்கீழ் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப் பெற வேண்டும். இதில் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட இனப்பிரச்னைக்கான தீர்வுகள் தெரிவுகளாக உள்ளடக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையிலேயே எந்த முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்'

இதுவே அந்த அறிக்கையின் கடைசிக் கோரிக்கை.

அதாவது, இனப்பிரச்னைக்கு சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வுகளை தெரிவுகளாக கொடுத்து அதில் எது தமிழ் மக்களுக்கு தேவை என்பது குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று ஊகிக்க முடிகின்றது.

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் கேள்வி ஒன்றைக் கேட்டுவிட்டு அதற்காக ஐந்து விடைகளை தருவது போல அல்லாமல், ஐந்தும் சரியான விடையையே தந்துவிட்டு தமிழ் மக்களுக்கு அதில் எது பிடித்ததோ அதனை தெரிவுசெய்வதற்கு வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

பிறகு என்ன? இனப்பிரச்னைக்கு தீர்வாக தமிழ் மக்கள் பிரிந்து தனியரசை அமைக்கலாம், வெளியக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு, உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு, சமஷ்டி கட்டமைப்பு, பதின்மூன்று முழுமையாக அமுல்படுத்துதல் என்று பல தீர்வுகளை தெரிவுகளாக கொடுத்து பொது வாக்கெடுப்பு நடத்த கேட்டிருக்கிறார்கள்.

ஆயுத ரீதியாக தனியரசு ஒன்றுடன், வடக்கு மாகாணத்தை முழுமையாகவும், கிழக்கின் பெரும்பகுதியையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஓர் இயக்கத்தால் கூட பெறமுடியாமல் போனதை-

தனி ஒரு மனிதனாக பாராளுமன்றம் போய், அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தும்போது தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டிய கோரிக்கை இது.

- ஊர்க்குருவி.

# போதைப்பொருளை தடுப்பதற்காக உயர் அதிகாரம் கொண்ட செயலகம்

## பிரதமர் ரணில் நடவடிக்கை

கொழும்பு, ஜன. 08

இலங்கையில் போதைப் பொருள் தடுப்புக்காக பூரண அதிகாரம் கொண்ட செயலகத்தை நிறுவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு திணைக்களத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த செவ்வாய்கிழமை பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

போதைப்பொருள் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியை பலப்படுத்துவதற்காக இந்த விசேட அலுவலகம் நிறுவப்பட உள்ளது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் கீழ் அது தொடர்பான அதிகாரங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் நாட்டுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கும், விற்பனையாளர்களை சிக்க வைப்பதற்கும் தனியான பாதுகாப்புப் பிரிவொன்றை ஸ்தாபித்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கமைய, இது தொடர்பான அதிகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் தலைமையில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## கிளிநொச்சியில் மேலும் 83 பேருக்கு கடலட்டைப் பண்ணைக்கு அனுமதி

கிளிநொச்சி, ஜன. 08



83 கடலட்டை பண்ணையாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பரிவுக்குட்பட்ட வேரவில் இளவங்குடா கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு அனுமதிப் பத்திரங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், பூநகரி பிரதேச செயலாளர் அகிலன், பூநகரி பிரதேச செயலக மற்றும் கடற்தொழில் நீரியல்வள திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள், கடற்தொழிலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட பகுதியை பார்வையிட்டதுடன், பயனாளிகளுடன் கலந்துரையாடினார். (அ)

## 53 ரூபாவுக்கு முட்டை விற்பனை!

கொழும்பு, ஜன. 08

கொழும்பில் உள்ள அனைத்து பொருளாதார நிலையங்களுக்கும் 53 ரூபாவிற்கு முட்டை வழங்கப்படும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அதன் தலைவர் சரத் ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய நேற்று சனிக்கிழமை 8 இலட்சம் முட்டைகள் கொழும்புக்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு இலவசமாக முட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## 23 கிலோ ஹெரோயினுடன் ஐவர் கடற்படையால் கைது

கொழும்பு, ஜன. 08

பல நாள் மீன்பிடிக் கப்பலில் இருந்து 23 கிலோ 235 கிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திற்கு அருகில் உள்ள கடலில் வைத்து குறித்த கப்பலை சோதனையிட்டதில் ஹெரோயின் கையிருப்பு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 33 மற்றும் 42 வயதுடைய மிரிஸ்ஸ, கம்புருகமுவ மற்றும் பிடிகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வெளிநாட்டு கடன் அட்டை மூலம் மோசடி செய்த இளைஞன் கைது!

கொழும்பு, ஜன. 08

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு கடன் அட்டைகளின் தரவுகளைப் பயன்படுத்தி இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை இணையத்தின் ஊடாக கொள்வனவு செய்து மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

18 வயதுடைய சந்தேக நபர் கூலித் தொழிலாளியாக வேலை செய்து சம்பாதித்த பணத்தில் கைத்தொலைபேசியை வாங்கி இணையத்தின் ஊடாக இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் வெளிநாட்டு கடன் அட்டைகள் மூலம் பொருட்களை கொள்வனவு செய்வதாக இணையம் மூலம் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனம் ஒன்று கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தது.

இதன்படி, கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரை கடந்த 5 ஆம் திகதி குருநாகல் தும்மல சூரிய பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது சுமார் 5 இலட்சம் வெளிநாட்டு கடன் அட்டைகளின் தரவுகள் அவரது கணினியில் இருப்பது தெரியவந்துள்ளது.

அந்தத் தரவுகளைப் பயன்படுத்தி, சந்தேகநபர் இலங்கையிலிருந்து இணையம் ஊடாக சுமார் 55 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை ஓடர் செய்து 10 முதல் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவர் பெரும்பாலும் வாசனை திரவியங்கள், அழகுசாதனப் பொருட்கள், வெளிநாட்டு மதுபானங்கள், பல்வேறு உணவுகள் மற்றும் கமராக்கள் மற்றும் கணினி உபகரணங்களை வாங்கியுள்ளார்.

சந்தேக நபர் பொருட்களை கொள்வனவு செய்ய பயன்படுத்திய கடன் அட்டைகள் சுமார் 10 வெளிநாடுகளுக்கு சொந்தமானது எனவும், சர்வதேச ரீதியில் தகவல்களை பெற கடினமாக உள்ள நாடுகளையே அவர் தெரிவு செய்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

18 வயதுடைய சந்தேகநபர் இந்த மோசடியை எவ்வாறு மேற்கொள்வது என்பதை யூரியூப் மூலம் கற்றுக்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# கோட்டாவின் தான்தோன்றித்தனமே அவர் விரட்டப்பட்டமைக்கு காரணம்!

## சுட்டிக்காட்டுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜன. 08

“கோட்டாபய ராஜபக்ஷ வின் தண்னிச்சையான முடிவு களும், அவரின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளுமே அவர் ஜனாதிபதி பதவியிலி ருந்து விரட்டப்பட்டமைக்குப் பிரதான காரணம்.”

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ எம்.பி. தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கோட்டாபய, மக்கள் வழங்



கிய ஆணைக்குச் சிறிதளவும் மதிப்புக் கொடுக்காமல் தான் தோன்றித்தனமாகவே செயற் பட்டார்.

அவரின் தான்தோன்றித்தன மான செயற்பாடுகளை நான் தட்டிக் கேட்டபடியால் எனது அமைச்சுப் பதவியும் பறிபோ னது.

கோட்டாபயவின் இப்படி யான செயற்பாடுகள் இறுதி யில் ராஜபக்ச குடும்பத்துக்கே தலைக்குனிவை ஏற்படுத்தியது மட்டுமன்றி ஒட்டுமொத்த ராஜ பக்ஷக்களும் பதவிகளிலிருந்து விரட்டப்பட்டார்கள்.

ராஜபக்ஷக்களின் கட்சி யுடன் நாம் இனிமேல் கூட் டணி அமைக்கவேமாட் டோம் - என்றார். (அ)

# பட்டதாரி ஆசிரியர்களாக 22,000 பேருக்கு நியமனம்

கொழும்பு, ஜன. 08

பாடசாலைகளுக்கு பட்ட தாரி ஆசிரியர்களை இணைத் துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங் கள் இந்த மாத இறுதியில் கோரப்படவுள்ளன.

இந்த அறிவிப்பை கல்வி அமைச்சு விடுத்துள்ளது.

தற்போது பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள பட்ட தாரிகள் உட்பட அரச சேவை யில் உள்ள 40 வயதிற்குட்பட்ட பட்டதாரிகள் இதற்காக விண் ணப்பிக்க சந்தர்ப்பம் வழங் கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

12,000 ஆசிரியர்கள் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி ஓய்வு பெற்றமையை அடுத்து, தற் போது 22,000 ஆசிரியர்களுக் கான வெற்றிடங்கள் காணப் படுகின்றன.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் மற்றும் அழகியல் ஆகிய பாடங்களுக் கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, போட்டிப் பரீட்சையை விரைவாக நடத்தி ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக புதிய ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்ள திட்டமி டப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பொலிஸ் சார்ஜன்டை துப்பாக்கியால் சுட முயன்ற கான்ஸ்டபிள் கைதானார்

கொழும்பு, ஜன. 08

மிரிஹான சந்தியில் பாது காப்புக் கடமையில் ஈடுபட்டி ருந்த பொலிஸ் சார்ஜன்ட் மீது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ள எத்தனித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் கான்ஸ்ட பிள் நேற்றுக் காலை கடமைக்கு சமூகமளிக்காமை தொடர்பில், பொலிஸ் சார்ஜன்ட் வினவிய போது, இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் வலுப்பெற்ற நிலையிலேயே, பொலிஸ் சார் ஜன்ட் மீது துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ள முயற் சிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மேலதிக வகுப்புக்களுக்கு தடை

கொழும்பு, ஜன. 08

2022 க.பொ.த உயர்தர பரீட் சையை இலக்காகக் கொண்டு பயிற்சி வகுப்புகள் அல்லது மேலதிக வகுப்புகளை நடத்து வது ஜனவரி 17ஆம் திகதிக்குப் பின்னர் தடை செய்யப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடம் சார்ந்த விரிவுரையா ளர்கள், கருத்தரங்குகள் அல் லது வகுப்புகளை ஏற்பாடு செய் தல், நடத்துதல், பரீட்சை சார்ந்த வினாத்தாள்களை அச் சிடுதல், விநியோகம் செய்தல் மற்றும் இலத்திரனியல் ஊட கங்கள் ஊடாக விளம்பரம் செய்தல், பரீட்சைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் இதே போன்ற கேள்விகளை வழங்கு வதாகக் கூறி சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை வழங்கு தல் ஆகியவை தடை செய்யப் பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரி வித்தார். (அ)

# குமார் பொன்னம்பலத்தின் 23 ஆவது நினைவு நிகழ்வு





யாழ்ப்பாணம், ஜன. 08

அரசியல் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் 23ஆவது நினைவேந்தல் நிகழ்வும் நினை வுப் பேருரையையும் நேற்று இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் இவ் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், குமார் பொன்னம் பலத்தின் புதல்வருமான கஜேந் திரகுமார் பொன்னம்பலம் மலர் மாலை அணிவித்து ஈகச் சுடர் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் உறுப்பினர்களும், பொதுமக்களும் குமார் பொன் னம்பலத்தின் திருவுருவ படத் திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தி யிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக நுண் கலைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி க.சிதம்பர நாதன் நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றினார்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் பத்மினி சிதம்பரநாதன், மத குருமார்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக் கள் என பலர் கலந்து கொண் டனர். (அ)

# வங்குரோத்து நிலையால் அதிகரித்துள்ள வறுமை!

## சஜித் பிரேமதாஸ கவலை

கொழும்பு, ஜன. 08

நாட்டில் நிலவும் வங்கு ரோத்து நிலைமையால் வறுமை அதிகரித்துள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

‘பிரபஞ்சம்’ வேலைத்திட்டத்தின் கீழ் 63 ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாட சாலை பஸ் ஒன்று கோட்டை, ஆனந்த மகளிர் கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது: -

பெற்றோர்களால் தமது பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமது நாளாந்த உணவுத் தேவை களைக்கூட பூர்த்தி செய்ய முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

மூவேளை சாப்பிட்டவர்கள் தற்போது இரு வேளையும், இரு வேளை சாப்பிட்டவர்கள் தற்போது ஒரு வேளையும் சாப் பிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடாக எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. நாட்டில் திருப்பு முனை ஒன்று தேவை. அது கல்வித்துறையில் ஏற்படும் மறு சீரமைப்பு சார்ந்த திருப்பு முனையாக இருக்க வேண்டும்.

தற்போது நடைமுறையி லுள்ள கல்விக்கொள்கையை மாற்றியமைக்க வேண்டும். இத னூடாக நாட்டை முதல் நிலைக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டம் உடனே ஆரம்பிக்கப்படவேண்டும்- என்றார். (அ)

# ஒரு டொலருக்கு 2 ரூபாய் ஊக்கத்தொகை நிறுத்தம்

கொழும்பு, ஜன. 08

வெளிநாடுகளில் பணிபுரிபவர்களினால் அனுப்பப்படும் ஒவ் வொரு டொலருக்கும் 2 ரூபாய் ஊக்கத் தொகையை இலங்கையின் மத்திய வங்கி நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முறையான வங்கி வலையமைப்புக்களின் மூலம் பணம் அனுப்பு வதை ஊக்குவிக்க 2021ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

வெளிநாடுகளில் பணி புரியும் தொழிலாளர்கள் சட்டவிரோத மான ஹவாலா அல்லது உண்டியல் முறைகள் மூலம் பணம் அனுப்பியதை அடுத்தே இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் எதிர்பார்த்தபடி வெளிநாடுகளின் தொழிலாளர்கள் பணத்தை வங்கிகளின் ஊடாக அனுப்பப்படவில்லை.

இதனையடுத்தே இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு அமெரிக்க டொலர் அனுப்புதலுக்கும் வழங்கப்படும் 2 ரூபாய் ஊக்கத் தொகையை நிறுத்துமாறு வங்கிகளை மத்திய வங்கி கேட்டுக் கொண்டதாக வங்கி ஒன்றின் அதிகாரி தெரிவித்தார்.

ஊக்கத்தொகையை நிறுத்துவது தொடர்பான மத்திய வங்கியின் உத்தரவு டிசெம்பர் 30ஆம் திகதி கிடைத்துள்ளதாகவும், தமது வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் வங்கி ஒன்றின் அதிகாரி கூறினார். (அ)

# முன்னிலை சோஷலிச கட்சியும் முதன்முறை தேர்தலில் போட்டி

கொழும்பு, ஜன. 08

உள்ளூராட்சிமன்ற தேர்த லில் குமார் குணரத்னம் தலை மையிலான முன்னிலை சோஷ லிசக் கட்சியும் களமிறங்கவுள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களிலும் அக்கட்சி போட்டியிடவுள்ளது.

முன்னிலை சோஷலிசக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின் னர் அக்கட்சி உள்ளாட்சிமன்ற தேர்தலொன்றில் போட்டியி டும் முதல் சந்தர்ப்பம் இதுவா கும்.

போராட்டக்காரர்கள் பலர் முன்னிலை சோஷலிசக் கட்சி யின் சார்பில் போட்டியிடுவ தற்கு திட்டமிட்டுள்ளனர்.

ராஜபக்ஷ ஆட்சிக்கு எதி ராக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பங்கேற்ற தரப்புகளில் முன்னிலை சோஷ லிசக் கட்சி பிரதான இடத்தை வகித்தது. (அ)

# இலங்கை கடன் மறுசீரமைப்பு; இந்தியாவின் பதில் விரைவில்!

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 08

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியாவின் பதிலை இந்த மாத இறுதியில் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவுடனான பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக செய்திப் பணிப்பாளர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி இந்த ஆண்டின் முதல் பாதியில் கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாக இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கிய கடனைத் தள்ளுபடி செய்யுமாறு சீனாவிடம் கோரிக்கை விடுக்கப்படவில்லை என்றும், ஆனால் 20 வருட காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கு சீனாவிடமிருந்து நல்ல பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்ற பின்னர், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கைக்கான நிதியுதவிகள் தொடர்பில் ஏற்கனவே சாதகமாக பதிலளித்துள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார். (அ)

# தேர்தலை பிற்போட அரசு முயன்றால் தடுக்க தயார்!

## அறிவித்தார் அநுரகுமார

கொழும்பு, ஜன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமானால், அதனைத் தடுப்பதற்கு தமது கட்சி அனைத்து நடவடிக்கைகளையும், எடுக்கும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர், தற்போது கருவறையில் உள்ள குழந்தைகூட, இந்த ஆட்சியாளர்களின் செயலுக்கு, இழப்பீடு செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

நிலத்தை முத்தமிடும் போதும், மார்பில் தட்டிக் கொள்ளும்போதும், நாட்டின் மீது அன்பு செலுத்துவதாக சிலர் நினைத்தனர்.

ஆனால், நாட்டின் மீது அன்பு செலுத்துவதாயின், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதையே, உண்மையாக செய்ய வேண்டும் - என்றார். (அ)

# கடந்த ஆண்டில் சுற்றுலாத்துறை மூலம் 1.13 பில்லியன் அமெ. டொலர் வருவாய்

கொழும்பு, ஜன. 08

2022 ஆம் ஆண்டில், சுற்றுலாத்துறை மூலம் 1.13 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் ஈட்டப்பட்டதாக, இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில். 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு, சுற்றுலாத்துறை மூலம், 506.9 மில்லியன் ரூபா வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதன்படி, 2022ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை வருவாய், 124.2 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# தமிழ் கட்சிகளின் ஒருங்கிணைப்பு வேண்டி திருமலையிலும் நேற்றுப் போராட்டம்!



கொழும்பு, ஜன. 08

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக பேரணி ஒன்று இடம்பெற்றது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பபெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டிய பதாதைகளுடனான பேரணியே முன்னெடுக்கப்பட்டது.

இதில் பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டுக் குழுவின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# அமெ. கொரோனா குறித்து இலங்கையில் விழிப்பு நிலை!

கொழும்பு, ஜன. 08

அமெரிக்காவில் தோன்றியுள்ள புதிய எக்ஸ்.பி.பி.1.5 கொரோனா மாறுபாடு குறித்து இலங்கையின் சுகாதார அதிகாரிகள் விழிப்புடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கண்டறியப்பட்ட நாடுகளில் அந்த மாறுபாடு வேகமாக பரவி வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எக்ஸ்.பி.பி.1.5 மாறுபாடு எக்ஸ்.பி.பி தொடரிலிருந்து வந்தது.இது முதலில் அமெரிக்காவில் கண்டறியப்பட்டது.

2022 நவம்பர் முதல் இலங்கையில் எக்ஸ்.பி.பி வரிசை மாறுபாடு கண்டறியப்பட்ட



போதிலும், எக்ஸ்.பி.பி.1.5 மாறுபாட்டை இன்னும் கண்டறியவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அனைத்து நாடுகளிலும் நுழைந்தது போல, அமெரிக்காவிலிருந்து எக்ஸ்.பி.பி.1.5 விரைவில் இலங்கைக்குள் நுழையும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா வரிசைமுறை ஒவ்வொரு மாதமும் தொடர்கிறது என்று ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியல் துறைத் தலைவர் நீலிகா மாளவிகே தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சில நாடுகளில் பரவி வரும் எக்ஸ். பி.பி.1.5 இலங்கையில் இன்னும் கண்டறியப்பட வில்லை என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

புதிய எக்ஸ்.பி.பி.1.5 வகைக்கான அறிகுறிகளாக காய்ச்சல், சளி, இருமல், உடல்வலி, சளி மற்றும் தலைவலி போன்றவை ஏற்படுவதாக நீலிகா மாளவிகே தெரிவித்தார். (அ)

# வடக்கு கிழக்கில் 25 வீத இராணுவ குறைப்பு; அமெரிக்க தமிழ் அமைப்புக்கள் அங்கீகாரம்!

கொழும்பு, ஜன. 08

இலங்கையின் தமிழ்த் தலைவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எந்தவொரு உடன்பாடும் எட்டப்படும் நேரத்தில், 1983 இற்கு முந்திய காலப்பகுதியில் தமிழ்ப் பகுதிகளில் இருந்ததைப் போன்று இராணுவப் பிரசன்னத்தை குறைக்க வேண்டும் என்ற இலங்கையை தளமாகக் கொண்ட தமிழ் சிவில் சமூகக் குழுக்களின் கூட்டு அழைப்பை அமெரிக்காவை தளமாகக் கொண்ட பல புலம்பெயர் தமிழ்க் குழுக்கள் அங்கீகரித்துள்ளன.

அத்துடன் சம்பிரதாயமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழர் பகுதிகளில் இருந்து 25 வீத இராணுவப் பிரசன்னத்தை இலங்கை குறைக்க வேண்டும் என்று இலங்கையின் சிவில் குழுக்கள் கோரியுள்ளன.

இது பேச்சுவார்த்தைக்கு நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

13 வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னரும் தமிழர் பிரதேசங்களில் பாரிய இராணுவ பிரசன்னம் தொடர்கிறது.

1983 ஆம் ஆண்டு முதல் தமிழர் பகுதிகளில் அதிகப்படியான இராணுவக் கட்டியெழுப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய அட்டூழியங்களைச் செய்த அதே துருப்புக்களே பாதிக்கப்பட்டவர்களிடையே நிறுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக ஆய்வு அறிக்கையின்படி, மே 2009 இல் முடிவடைந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் சுமார் எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர்.

குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயினர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பல தீர்மானங்கள் பொறுப்புக்கூறலுக்கு அழைப்பு விடுத்த போதிலும், ஒரு அரசியல் அல்லது இராணுவ உறுப்பினர் கூட நீதியின் முன் நிறுத்தப்படவில்லை என மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்புகள், பாதிக்கப்பட்ட குழுவினர் மற்றும் பலர் அடங்கிய இலங்கைத் தமிழ் சிவில் சமூகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியப் பிரச்னைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேச ரீதியில் நடத்தப்படும் மற்றும் கண்காணிக்கப்படும் வாக்கெடுப்பு மூலம், சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற வேண்டும் என்றும் இலங்கையின் தமிழ் சிவில் குழு வலியுறுத்தியுள்ளது.

இந்தநிலையில் இலங்கையின் தமிழ் சிவில் குழுவின் இந்த கோரிக்கைகளை வட அமெரிக்காவின் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ்ச் சங்கம், தமிழ் அமெரிக்கர்கள் ஐக்கிய அமைப்பு, ஐக்கிய அமெரிக்காவின் தமிழ் செயல் குழு, உலகத் தமிழ் அமைப்பு என்பன அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளன. (அ)

# பல்கலைகளுக்கு 42,000 பேர் பதிவு

கொழும்பு, ஜன.

2021 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 42,000க்கும் அதிகமான மாணவர்கள் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக பல்கலைக் கழகங்களில் பதிவு செய்துள்ளனர்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமான பதிவுக் காலம் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்ததாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

மறுசீரமைப்பு முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என்றும், அந்த முடிவுகள் வெளியானதும், மேலும் 5,000 பதிவுகளை எதிர்பார்க்கிறோம் என்றும் பேராசிரியர் அமரதுங்க குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu
08.01.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தீர்வில் மக்களின் ஈடுபாடு?

அரசியல் தீர்வு தொடர்பில் பலவாறான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. பேச்சுவார்த்தைக்கு சென்றிருப்பது தவறென்றும், அது தவறல்ல - பேசத்தான் வேண்டுமென்றவாறும் பலவாறு பேசப்படுகின்றது. இந்தப் பேச்சுக்களுக்கு மத்தியில் சாதாரண மக்கள் என்ன நினைக்கின்றனர் - அவர்களின் எதிர்பார்ப்புக்கள் என்னவென்பது தொடர்பில் எவரும் கரிசனை காண்பிப்பதில்லை. மக்கள் எப்போதும் போல் அமைதியாகவே இருகின்றனர். எப்போதும் போல் தேர்தல்களின் வாக்களிக்கின்றனர் - மீண்டும் அமைதியாகிவிடுகின்றனர்.

குமார் பொன்னம்பலத்தில் நினைவுக் கூட்டத்தின்போது, பேசிய ஒரு பேராசிரியர், அரசியல்வாதிகள் சுயமரியாதையற்றவர்களென்று பேசியிருக்கின்றார். அவ்வாறாயின் அந்த அரசியல்வாதிகளை தெரிவு செய்யும் மக்களும் சுயமரியாதையற்றவர்களா? அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கொள்கையை கைவிட்டுவிட்டதென்று கூறியே, எஸ்.ஜே.வி.செல்வநாயகம், 1949இல், இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கியிருந்தார். அன்றிருந்து இன்று வரை, தமிழ் மக்கள் எத்தனையோ கோசங்களையும், எத்தனையோ கட்சிகளையும், எத்தனையோ இயக்கங்களையும், அவர்களின் செயற்பாடுகளையும் கண்டுவிட்டனர். ஆனால் அவை எவையுமே நடைமுறையில் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் சாதாரண தமிழ் மக்கள் அரசியல் தீர்வு தொடர்பில் எவ்வாறான அபிப்பிராயங்களை கொண்டிருக்கின்றனர், அவர்கள் உண்மையிலேயே அரசியல் தீர்வு தொடர்பில் அக்கறை கொண்டிருக்கின்றனரா - அப்படியான அக்கறையிருப்பின், அவர்கள் எவ்வாறானதொரு அரசியல் தீர்வின் மீது ஆசை கொண்டிருக்கின்றனர்?

இந்தக் கேள்வியினடிப்படையில் அரசியல்வாதிகளும் சிந்திப்பதில்லை, சிவில் சமூகமென்போரும் சிந்திப்பதில்லை. யுத்த காலத்தை தவிர்த்தாலும், கடந்த பதின்மூன்று வருடங்களில் மக்கள் மத்தியில் அரசியல் உரையாடல்கள் இடம்பெறவில்லை. மக்கள் அரசியல் ரீதியில் அறிவூட்டப்படவில்லை. ஒரு வகையில் மக்கள் அரசியல் ரீதியில் விழிப்பற்றவர்களாக இருப்பதே அரசியல்வாதிகளின் பலமாகவும் இருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை தொடர்ந்து, மீளவும் சமஷ்டி தொடர்பில் பலவாறான உரையாடல்கள் இடம்பெறுகின்றன. அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டத்துக்குள் தீர்வை முடக்கப் போவதான கதைகளும் தாராளமாக கூறப்படுகின்றது. இவ்வாறான கதைகள் எவற்றையுமே மக்கள் பொருட்படுத்துவதாக தெரியவில்லை. ஆனால் மக்கள் தேர்தல்களில் வாக்களிப்பதை கொண்டு, மக்கள் தங்களின் கொள்கையை ஆதரிப்பதாக ஒவ்வொரு கட்சிகளும் கருதிக்கொள்கின்றன அல்லது அவ்வாறு காட்சிப்படுத்த முயற்சிக்கின்றன. ஆனால் மக்களோ கட்சிகளின் கொள்கையடிப்படையிலோ அல்லது கட்சிகளின் தேர்தல்கால கோசங்களின் அடிப்படையிலோ வாக்களிக்கவில்லை. மாறாக, தமிழ் உணர்வினடிப்படையிலேயே வாக்களிக்கின்றனர்.

சாதாரண மக்களை பொறுத்தவரையில் முதன்மையானது பாதுகாப்பு. அந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய சூழல். தங்களின் கருமங்களை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான சூழல் மற்றும் பொருளாதார ரீதியில் சூமூகமான வாழ்வு. இவைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளுக்கு என்ன பெயரை வைத்தாலும் அது மக்களைப் பொறுத்தவரையில், ஒரு பிரச்னையேயில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், இருக்கின்ற மாகாண சபை முறைமையின் ஊடாக இந்த விடயங்களை முன்னெடுப்பதாயின், அது மக்களை பொறுத்தவரை ஒரு பிரச்னையில்லை. எனவே மக்கள் சமஷ்டி தொடர்பிலோ, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலோ முட்டி முறியவில்லை. ஆகக் குறைந்தது அது பற்றி அலட்டிக் கொள்ளவுமில்லை. இது பற்றி தேவையின்றி, சண்டையிடுபவர்கள், முட்டிமோதிக் கொள்பவர்கள், 13 எதிர்ப்பு ஊர்வலம் செய்பவர்கள் அனைவருமே அரசியல் கட்சிகளேயன்றி, மக்கள் அல்லர்.

அரசியல் தீர்வு தொடர்பில் புதிதாக விவாதிக்க ஒன்றுமில்லை. கடந்த 74 வருடங்களாக, போதியளவு விவாதித்தாகிவிட்டது. எனவே இப்போது தேவையானது, மக்களின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய, அரசியல் ஏற்பாடுகளாகும். இன்றைய சூழலைப் பொறுத்தவரை, அரசியலமைப்பிலிருக்கின்ற விடயங்களை முழுமையாக அமுல்படுத்தி, அதனை நடைமுறைப்படுத்துவதிலுள்ள குறைபாடுகளை சீர்செய்வதன் மூலம் முன்னோக்கி பயணிக்க முடியும். ஆனால் இதிலுள்ள பிரச்னை அதனை செய்வதாயினும் தமிழ்க் கட்சிகள் தந்திரோபாயமாக செயலாற்ற வேண்டும். வெளியாரின் ஆதரவு கட்டாயம்.

# றொனால்டோவுக்காக சவூதியின் திருமணச் சட்டத்தில் தளர்வா?

சவூதி அரேபிய சட்டப்படி திருமணம் ஆகாமல் சேர்ந்து வாழ்வது சட்டவிரோதம் என்றாலும், அங்கு றொனால்டோ தனது காதலியோடு லிவ்-இன் உறவில் இருப்பது பேசுபொருளாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, நட்சத்திர உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ சவூதி அரேபியாவின் அல்-நாசர் கழகத்துக்கான தனது முதல் போட்டியில் விளையாடுவதற்கு இன்னும் காத்திருக்கவேண்டியுள்ளது.

இங்கிலாந்து உதைபந்து சம்மேளனம், றொனால்டோ இரண்டு போட்டிகளில் விளையாடத் தடை விதித்துள்ளது. அவர் சவூதிக்கான தனது முதல் போட்டியை சவூதி ப்ரோ லீக் கழகமான அல்-தாய்க்கு எதிரான ஆட்டத்தில் விளையாடவிருந்தார்.

ஆனால், அவர் விளையாடவில்லை. சுமார் 1700 கோடி ரூபாய் சம்பளத்தோடு, 2025ஆம் ஆண்டு வரை சவூதியுடன் றொனால்டோ ஒப்பந்தம் செய்துள்ளார். அவ்வளவு சம்பளத்திற்கு ஒப்பந்தமாகியும் அவர் ஏன் விளையாடவில்லை? றொனால்டோ முன்பு மன்செஸ்டர் யுனைடெட் கழகத்தில் விளையாடி வந்தார்.

கடந்த திங்கட்கிழமையன்று, சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத் சென்றடைந்த அவருக்கு அங்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. அதற்கு அடுத்த நாள், அல்-நாசர் கழக மைதானத்திலும் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

றொனால்டோ தனது புதிய கழகத்தை சேர்ந்த வீரர்களுடன் பயிற்சியில் பங்கேற்றார். அவர் ஜனவரி 6ஆம் திகதி முதல் போட்டியில் விளையாடுவார் என்று அல்-நாசர் முழு நம்பிக்கையுடன் இருந்தது. இந்தப் போட்டிக்காக சுமார் 28,000 ரிக்கெட்டுகள் வரை விற்பனையாகின.

ஆனால், நவம்பர் மாதம் இங்கிலாந்து உதைபந்து சம்மேளனத்தால் அவர் இரண்டு போட்டிகளில் விளையாடக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டதாக அதற்குப் பிறகுதான் அல்-நாசர் கழகத்துக்கு தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஒரு போட்டியில் நிகழ்ந்த சம்பவத்தைத் தொடர்ந்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

றொனால்டோ அவருடைய ரசிகர்களில் ஒருவருடைய கைபேசியை தட்டிவிட்டது அதற்குக் காரணமாக சொல்லப்பட்டது.

**தடை விதிக்கப்பட்டது ஏன்?**

றொனால்டோ கைபேசியைத் தட்டிவிட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் ஆட்டிசம் குறைபாடு கொண்டவர். ஆட்டிசம் குறைபாடு இருக்கும் ஒருவருடைய கைபேசியைத் தட்டிவிட்டதற்கு றொனால்டோ மன்னிப்பு கேட்டிருந்தார். ஆனால், அந்த ரசிகர் மன்னிப்பை ஏற்க மறுத்துவிட்டார்.

மன்செஸ்டர் யுனைடெட் அணி, அந்தப் போட்டியில் 0-1 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. போட்டி முடிந்த பிறகு றொனால்டோ, உதைபந்து வீரர்கள் செல்வதற்காக அமைக்கப்பட்ட சுரங்கப்பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு சிறுவனின் கையிலிருந்த கைபேசியை, சிறுவனின் கைகளைக் கடுமையாகத் தட்டியதன் மூலம் கீழே விழவைத்தார்.

இந்தச் சம்பவத்திற்காக றொனால்டோவை பொலிஸாரும் எச்சரித்தனர். அதற்குப் பிறகு அவர் சமூக ஊடகத்தில் மன்னிப்பும் கேட்டார். ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் நடந்த ஒரு போட்டியைக் காண்பதற்கு அந்த ரசிகருக்கு அழைப்பும் விடுத்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் பேசியபோது, “இக்கட்டான சூழ்நிலையில் நம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது எளிதல்ல. ஆனால், இதையெல்லாம் மீறி இந்த அழகான விளையாட்டை விரும்பும் இளைஞர்களுக்காக மரியாதையான வழியைக் கடைப்பிடித்து நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும்,” என்று கூறினார்.

ஆட்டிசம் குறைபாடுடைய 14 வயதான ஜாக், றொனால்டோவின் வாய்ப்பை நிராகரித்தார். அவர் தெரிவித்த மன்னிப்பைக்கூட ஏற்கவில்லை.

உலகக்கிண்ண உதைபந்து போட்டியின் காரணமாக அவரைத் தடை செய்ய முடியவில்லை. அதனால்தான் இப்போது அவர் தனது புதிய கழகத்தில் அந்தத் தடையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

கிறிஸ்டியானோ றொனால்டோவும் அவருடைய காதலி ஜோர்ஜினா ரோட்ரிக்கஸும் திருமணம் செய்துகொள்ளாமல் லிவ்-இன் உறவில் வாழ்ந்து வருகின்றனர். சவூதி அரேபிய சட்டப்படி இது தவறு. அந்நாட்டுச் சட்டப்படி, ஒரே வீட்டில் திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்வது சட்டவிரோதமானது.


இருப்பினும், றொனால்டோவும் அவருடைய காதலியும் இதற்காக அதிகாரிகளால் தண்டிக்கப்படப் போவதில்லை என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்பானிய செய்தி நிறுவனமான ஈ.எவ்.ஈ, றொனால்டோ உலகின் மிகவும் பிரபலமான விளையாட்டு வீரர்களில் ஒருவராகவும் வெளிநாட்டவராகவும் இருப்பதால் அவர் தண்டிக்கப்பட வாய்ப்பில்லை எனத் தெரிவித்துள்ளது.

றொனால்டோவுக்கும் ரோட்ரிக்கஸ/க்கும் இரண்டு குழந்தைகள் உள்ளனர். மேலும் றொனால்டோவுக்கு இரட்டையர்கள் உட்பட மூன்று குழந்தைகள் உள்ளனர்.

இரண்டு சவூதி வழக்கறிஞர்களை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி தெரிவித்துள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி தெரிவிக்கிறது. அதன்படி, றொனால்டோவின் இந்தச் சூழ்நிலைக்குள் அதிகாரிகள் ஈடுபட மாட்டார்கள் என்று சட்ட வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். ஒரு வழக்கறிஞர், “திருமண ஒப்பந்தம் இல்லாமல் இணைந்து வாழ்வதை சட்டம் தடை செய்தாலும், அதிகாரிகள் யாரையும் துன்புறுத்தாமல் இருக்கத் தொடங்கியுள்ள னர். இந்த சட்டங்கள், நிச்சயமாக பிரச் னையோ குற்றமோ நிகழும்போது பயன்படுத் தப்படுகின்றன,” எனத் தெரிவித்ததாக அந்தச் செய்தி கூறுகிறது.

மற்றொரு வழக்கறிஞர், “சவூதி அரேபிய அதிகாரிகள், வெளிநாட்டவர்கள் விடயத்தில் இதுபோன்றவற்றில் தலையிடுவதில்லை. ஆனால், சட்டம் திருமணம் ஆகாமல் சேர்ந்து வாழ்வதைத் தடை செய்கிறது,” என்று குறிப்பிட்டுள்ளார். (பி.பி.சி)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# சாவித்திரிபாய் புலே - சவாலை எதிர்கொண்டவராக....

பகிர்வு -63

கணபதி சர்வானந்தா

இன்றைய தேடலில் எனக்குக் கிடைத்தொரு நல்ல விடயம்.

இந்தியாவிலேயே பெண் குழந்தைகளுக்கான முதல் பள்ளிக்கூடத்தைத் திறந்தவர் பற்றியது. வட இந்தியா பூனே மாநிலத்தில் பள்ளியைத் திறந்து, வகுப்புகளும் எடுத்த முதல் ஆசிரியர் என்ற பெருமைக்குரியவர் சாவித்திரிபாய் புலே.

அப்போ, பழமைவாதிகளும் மேல்சாதியினரும் சாவித்திரிபாய் கல்விப் பணி செய்வதைக் கடுமையாக எதிர்த்தனர். அவர் மீது சேற்றினையும், மலத்தினையும் வீசிப் பல தொல்லைகள் செய்தனர். தினமும் பள்ளி செல்லும்போது பழைய ஆடைகளோடு சென்று பின் வேறோர் சேலை அணிந்து கொள்வார். பல துன்பங்களுக்கு இடையில் கல்விப் பணியாற்றினார்.

இவர் 1831 இல் மராட்டிய மாநிலத்தில் உள்ள சதாரா மாவட்டத்தில் நைகான் என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அக்கால வழக்கப்படி 1840 இல் அவரது 9 ஆவது வயதில் 13 வயது ஜோதிராவ் புலேவை மணந்தார். அவரே தனது துணைவியான சாவித்திரிபாயை ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் இணைத்துக் கொண்டவர்.

விதவைப் பெண்களின் தலையை மொட்டையடிப்பதைக் கண்டித்து நாவிதர்களைத் திரட்டி, 1863 ஆம் ஆண்டு மிகப் பெரிய போராட்டத்தினைச் சாவித்திரி பாய் நடத்தினார். 1870ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தினால் அனாதைகளான 52 குழந்தைகளுக்கு உறைவிடப் பள்ளியை நடத்தினார். 1897 இல் ஏற்பட்ட பிளேக்கு தொற்று நோயால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளிப்பதற்காக, சாவித்திரிபாய் புலேயும் அவரது வளர்ப்பு மகனும் மருத்துவருமான யஷ்வந்தும் இணைந்து ஒரு மருத்துவமனையை அமைத்தனர். புனேக்கு அருகிலுள்ள சாசனே மலா என்ற ஊருக்கு வெளியே தொற்றுநோய் பாதிப்புக்கு உட்படாத இடத்தில் அம்மருத்துவமனை இருந்தது. நோயினால் பாதிக்கப்பட்டவர்களை அம்மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெறச் செய்தவர் சாவித்திரிபாய் . அப்பணியின்போது அவருக்கும் நோய்த் தொற்று ஏற்பட்டு மார்ச் 10, 1897 இல் இறந்துபோனார்.

சாவித்திரிபாய் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களில் ஒன்றாக இதனைப் பகிர்ந்திருக்கிறார்.

ஒரு நாள் அவர் வீட்டை விட்டு வெளியில் வந்தார். சுற்றிலும் ஒருமுறை பார்த்தார். விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தார். நான்கு வீடுகளைக் கடந்திருப்பார். மாடியிலிருந்து ஒருவர் வாளி நிறைய குளிர்ந்த நீரை எடுத்து சாவித்திரி மீது கொட்டினார். அது வெறும் நீர் அல்ல, அழுக்கும் சேறும் கலந்த சாக்கடை என்பது சாவித்திரிக்குத் தெரிந்தது. தொடர்ந்து நடந்தார். ஒரு வளைவில் திரும்ப முயன்றபோது, சாணியை அள்ளி சிலர் சாவித்திரிமீது வீசினார்கள்.

அப்போதும் சாவித்திரி நிற்கவில்லை. நின்று என்ன பலன்? அவர்களிடம் சென்று முறையிட முடியுமா? உதவிதான் கேட்க முடியுமா? ஐயா, கொஞ்சம் தண்ணீர் கொடுக்க முடியுமா என்று யாராவது ஒருவரின் வீட்டுக் கதவைத் தட்டினால் என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்? ‘அச்சச்சோ, என்ன ஆச்சு சாவித்திரி? இரு, தண்ணீரும் சோப்பும் கொண்டுவருகிறேன்’ என்று அவர்கள் பதறவா போகிறார்கள்?

மாறாக, அவர் மீது சீறுவார்கள். “வீட்டுக்குள் அடங்கிக் கிடக்க வேண்டியதுதானே? நீ கெட்டது போதாது என்று ஊரில் இருக்கும் குழந்தைகளையும் கெடுக்கிறாயா? குப்பத்துப் பெண்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து என்ன சாதிக்கப் போகிறாய்?” என்று திட்டுவார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

அவர்கள் வீட்டில் உள்ள பெண் குழந்தைகளுக்கும் சேர்த்துதானே நான் போராட வேண்டியிருக்கிறது? விறுவிறுவென்று நடந்து சென்ற சாவித்திரி பள்ளிக்கூடத்தை நெருங்கினார். உள்ளே சென்று, தண்ணீரை எடுத்துத் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டார். கையோடு கொண்டுவந்திருந்த மற்றொரு புடவையை அணிந்து கொண்டார். பிறகு வகுப்பறைக்குள் நுழைந்தார். மொத்தம் ஐந்து மாணவிகள் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் சாவித்திரியின் முகத்தில் புன்னகை ஒட்டிக்கொண்டது.

”இன்று ஆசிரியரை நீங்கள் கேள்வி கேட்கும் நாள். நீங்கள் எல்லாம் தயாரா?” என்றபடி நாற்காலியில் அமர்ந்துகொண்டார் சாவித்திரி. அதற்காகவே காத்திருந்ததுபோல் ஒரு சுட்டிப் பெண் கையை உயர்த்தினார்.

“நீங்கள் என்னைப்போல் இருக்கும்போது எந்தப் பள்ளியில் படித்தீர்கள்? “பிறகு எப்படி ஆசிரியர் ஆனீர்கள்?”

உன்னைப்போல் இருக்கும்போது எனக்கு அ, ஆ. கூடப் படிக்கத் தெரியாது. பள்ளிக்கூடத்துக்கு சிறுமிகளும் போகலாம் என்றுகூட எனக்குத் தெரியாது. காலை முதல் மாலைவரை வீட்டு வேலைகளில் மூழ்கிக் கிடப்பேன். உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்று முதல்முறையாக என்னைக் கேட்டவர், என் கணவர் ஜோதிராவ் புலே. வீட்டைக் கவனித்துக்கொள்வதுதான் உன் வேலை என்று யார் சொன்னார்கள் என்று கேட்டார். வீட்டு வேலையைவிட வீட்டுப் பாடம் எளிதானது, வா என்று அன்றே வகுப்பைத் தொடங்கிவிட்டார். முதல் முறையாக பென்சிலை எடுத்து தாளில் எழுதிய அனுபவம் இருக்கிறதே, அடடா! அதைவிடப் பெரிய மகிழ்ச்சி வேறு கிடையாது.படிக்கக் கற்றுக்கொண்ட பிறகு பள்ளிக்கூடம் தவிர, வேறு சிந்தனைகளே இல்லை. இப்போதுதான் உனக்கு நன்றாக எழுதவும் படிக்கவும் தெரியுமே. நீயே ஏன் ஒரு பள்ளியைத் தொடங்கக் கூடாது என்றார் ஜோதிராவ். அப்புறம் என்ன? இதோ, நான் ஆரம்பித்து நடத்தும் பதினெட்டாவது பள்ளிக்கூடம் இது. நீ ஒரு பெண், உனக்கு எதற்குப் படிப்பு என்றோ, நீ தீண்டத்தகாதவள் உனக்குப் படிப்பு தேவையில்லை என்றோ இனிமேல் யார் யாரையும் சொல்லக் கூடாது. அதுதான் என் ஆசை. - எனப் பதிலளித்ததாகப் பதிவு உண்டு.

# இந்தவார ராசிபலன் 08.01.2023 - 14.01.2023

ஜனவரி 08 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 24

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : துவிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சந்திரன் நன்மைகளை வழங்குவார். முருகன் வழிபாடு முன்னேற்றம் தரும். பெரும்பாலான கிரகங்கள் பாதகமாக சஞ்சரித்தாலும் சந்திர பலத்தால் உங்கள் முயற்சி வெற்றி அடையும். அரசு வழியில் லாபம் உண்டாகும். உங்கள் எண்ணம் ஈடேறும். வருமானம் அதிகரிக்கும். சனிக்கிழமை வரை நினைத்ததை சாதிப் பீர். உங்கள் செயல்களில் வேகம் இருக்கும். நீண்ட நாள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

கேது, சுக்கிரன், குரு நன்மைகளை வழங்குவர். மகாலட்சுமியை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும். சனிக்கிழமை வரை விருப்பம்போல் செயல்படுவீர். வருமானம் குறித்த சிந்தனை அதிகரிக்கும், குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர். ஞாயிறு முதல் உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். திட்டமிட்டு செயல்படும் வேலைகளில் ஆதாயம் உண்டாகும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வெள்ளி,சனியில் செலவு அதிகரிக்கும். உங்கள் எண்ணம்போல் செயல்படுவீர். ஞாயிறு முதல் வருமானம் அதிகரிக்கும். நினைத்ததை சாதிப்பீர். செவ்வாய் முதல் செயல்களில் தெளிவு ஏற்படும். சனிக்கிழமை வரை புதிய முயற்சி வேண்டாம். செயல்களில் கவனம் தேவை. அதன்பின் உங்கள் விருப்பம் நிறைவேறும், ஞாயிறு முதல் சிந்தித்து செயல்பட நன்மை அதிகரிக்கும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். வாரத்தின் முதல் இரண்டு நாட்கள் சங்கடமாக இருந்தாலும் அதன்பின் நிலைமை சீராகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பெரும்பாலான கிரகங்கள் உங்களுக்கு சாதகமான நிலையில் இல்லை என்றாலும் ஆறாமிட சூரியனால் ஆற்றல் அதிகரிக்கும். வெள்ளி, சனியில் செலவுகள் தோன்றும். ஞாயிறு முதல் நிலைமை சீராகும். வருமானம் அதிகரிக்கும். செயல்களில் வெற்றியாகும். கவனமாக செயல்பட்டு நன்மைகள் அடைய வேண்டிய வாரம். பாக்கிய குருவால் உங்கள் எண்ணங்கள் ஈடேறும். சனிக்கிழமை வரை விரய சந்திரனால் செலவு அதிகரிக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

வெள்ளி, சனியில் உங்கள் முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும், தொழில் உத்தியோகத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். ஞாயிறு, திங்களில் செலவு அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தாமதப் படுத்துவது நல்லது. தடைகளைத் தாண்டி உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் செயல்களை செய்து லாபம் காண்பீர்கள். ஞாயிறு,திங்களில் வீண் செலவு உண்டாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பெரும்பாலான கிரகங்கள் உங்களுக்கு சாதகமாக இல்லை என்றாலும் குரு பலத்தால் உங்கள் செயல் வெற்றியாகும். அரசு வழியிலான முயற்சி நன்மையாகும். தடைபட்டிருந்த வருமானம் வரத் தொடங்கும். செவ்வாய் முதல் எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும் வாரம் இது. முயற்சிகள் பலன் தரும். புதிய சொத்துகள் வாங்குவீர்கள். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வராமல் இருந்து வந்த பணம் வந்து சேரும். செவ்வாய் முதல் செலவு அதிகரிக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

கடந்த வார சங்கடம் விலகும். லாபாதிபதி சூரியனால் உங்கள் எண்ணம் நிறைவேறும். தடைபட்டிருந்த வேலை நடைபெறத் தொடங்கும். திட்டமிட்டு செயல்படுவதால் லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயல்படுவதால் நன்மையை காண்பீர்கள். சந்திர சஞ்சாரம் உங்களுக்கு சாதகமாக இருப்பதால் உழைப்பிற்கு ஏற்ற வெற்றியை அடைவீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். வியாபாரம் விரிவடையும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சனிக்கிழமை வரை உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் சிறு சிறு சங்கடம் அதிகரிக்கும். மனதில் குழப்பம் உண்டாகும். நெருக்கடிகள் விலகி நன்மை ஏற்படும். புதிய முயற்சி லாபமாகும். வெள்ளி, சனியில் செயல்களில் குழப்பம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் இழுபறி ஏற்படும். கவனமுடன் செயல்படுங்கள். ஞாயிறு முதல் நிலைமை மாறும். உங்கள் விருப்பம் நிறைவேறும். தடைபட்டிருந்த வருமானம் வரத் தொடங்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

வெள்ளி,சனியில் உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். அதன்பின் சந்திராஷ்டமம் தொடங்குதால் புதிய முயற்சியில் சங்கடம் தோன்றும். செயல்களில் இழுபறி உண்டாகும். செவ்வாய் முதல் நிலைமை சீராகும். வெள்ளி, சனியில் திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை உண்டாகும். பணவரவு அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பெரும்பாலான கிரகங்கள் சாதகமற்ற நிலையில் இருந்தாலும் சந்திர பலத்தால் உங்கள் முயற்சிக்கேற்ப நன்மை அடைவீர்கள். எதிரிகள் தொல்லை அகலும். வாரத்தின் கடைசி மூன்று நாட்களிலும் செயல்களில் கவனம் தேவை. உங்கள் முயற்சி வெற்றியாகும் வாரம் இது, குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவைக்கேற்ற வருமானம் வந்து சேரும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. புதிய முயற்சி வெற்றியாகும். சுறு சுறுப்புடன் செயல்பட்டு நினைத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அரசு வழியிலான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர். நன்மைகள் அதிகரிக்கும் வாரம் இது. குடும்பத்தினர் உதவியுடன் நினைத்ததை அடைவீர். தடைபட்டிருந்த செயல்களை முடிப்பீர். புதிய இடம் வாங்கும் முயற்சி பலிதமாகும். உங்கள் ஆற்றல் வெளிப்படும் வாரம். துணிச்சலுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பெரும்பாலான கிரகம் சாதகமற்ற நிலையில் சஞ்சரித்தாலும் லாபஸ்தான சனியும் சந்திரனும் நன்மைகளை வழங்குவர். துணிச்சலுடன் செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். உங்கள் முயற்சி பலிதமாகும். வருமானத்தில் இருந்து வந்த தடை அகலும், லாப சனியால் உங்கள் பிரச்னைகள் விலகும், எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்கள். பொருளாதார நிலை உயரும். நீங்கள் ஈடுபடும் செயல்களில் நன்மை உண்டாகும்.

# மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில் ஜனவரி 8-10 பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாடு

## இலங்கையில் இருந்து இருபது கோபியோ பேராளர்கள்



**காயத்ரி விக்கிரமசிங்க**
கொழும்பு மாநகரசபை உறுப்பினர்

வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் “பிரவாசி பாரதிய திவாஸ்” (Pravasi Bharatiya Divas) அமைப்பின் 17 வது மகாநாடு ஜனவரி 2023 8ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலத்தின் இந்தூர் நகரில் நடைபெறவிருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சும் மத்தியப்பிரதேச மாநில அரசாங்கமும் இணைந்து நடத்தும் இந்த மகாநாட்டின் தொனிப்பொருள் “புலம்பெயர் சமூகம் நற்காலத்தில் இந்தியாவின் முன்னேற்றத்துக்கான நம்பகமான பங்காளர்கள்“ (Diaspora ; Reliable Partners for India's Progress in Amrit Kaal) என்பதாகும். நற்காலம் (அம்றிற் கால்) என்பது அடுத்த 25 வருடங்கள் மீது கவனத்தைச் செலுத்துகிறது. இந்த சொல்லை முதலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2021 அக்டோபரில் பயன்படுத்தினார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா கீதாராமன் பாராளுமன்றத்தில் 2022 - 2023 மத்திய பட்ஜெட்டை சமர்ப்பித்தபோது “அம்றிற் கால்” சொல்லைப் பயன்படுத்தினார். அடுத்த 25 வருடங்களை குறிப்பிடுவதற்கு இந்த சொல் பொதுவில் பயன்படுத்தப்படுகிறது.

இரு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் “பிரவாசி பாரதிய திவாஸ்” மகாநாடு இந்திய அரசாங்கத்துடனான வெளிநாட்டு இந்திய சமூகத்தின் ஊடாட்டத்தை பலப்படுத்துவதற்கும் தங்களது வேர்களுடன் அவர்களை மீள இணைப்பதற்கும் உதவுகிறது.

தெரிவுசெய்யப்பட்ட இந்தியர்களுக்கு இந்த மகாநாட்டின்போது கீர்த்திமிகு “பிரவாசி பாரதிய சம்மான்” விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய பங்களிப்புகளை அங்கீகரித்து கௌரவிப்பதற்கே இந்த விருது வழங்கப்படுகிறது.

இதுவரையில் ஸ்ரீகிருக்ஷ்ணா கோர்ப்பரேசன் தலைவரும் கார்சன் குழுமத்தின் பணிப்பாளருமான மனோ செல்வநாதன் அவர்களே இந்த விருதைப் பெற்ற இலங்கையராக விளங்குகிறார். அதனால் தங்களது துறைகளில் சாதனைகள் படைத்த மேலும் பல இலங்கையர்களுக்கு விருது வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு வலியுறுத்தியவர்களில் மலையக மக்கள் முன்னணியின் காலஞ்சென்ற தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் குறிப்பிடத்தக்கவர். இப்போது அதன் தலைவர் வி.இராதாகிருஷ்ணன் அவ்வாறு கோரிக்கை விடுத்துவருகின்றார்.

இத்தடவை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் கோபியோ இலங்கை அமைப்பின் தலைவருமான சிவகுமார் நடேசன் அவர்களுக்கு “பிரவாசி பாரதிய சம்மான்” விருது வழங்கப்படவிருக்கிறது.

இந்தூர் மகாநாட்டில் பங்குபற்றும் பேராளர்கள் ஜனவரி 26 நடைபெறவிருக்கும் இந்திய குடியரசு தினக்கொண்டாட்டங்களிலும் பங்கேற்க வாய்ப்பிருக்கிறது.

மகாநாட்டின் முதல் நாள் “இளைஞர் பிரவாசி பாரதிய திவாஸ்” வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரினால் ஆரம்பித்து வைக்கப்படும். தொடக்கவுரையை மத்திய இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் அநுராக் சிங் தாகூர் நிகழ்த்துவார். மத்தியப்பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகானும் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் சனீட்டா மஸகாரினாஸூம் கௌரவ அதிதிகள் என்ற வகையில் சிறப்புரைகளை நிகழ்த்துவர். இந்த ஆரம்ப கூட்டத்தொடரில் “புத்தாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்பவியலில் புலம்பெயர் இந்திய சமூக இளைஞர்களின் வகிபாகம்” குறித்து கலந்துரையாடப்படும்.

இந்தியாவின் மென்சக்தியைப் பயன்படுத்துதல், சிறு தொழில்கள், உணவு தயாரிப்பு மற்றும் படைப்பாற்றல் ஊடாக நல்லெண்ணத்தை பரப்புதல் ,இந்திய தொழிற்படையின் உலகளாவிய நகர்வை மேம்படுத்துதல் - புலம்பெயர்ந்த இந்தயர்களின் பங்கு, தேசத்தின் கட்டமைப்பில் அனைவரையும் உள்வாங்கும் அணுகுமுறை ஊடாக புலம்பெயர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்களின் வலுவாற்றலை பயன்படுத்திக்கொள்ளல் ஆகிய தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் கௌரவ அதிதியாக கலந்துகொள்ளும் சூரினாம் குடியரசின் ஜனாதிபதி சந்திரகிபெர்சாட் சன்டோக்கியும் பிரதம அதிதியான கயான கூட்டுறவு குடியரசின் ஜனாதிபதி கலாநிதி முஹமட் இர்ஃபான் அலியும் உரை நிகழ்த்துவார்கள்.

முக்கிய உரையை இந்தியாபிரதமர்

Pravasi Bharatiya Divas
Ministry of External Affairs
Government of India

மோடி நிகழ்த்துவார். அதை தொடர்ந்து “இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு புலம்பெயர் இந்திய சமூகத்தின் பங்களிப்பு” என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியை பிரதமர் திறந்து வைப்பார்.

இரண்டாம் நாளின் முதற் கூட்டத்தொடர் “இந்திய சுகாதாரப்பராமரிப்பு, அம்றிற் கால் மற்றும் நோக்கு 2047 மேம்படுத்தலுடன்” தொடர்புடைய விவகாரங்களை கையாள ஒதுக்கப்பட்டுள்ளது.

மாலை நேர கூட்டத்தொடரில் ஜி 20 நாடுகளின் இந்திய தலைமைத்துவம் குறித்து ஆராயப்படும். ஜி 20 தலைமை என்ற வகையில் இந்தியாவின் உலகளாவிய அணுகுமுறை பற்றி ஜி 20 பிரதம ஒருங்கிணைப்பாளர்களான ஹர்ஷ்வர்தன் சிறிங்லாவும் அமாதாப் காந்தும் உரையாற்றுவர்.

பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிவரும் வெளிநாட்டு இந்தியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் இந்தியாவுடனான தொடர்புகளையும் இந்தியாவின் புகழையும் மேம்படுத்தவும் இந்திய வம்சாவளி மக்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள். முன்னெனென்றும் இல்லாதவாறு இந்திய மத்திய அரசின் கவனம் அண்மைக்காலமாக வெளிநாடுகளில் சிறப்பாக பணியாற்றும் இந்திய வம்சாவளியினர் மீது திரும்பியிருக்கிறது. 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டில் இறுதியாக நடைபெற்ற மகாநாடுவரை 269 வெளிநாட்டு இந்தியர்கள் விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இறுதிநாள் 2023 பிரவாசி பாரதிய சம்மான் விருதுகள் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவினால் வழங்கப்படும். பிரியாவிடை உரையையும் அவரே நிகழ்த்துவார்.

குமார் நடேசன் தலைமையில் இந்திய வம்சாவளி மக்கள் மகாசபையின் ( Global Organisation of People of Indian Origin ) கோபியோ இலங்கைப்பிரிவின் இருபது பேராளர்களைக் கொண்ட குழு 17 வது பாரவாசி பாரதிய திவாஸ் மகாநாட்டில் பங்கேற்கிறது. இந்த மகாநாட்டை தொடர்ந்து பல வரப்பிரசாதங்கள் விருதுகள் பலருக்கு கிடைக்க வாய்ப்பிருப்பதாக வெளிநாடுவாழ் இந்திய பிரசைகளின் இலங்கை உறுப்பினர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

உலகளாவிய ரீதியில் வாழும் 2 கோடி 80 இலட்சம் இந்திய வம்சாவளி மக்க ளின் நலவுரிமை களையும் அபிலாசைகளையும் மேம்படுத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இந்தியர் விவகாரங்களைக் கவனிக்க வென்று தனியான பிரிவை அமைத்துச் செயற்படுத்தி வருகிறது. மத்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர் விவகாரத் துறை வெளியிட்டிருக்கும் புள்ளி விபரத் தின் படி, உலகெங்கிலுமுள்ள 208 நாடு களில் ஏறத்தாழ 3.32 கோடி இந்தியர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 70% பேர் ஒன்பது நாடுகளில் இருப்பதாகப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அமெரிக்கா (46.6 லட்சம்), சவூதி அரேபியா (40 லட்சம்), மலேசியா (24 லட்சம்), ஐக்கிய அரபு அமீரகம் (28லட்சம்) என்று வெளிநாடுவாழ் இந்தியர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள், அவர்கள் குடியேறிய நாடுகளை மேம்படுத்தி இருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், அந்த நாடுகளில் தங்களது ஆளுமையை நிலைநாட்டியும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 11 நாடுகளில், 28 இந்திய வம்சாவளியினர் அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். சிங்கப்பூரின் நாயர், நாதன், மோரீக்ஷஸ் தீவின் பிரவீண் ஜகந்நாத், மலேசியாவின் மகாதீர் முகமது, போர்ச்சுகல் நாட்டின் அந்தோனியோ போஸ்டோ, நெதர்லாந்தின் லியோ வரத்கர் என்று ஒரு மிகப்பெரிய பட்டியலே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் எத்தனையோ இந்திய வம்சாவளியினர் பல்வேறு நாடுகளில் அமைச்சர்களாகவும், அரச உயர் பதவிகளிலும், ராஜ தந்திரிகளாகவும், நீதிபதிகளாகவும் இருந்திருக்கிறார்கள். சுமார் 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 25க்கும் அதிகமான மாநகர மேயர்கள் என்று 20க்கும் அதிகமான நாடுகளில் இந்திய வம்சாவளியினர் பதவி வகித்திருக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள பின்தங்கிய சமூகங்களின் கல்வி,பொருளாதார மேம்பாட்டுக்கான பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வெளிநாடுகளில் வாழும் இந்திய இளம் தலைமுறையினர் தமது பண்பாடுகளைப் பற்றி தெளிவாக அறிந்துகொள்ளும் நோக்கிலும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பல திட்டங்களைச் செயற்படுத்திவருகிறார்.

இந்திய அரசு பல சந்தர்ப்பங்களில் இலங்கையில் வாழும் சுமார் பதினாறு இலட்சம் இந்திய வம்சாவளி மக்களை இலங்கைத் தமிழர்களுடன் இணைத்துப் பார்த்து இரு சாராரையும் ஒன்றாகக் கணிக்க முற்பட்டது. இந்த தவறான அணுகுமுறை பற்றி பல தடவைகள் இந்திய மத்திய அரசிடம் நமது முன்னாள் தலைவர்களான அமரர்கள் சௌமியமூர்த்தி தொண்டமான் பெரியசாமி சந்திரசேகரன் மற்றும் பி.பி. தேவராஜூம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இலங்கைத் தமிழர்களை மதிக்கின்ற அதேவேளை எமது தனித்துவத்தை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும் என்பதோடு பிரதமர் மோடி அவர்களின் வழிநடத்தலின் கீழ் நடைபெறும் வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் 17 வது பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாடு உலகளாவிய பரந்து வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நலன்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி சமூகத்தவர்கள் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் போது இந்திய தூதரகத்தினால் கோரப்படும் ஆவணங்கள் பலவற்றை அவர்களால் சமர்ப்பிக்க முடியாமல் உள்ளது. மறுவார்த்தைகளில் சொல்வதானால் அவர்களால் முடியாத ஆவணங்களை தூதரகம் கோருகிறது. இது விடயத்தில் தூதரகம் கவனம் செலுத்தி இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம். இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் நலன்களில் மிகுந்த அக்கறையுடன் கவனம் செலுத்தி பல செயற்திட்டங்ளை முன்னெடுத்துவரும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இது விடயத்திலும் கருத்தூன்றிய கவனத்தைச் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தங்கள் தாய் நாட்டிற்கு உதவ வேண்டும், தங்கள் தொப்புள் கொடி உறவு தொடர வேண்டும் எண்ணத்துடன் வாழ்கின்றனர். இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவளியினருக்கும் மற்றைய நாட்டில் வாழ்கின்ற இந்திய வம்சாவளியினருக்கும் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன. சுதந்திர இலங்கையில் சுமார் ஐம்பது ஆண்டுகள் நாம் நாடாற்றவர்களாக வாழ்ந்திருக்கின்றோம். எமது அரசியல் உரிமையை இழந்திருக்கின் றோம். அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்த ஒரு சமூகத்தினை மேம்படுத்த வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

# மகிந்தவிடம் சம்பந்தன் விடுத்த வேண்டுகோள்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளுடன் ஒப்பிடும்போது தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்ற முயற்சிகள் ஒரு முக்கியமான வித்தியாசத்தைக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் அரசாங்கங்களின் அரசியல் தீர்வு முயற்சிகளை எதிர்க்கட்சிகள் சீர்குலைத்ததே வரலாறு. அரசாங்கங்கள் அந்த முயற்சிகளை எந்தளவுக்கு இதய சுத்தியான அக்கறையுடன் முன்னெடுத்தன என்பது வேறு விடயம்.

தற்போதைய முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகளிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பவில்லை. ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வையும் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்ற சிங்கள கடும்போக்கு தேசியவாதிகளின் கட்சிகளையும் தவிர, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் கடந்த மாதம் ஜனாதிபதி விக்கிரமசிங்க கூட்டிய மகாநாட்டில் கலந்துகொண்டன.

வீரவன்சவும் கம்மன்பிலவும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளில் குறைந்த பட்சமானவற்றைக்கூட ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாதவர்கள். அவர்கள் மகாநாட்டைப் புறக்கணித்ததை புரிந்துகொள்ளமுடியும். ஆனால், ஜே.வி.பி. நிச்சயம் கலந்துகொண்டிருக்க வேண்டும்.

கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு நாட்டு மக்கள் மத்தியில் குறிப்பாக தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் செல்வாக்கு கணிசமானளவுக்கு அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், ஆட்சிப் பொறுப்பை ஒரு தடவை தங்களிடம் கையளித்துப் பாருங்கள் என்று பிரமாண்டமான பேரணிகளை நடத்தி மக்களிடம் கோரும் அதன் தலைவர்கள் நாடு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளில் பங்கேற்று தங்கள் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தத் தவறக்கூடாது.

தற்போதைய பாராளுமன்றம் மக்களின் ஆணையை இழந்துவிட்டது என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடு. அதனால் தான் அதன் தலைவர்கள் முன்கூட்டியே பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். அவ்வாறு மக்கள் ஆணை இல்லாத பாராளுமன்றத்தினால் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதனால் அவரின் அதிகாரத்துக்கு ஒரு நியாயப்பாட்டைக் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காகவே ஜே.வி.பி. தலைவர்கள் மகாநாட்டில் பங்குபற்றவில்லை என்று சில அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

எது எவ்வாறிருந்தாலும், பல வருடங்களுக்கு பிறகு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காண்பதற்காக கூட்டப்பட்ட அந்த மகாநாட்டில் பங்கேற்று ஜே.வி.பி.அதன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அவர்களின் புறக்கணிப்பு காரணம் கூற முடியாதது மாத்திரமல்ல, மன்னிக்கவும் முடியாதது என்பது ஒரு அவதானியின் அபிப்பிராயம்.

ஜே.வி.பி. அதன் வரலாற்றில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்தே வந்திருக்கிறது. அத்தகைய எதிர்மறையான ஒரு வரலாற்றை தற்போதைய அதன் தலைவர்கள் மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தை காலம் வேண்டிநிற்கிறது. தீர்வு முயற்சிகளுக்கு தென்னிலங்கை மக்கள் மத்தியில் கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி.யினால் பெருமளவுக்கு பங்களிப்பைச் செய்யமுடியும்.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாச மகாநாட்டில் பங்கேற்று தனது ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்திருந்தார். அதேவேளை மாகாணசபைகளை அறிமுகப்படுத்திய அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தாங்கள் பூரண ஆதரவு என்றும் அவர் ஏற்கெனவே அறிவித்திருந்தார். ஜே.வி.பி.யும் கூட அந்த

> **போரின் முடிவுக்குப் பிறகு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு கிடைத்த அரிய வாய்ப்பை அலட்சியம் செய்த முன்னாள் ஜனாதிபதி குறைந்தபட்சம் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேனும் உதவுவதற்கு கிடைத்திருக்கும் தற்போதைய வாய்ப்பையும் தவறவிடுவாரா?**

திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக கிளர்ந்தெழும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதனால், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தற்போதைய முயற்சிகளுக்கு பாராளுமன்ற எதிரணியிடம் இருந்து ஒத்துழைப்பு தொடர்ந்து கிடைக்கும் என்று நம்பலாம். அதேவேளை, சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் நலன்களுக்கும் விரோதமான பெரும்பான்மையினவாத நிலைப்பாட்டுகளைக் கொண்ட ராஜபக்சாக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற பலத்தின் அடிப்படையில் தனது ஆட்சியை நடத்திய வண்ணமே ஜனாதிபதி இனப்பிரச்சினையை குறுகிய காலத்திற்குள் தீர்ப்பதற்கு முயற்சிகளில் இறங்கியிருக்கியிருப்பதை காண்கிறோம்.

ஜனாதிபதியாக அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்னரான ஐந்து மாதங்களுக்கும் சற்று அதிகமான காலப்பகுதியில் இதுவரையில் அவரின் நிகழ்ச்சி நிரல்களுக்கு பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிவந்திருக்கிறது. ஆனால், இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளைப் பொறுத்தவரை பாராளுமன்றத்தின் செயன்முறைகள் தேவைப்படும் கட்டத்தில் அவர்கள் எவ்வாறு செயற்படுவார்கள் என்ற ஒரு கேள்வி எழுகிறது.

அதேவேளை, சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொள்கின்ற சக்திகளுடன் ஒருபோதுமே தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளாத சிங்கள தேசியவாதிகளான பிரதமர் தினேஷ் குணவர்தனவும் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் தற்போது தீர்வு முயற்சிகளில் ஜனாதிபதிக்கு உதவியாக செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டுக்கு புறம்பாக, தமிழ்க் கட்சிகளுடன் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் விக்கிரமசிங்க தனியாக நடத்தும் பேச்சுவார்த்தைகளில் இவர்கள் இருவரும் கலந்துகொள்கிறார்கள்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக சிங்கள தேசியவாத சக்திகளின் நிலைப்பாடுகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்திருக்கும் குணவர்தனவும் விஜேதாசவும் தங்களின் முன்னைய போக்கை மாற்றிக்கொண்டுவிட்டார்களா அல்லது அவர்கள் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு எந்த எல்லைவரை ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்ற கேள்விகளும் எழுகின்றன.

எவ்வாறிருப்பினும், கடந்த கால தீர்வு முயற்சிகளுக்கு தொடக்கத்தில் இருந்தே எதிரணியிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியதைப் போன்ற சூழ்நிலையை ஜனாதிபதியின் தற்போதைய முயற்சிகள் எதிர்நோக்குவதாக இல்லை.

அரசியல் கட்சிகளுக்கு அப்பால் பிக்குமார் உட்பட சிங்கள பௌத்த கடும் தேசியவாத சக்திகள் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளுக்கு எதிராக முன்னரங்கத்தில் நின்று செயற்பட்டு வந்ததே வரலாறு. ஆனால், தாங்கள் முழுமையாக ஆதரித்து மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவந்த ராஜபக்சாக்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்து மக்களை முன்னென்றும் இல்லாத துன்பங்களுக்கு உள்ளாக்கியிருக்கும் சூழ்நிலையில் அந்த சக்திகள் தற்போது பெருமளவுக்கு தலைகாட்டாமல் இருக்கின்றன. அவர்கள் சமூகங்கள் மத்தியில் குரோதங்களை ஏற்படுத்தும் தங்களது நச்சுத்தனமான பிரசாரங்களை முன்னெடுக்க வாய்ப்பான தருணத்துக்காக காத்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகையதொரு பின்புலத்தில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த வாரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் விடுத்த வேண்டுகோளை நோக்கவேண்டியிருக்கிறது.

முதுமை காரணமாக தளர்ந்து போயிருக்கும் சம்பந்தனை சுகம் விசாரிப்பதற்காகவே மகிந்த அவரைச் சந்தித்திருக்கவேண்டும். தீர்வு முயற்சிகள் தொடர்பாக பேசுவதற்கென்றே அவர் கூட்டமைப்பின் தலைவரின் வாசஸ்தலம் தேடி வந்தார் என்றா எதிர்பார்க்கமுடியும்?

இன்று இருக்கக்கூடிய மூத்த அரசியல் தலைவர் என்ற வகையில் சம்பந்தன் மீது மகிந்த ஒரு மரியாதையை வைத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. சம்பந்தனும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் பேணுவதைப் போன்ற நெருக்கமான நல்லுறவை மகிந்தவுடனும் நீண்டகாலமாக பேணிவருகிறார். அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அத்தகைய உறவைப் பேணக்கூடிய பக்குவம் சம்பந்தனிடம் இருக்கிறது.

ஜனாதிபதியின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சம்பந்தன் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளித்த மகிந்த பேச்சுவார்த்தைகளினபோது ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அரசியல் தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதை ஆராய்ந்து உரிய நிலைப்பாட்டை எடுப்பதாகவும் தெரிவித்ததாக செய்திகள் கூறின.

பேச்சுவார்த்தையின் இறுதியில் வகுக்கப்படக்கூடிய தீர்வுத்திட்டத்தை ஆராயாமல் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளிப்பது என்பது கடினமான விடயம் என்றும் அவர் கூறியிருக்கிறார். தீர்வுத்திட்டத்தின் அம்சங்களைப் பொறுத்தே ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் ஆதரவு அமையும் என்பதே அதன் அர்த்தம்.

மகிந்தவைப் பொறுத்தவரை, ஜனாதிபதியாக பதவிக்கு வருவதற்கு முன்னர் இனப்பிரச்சினை குறித்து அவர் பெரிதாக பேசியதில்லை. 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை எதிர்த்துப் போட்டியிட்டபோது அந்த காலப்பகுதியில் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை முன்னிறுத்தியே சிங்கள மக்களிடம் அவர் வாக்கு கேட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தனது முதலாவது பதவிக்காலத்தில் போரை முழுவீச்சில் முன்னெடுத்து விடுதலை புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்த பிறகு போர் வெற்றியின் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு கிடைத்த பேராதரவை தனது குடும்ப அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கே மகிந்த முழுமையாகப் பயன்படுத்தினார். போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பிறகு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டிய அவசியம் இல்லை என்பதே அவரின் வெளியில் சொல்லாத நிலைப்பாடாக இருந்தது.

அரசியல் தீர்வொன்றைக் கண்டு சமூகங்கள் மத்தியில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு வரலாறு மகிந்தவுக்கு அரிய வாய்ப்பொன்றை வழங்கியது. ஆனால், அதை அவர் வேண்டுமென்றே அலட்சியம் செய்த அவர் பெரும்பான்மையினவாத அரசியலை தீவிரமாக முன்னெடுப்பதன் மூலமாக தனது குடும்பத்தை பல தசாப்தங்களுக்கு ஆட்சியதிகாரத்தில் வைத்திருக்கலாம் என்று கனவு கண்டார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# கவனிக்கப்படுமா சிவில் சமூகங்களின் குரல்?



மாலினி அஜந்தன்







ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முன்னெடுப்பின் கீழ் நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றமையை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது

விமர்சனங்களைத் தாண்டி பூகோள அரசியல் நெருக்குவாரங்களால் தமிழ்த் தரப்போடு பேசவேண்டிய ஒரு இக்கட்டுக்குள் தற்போதைய அரசாங்கம் தள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் பயன்படுத்துவதென முடி வெடுத்து விட்டன. அதனால்தான் சர்வ கட்சிக் கூட்டம் முதற்கொண்டு அதற்குப் பின்னரான கலந்துரையாடல்கள் என தமிழ்த் தேசியக் கட்சிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்புக்கள் சமகாலத்தில் வெளியாகினாலும், முதலில் வரப்போகின்ற பேச்சுவார்த்தை தொடர்பிலேயே தமிழ்த் தேசியக் கட்சிகளும், ஏனைய பொது அமைப்புக் களும் அதீத கரிசனை காட்டிவருகின்றன எனலாம். கட்சிகள் எப்போதும் தமது தேர்தல் நலன்களில் நின்று இந்த விவகாரத்தை கையாள முயன்றாலும், சிவில் சமூகங்களிடமிருந்து குறித்த பேச்சுவார்த்தை தொடர்பான அக்கறை தற்போது பலமாக எழ ஆரம்பித்திருக்கின்றது.

சர்வகட்சி கூட்டத்திற்கு முன்னராக யாழ்ப்பாணத்தில் சிவில் சமூக பிரதிநிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக அமர்ந்திருந்து ஒரு கலந்துரையாடலை நடாத்தியிருந்தனர். அந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்திருக்கக்கூடிய அழைப்புத் தொடர்பில் அனைவரும் வெளிப்படையாகப் பேசினர். 2009ம் ஆண்டிற்கு பின், தமிழ் தரப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் பேச்சு மேசைகளைப் பிரதிநிதித்துவம் செய்து வரும் முறைமையிலும், கட்சிகளும், தனிநபர்களும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அஞ்சல் கோலை தனித்து எடுத்துச் செல்வதற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைப்பதான செயற்பாடாகவே இது முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதாவது பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தொடர்பில் ஒரு கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்ற வாதம் இதன்போது எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தக் கட்டமைப்பில் சிவில் சமூகப் பிரநிதிகளின் உள்ளடக்கம் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தது.

டிசம்பர் 11ஆம் திகதி நடந்த அந்த யாழ் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவரிடம், அந்தச் சந்திப்பிற்குப் பின்னரான செயற்பாடுகள் எந்தளவுக்குள்ளது என டான் ரிவியின் 'நெற்றிக்கண் நிகழ்ச்சியில் கேள்வி எழுப்பியபோது, “அதிலே பல கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பலர் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்த பிரதிநிதிகள் பாராளுமன்றில் இல்லாத சில கட்சிகளின் தலைவர்கள் பங்கெடுத்திருந்தனர். ஆனால் பெருமளவுக்கு பாராளுமன்றத்தோடு சேர்ந்து, இந்த அரசியலோடு பயணிக்க வேண்டிய மிக முக்கியமான தரப்புக்கள் அந்த சந்திப்பில் கலந்துகொள்ளமல் இருந்தது ஒரு தவிர்க்க முடியாத பதிவுதான். அத்தகைய பதிவுகளுக்குப் பின்னால், இந்தப் பேச்சுவார்த்தையை தமிழ்த் தரப்பாக அணுகுவதற்குவதற்கான ஒரு பின்புலத்தை பேச்சுவார்த்தைக்கு இடைப்பட்ட காலத்தில் கொண்டிருக்காது என்பதை தமிழ்த் தரப்பே தன்னுடைய அணுகுமுறைக்கூடாக காட்டிவிட்டது. எமக்கு ஒரு விடயம் தெளிவாகிறது. இந்த விடயத்தை தமிழர்கள் ஒரு தரப்பாக எதிர்கொள்வது என்பதும், தென்னிலங்கை ஒரு தரப்பாக இந்த விடயத்தைக் கையாள்வது என்பதும் மிக முக்கியமானவொன்று. இந்த இரண்டு தரப்பும் அந்த மாதிரியான அணுகுமுறைகளைக் கடந்து, அரசியல் கட்சிகளுக்கு இடையிலான உரையாடலாக இதனைக் கையாளவே திட்டமிடுகின்றன. இதை தென்னிலங்கையிலும் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது. அது மட்டுமல்லாது 13ஐ மீள அமுல்படுத்துதல் என்ற உரையாடலைத் தவிர, வேறு எந்த வாய்ப்புக்கள் குறித்த பரிசீலனையை பெருமளவு முன்வைப்பதற்கான சூழலைக் காணவில்லை. வெளிப்படையாகத் தெரிகின்ற விடயம் என்னவெனில், இது நீண்ட நெருக்கடிச் சூழலை தன்னுடைய நலன்களுக்கு ஏற்ற வகையில் கையாளுகின்ற செயற்பாடேயன்றி, முழுமையான ஒரு தீர்வைக் குறித்துடைய அம்சம் அதாவது மக்கள் சார்ந்து, சமூக அமைப்புக்கள் சார்ந்து, சிவில் அமைப்புக்கள் சார்ந்து, அவற்றினுடைய எண்ணங்கள், கருத்துக்கள் சார்ந்து இந்த உரையாடலினுடைய பக்கங்களை முதன்மைப்படுத்தப்பட வேண்டிய தேவையும் கவனம்கொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கின்றது என்ற செய்தியும் தவிர்க்க முடியாத பதிவாகவே எனக்குத் தோன்றுகின்றது.

35 வருடங்களிற்குப் பின்னரும் 13ஆவது திருத்தத்தை மையப்படுத்திய நகர்வுகளை தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்க முயல்வது ஒரு அரசியல் வறுமையாகவே தோன்றுகின்றது. எல்லைப்படுத்தப்பட்ட தேர்தலும், தேர்தலை நோக்கிய கட்சிகளுடைய நகர்வுகளும் அதைத் தாண்டி தமிழரின் அரசியலை பிரதிபலிக்க தயாராக இருக்கவில்லை என்பதும் அவதானத்துக்குரியது“ எனக் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்துடனான பேச்சுமேசைகளில் சிவில் அமைப்புக்களின் பங்கேற்பை ஆழமாக வலியுறுத்தி வரும், மூத்த நிர்வாக அதிகாரியும், சமூக பொருளாதார அரசியல் ஆய்வாளருமான இரேனியல் செல்வின், இது குறித்துக் குறிப்பிடுகையில் “இந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளப்போகின்றோம் என்பது முதன்மையாது. பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டது இலங்கை சோசலிசக் குடியரசின் நாடாளுமன்ற அங்கத்துவக் கட்சிகள். அரசியல் கட்சிகள் தமது எம். பிக்களைக் கூட்டிச் செல்வார்கள். மறுபக்கத்தில் பேசப்படுவது இன்னும் தடுமாற்றமாகவே உள்ளது. ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின்பேரில் பேசப்போகின்றவர்கள் கட்சி சார்பாகப் பேசப்போகிறார்களா?, தேசிய விடுதலைக்காக போராடிய இனம் சார்பாக பேசப்போகிறார்களா? என்ற கேள்வியெழுகிறது. விடுதலைக்காகப் போராடிய இனம் சார்பாக விட்டுக் கொடுக்காது பேசி சரியான முடிவொன்றை எடுக்க வேண்டும் என்றால், அங்கு அற ஒழுக்கம் ஒன்று வேண்டும். மூன்று நாட்களும் பேசுவீர்கள், நான்காம் நாள் அவர்களோடு நாடாளுமன்றத்தில் உறவாடுவீர்களாயின் அங்கு ஒரு தெளிவற்ற தன்மையேற்படும். பேச்சுவார்த்தையில் எந்த இடத்தில் விட்டுக்கொடுக்க வேண்டும், எங்கு விட்டுக்கொடுக்க முடியாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். இங்கே எல்லா விதத்திலும் தெளிவற்ற நிலைமையையே காணுகின்றோம். நாங்கள் எந்த விடயத்திலும் கவனமாக இருக்க வேண்டும், நாங்கள் இப்பொழுது இலங்கை அரசுடன் ஒரு விடயத்தில் அமர்கின்றோம் என்றால், அது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியல் கட்சிகளின் பேரம்பேசல், அபிவிருத்தி பற்றி விடயம் அல்ல. நாங்கள் 75 வருடங்களாக கடந்து வந்த பயணத்தின் ஒரு அங்கம்தான் இது. பேச்சுவார்த்தைக்கு முன்னர் மரதன் பேச்சுவார்த்தை இடம்பெறப்போவதாகக் கூறினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் மரதன் பேச்சுவார்த்தை இடம்பெறும்போது இரு தரப்பும் பேச்சுவார்த்தை சார் விடயங்களோடு இருந்தார்கள். ஆனால் இங்கே என்ன நடக்கப்போகிறது? மரதன் பேச்சுவார்த்தை என்றுவிட்டு என்ன செய்யப்போகின்றோம்? பேச்சுவார்த்தை எனக் கூறிவிட்டு நாங்கள் எங்களுக்குள்ளே, சரியான கலந்துரையாடல்களைச் செய்து என்ன திசையில் பேச்சுவார்த்தையை முன்னகர்த்தப் போகின்றோம்? எத்தகைய தெரிவுகள் அங்கிருந்து வரப்போகின்றன? அதில் எவற்றை எவற்றை நாங்கள் வரவேற்கலாம்? போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டதா என்றால் கேள்விக்குறிதான். யாரோ ஒன்று இரண்டு பேர் மட்டும் பேச ஏனையோர்கள் கைகட்டி நிற்பதாக இந்தப் பேச்சுவார்த்தை அமையக்கூடாது. பின்னர் வெளியே வந்து அவர்கள்தான் கதைத்தார்கள் எங்களுக்கு நேரம் தரவில்லை என்று கூற முடியாது. எனவே ஆயத்தம் என்பது முக்கியமானது. அங்கு பேசப்படுவது என்ன என்பது பொதுமக்களுக்குத் தெரிய வேண்டும். பரந்த வெளியில் தெரியாவிட்டாலும், பொதுமக்கள் சார்ந்த தங்களை நிலைப்படுத்தக்கூடிய சிவில் சமூக பிரதிநிதிகளுக்குத் தெரிய வேண்டும். ஏனென்றால் ஒரு தலைப்பட்சமாக அரசியல் தலைவர்கள் மட்டும் கட்சி அரசியல், தேர்தல் அரசியல் மூலம் அரசியல் மூலதனங்களைக் கட்டியெழுப்பியவர்கள். அவர்கள் பேசுவதை நாங்கள் ஏற்பதற்கோ, நம்புவதற்கோ தயாரில்லை. எனவேதான் நாங்கள் சொல்லுகின்றோம். உறுதியாக நாங்கள் நகர வேண்டும். இது எங்களுக்கு ஒரு விஷப்பரீட்சை. நாங்கள் பேச வேண்டும். எந்தக் கட்டத்திலும் பேசக்கூடாது என்பதல்ல. பேச்சுவார்த்தை மூலம் ஏதோவொரு நகர்விற்குக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் மீண்டும் ஏமாறாக் கூடாது. பேச்சுவார்த்தையில் அடையக்கூடிய அடைவுகள், வெறுமனே ஐந்து வருடங்களுக்கானவையா என்ற கேள்வியை ஆழமாக எழுப்பவேண்டும் என்பதும் இங்கு முக்கியமானது“ என்று கூறியிருந்தார்.

இதேவேளை பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரெழுச்சி இயக்கத்தின் சார்பில், அரசுடனான பேச்சுவார்த்தை விவகாரத்தில் சிவில் சமூக அமைப்புக்களின் பங்களிப்புக்கள் குறித்து இப்பத்திக்காகக் கருத்து வெளி யிட்டிருந்த கிழக்கு மாகாண இணைப் பாளர் சபா. சிவயோகநாதன், “அரசியல் கட்சிகளுக்கும், சிவில் சமூகங்களுக்கும் இடையே நீண்ட இடைவெளி காணப்படுகிறது. மக்களின் கருத்துக் களை பிரதிபலிப்பதாகவே சிவில் சமூக தலைவர்களின் கருத்துக்கள் உள்ளன. ஆகவே பேச்சுவார்த்தையில் சிவில் சமூகத்தினர் இணைக்கப்பட வேண்டும் என்பது முதன்மை விடயம். அத்தோடு சிவில் சமூகங்களை ஒருங்கிணைத்து ஒரு தலைமையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதும் முக்கியமானது. இந்த இரண்டு விடயங்களும் நடைபெற வேண்டும். மக்களுடைய எண்ணங்கள் சம்பந்தமாக தற்கால அரசியல் மற்றும் கடந்த கால வரலாறுகள் அனைத்தும் கருத்தில்கொள்ளப்பட வேண்டுமாக இருந்தால்,

சிவில் சமூகப் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பில் இணைக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பு உள்ளிட்ட சில திணைக்களங்களங்களின் எல்லைமீறிய செயற்பாடுகள் பேச்சுக்குச் செல்வதற்கே இடையூறாக உள்ளது. சிவில் சமூகங்கள் சில நிபந்தனைகளை முன்வைத்து அரசாங்கம் அவற்றை நடைமுறைப் படுத்தினால்தான் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டும். சிவில் சமூகங்கள் ஒரு தலைமையின் கீழ் விரைவில் ஒன்று கூடி இந்த விடயங்கள் தொடர்பில் கட்சிகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். அதற்காக சிவில் சமூகங்களை ஒருங்கிணைக்கும் ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். முதற்கட்டமாக இந்தக் காரியங்களை ஆற்றக்கூடிய செயற்குழுவொன்றை நாம் ஸ்தாபிக்கவுள்ளோம். இதற்காகப் புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்து இணக்கம் காணப்பட்டுள்ளது. விரைவில் அனைவரும் ஒரு மேசையில் அமர்ந்து முதற்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பேசவுள்ளோம். அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைக்கு முன்னர் ஒரு இறுக்கமான முடிவை அறிவிப்போம்“ என்றார்.

எது எவ்வாறிருப்பினும் 75 வருடங்களாகப் புரையோடிப்போயுள்ள தமிழர் இனப்பிரச்சினைத் தீர்விற்காக இறுதி யுத்தத்தின் பின்னர் சில அரசியல் அணுகுமுறைகள் கையாளப்பட்டிருப்பினும் அவை எந்தளவிற்கு வெற்றியளித்திருக்கிறது என்பதைப் பேச்சு மேசைக்குச் செல்லும் தமிழ்த் தேசியக் கட்சிகள் சரியாக அடையாளம் காணவேண்டியது மிக அவசியமானது.

ஈழநாடு



# நிச்சயமற்ற உள்ளூராட்சி தேர்தல்களும் நம்பிக்கையற்ற பேச்சுவார்த்தைகளும்!

**பனங்காட்டான்**

இந்த மாதம் இருபதாம் திகதியுடன் ஜனாதிபதிப் பதவியின் முதல் ஆறு மாதங்களைப் பூர்த்தி செய்யவுள்ள ரணில் விக்கிரமசிங்க, தமது பதவிக் காலத்தின் முக்கிய திருநாளாக பெப்ரவரி மாதம் 4ம் திகதியை எதிர்பார்த்திருக்கிறார்.

அன்றைய தினம் தாம் நிகழ்த்தப்போகும் உரை, தேசிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய வேண்டுமென்ற இலக்குடன், அரசியல் சதுரங்கத்தில் மிக லாவகமாக காய்களை நகர்த்துகிறார். தந்திரநரி, குள்ளநரி, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியல் சுவீகார வாரிசு என்ற பல பட்டங்களின் சொந்தக்காரரான ரணில், தமது 73 வயதில்தான் தமக்குத் தெரிந்த சகல வித்தைகளையும் சோதித்துப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

இந்த வித்தைகளை அவரது ராஜதந்திரமாகப் பார்த்து சிலர் புல்லரிக்கின்றனர். வைரத்தை வைரத்தால் வெட்டுவதுபோன்று இவரது சூழ்ச்சிகளை சூழ்ச்சியால் வெட்டலாமெனவும் சிலர் நம்புகின்றனர்.

ஆறரை தசாப்தங்களுக்கு மேலாக ஒப்பந்தங்கள், இணக்கப்பாடுகள், பேச்சுவார்த்தைகள், நம்பிக்கைகளால் ஏமாற்றப்பட்ட ஓரினம் இப்போதும் ஏமாற்றப்படுகிறோம் என்பதைத் தெரிந்து கொண்டும் (எமக்கு நம்பிக்கையில்லாமல்தான் ஜனாதிபதியுடன் பேச்சில் பங்குபற்றுகிறோம் என்று கூட்டமைப்பின் சுமந்திரன் இந்த மாதம் ஐந்தாம் திகதி குறிப்பிட்டதை கவனிக்கவும்) 'சதுரமேசை'க் கூட்டத்தில் இணைந்து கொள்வது அவசியமா?

கடந்தகால கசப்பான அனுபவங்கள் நிகழ்கால ஓட்டத்துக்கு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது. நல்லாட்சிக் காலத்தில் அதிகாரபூர்வ எதிர்கட்சியாக இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும், அதன் தலைவர் சம்பந்தனையும், பேச்சாளர் சுமந்திரனையும் ரணில் எவ்வாறு தமது தந்திர வலைக்குள் வீழ்த்தி, கடந்த பொதுத்தேர்தலில் கூட்டமைப்பை ரசாயன சோதனைக் குளத்துள் தள்ளி, உருவழித்து சேதப்படுத்தினாரென்பது பழங்காலக் கதையன்று. நிகழ்காலப் பாடம்.

இலங்கை அரசியலை அவர் எவ்வாறு இன்று கையாளுகிறார் என்பதை ஆழ்ந்து கூர்ந்து பார்க்க வேண்டும். வடக்கு தமிழர் பிரச்சனையை தீர்க்க அவர்களின் பிரதிநிதிகளுடன் பேசப்போவதாகச் சொன்னவர், பின்னர் நாடாளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து சர்வகட்சிக் கூட்டமாக மாற்றினார். 'அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வு' என்ற அவரது கோட்பாட்டுக்கு இது முற்றிலும் பொருத்தமானது.

அதன் பின்னர் கூட்டமைப்பின் தலைவரையும் பேச்சாளரையும் மட்டும் சந்தித்துப் பேசினார். இது உத்தியோகபூர்வ பேச்சல்ல என்று ஜனாதிபதி செயலகம் பின்னர் அறிக்கை விட்டது. கடந்த ஐந்தாம் திகதி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் சேர்த்து சந்திப்பு நடத்தினார்.

இது ஒருபுறமிருக்க, நாட்டின் 340 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் சுமார் எண்ணாயிரம் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறப்போவதான அறிவிப்பு வெளியானது. இன்னும் நிச்சயமற்ற நிலையிலுள்ள இத்தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் வேலை மும்முரமாக இடம்பெறுகிறது. வேட்பாளர் நியமனங்கள் இம்மாதம் 18 முதல் 21ம் திகதிவரை ஏற்கப்படவுள்ளது.

இந்தத் தேர்தல் அறிவிப்பானது சகல அரசியல்கட்சிகளையும் குழப்பத்துக்குள் தள்ளியுள்ளது. முக்கியமாக, தமிழர் தரப்பே இதனால் பெரிதும் நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தலை தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுபட்டு சந்திக்க வேண்டுமென்ற குரல் மேலோங்கி நிற்கிறது.

சி.வி.விக்னேஸ்வரன், என்.சிறீகாந்தா, சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோர் ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று கடந்த பொதுத்தேர்தலில் அதற்குச் சவாலாக நின்றவர்கள். இப்போது இவர்களுடன் கூட்டமைப்பின் பங்காளிகளான புளொட் மற்றும் ரெலோ தலைவர்களும் சேர்ந்து கூட்டமொன்றை நடத்தி புதிய கூட்டமைப்பொன்றை உருவாக்கி தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை அதன் தலைவராகப் பிரேரித்துள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தலை நோக்கியே புதிய கூட்டமைப்பின் தலைவராக, ஏற்கனவேயுள்ள கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழரசின் தலைவர் பிரேரிக்கப்பட்டுள்ளதுதான் இங்குள்ள பிரச்சனை. இது தமிழரசுக் கட்சியைச் சார்ந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் பேச்சாளர் சுமந்திரனுக்கும் வெறும் தலையிடி அல்ல, தீராத தலைவலி. விரைவில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சி மாநாட்டில் மாவை சேனாதிராஜாவை அதன் தலைவர் பதவியிலிருந்து ஓரங்கட்ட சாம் - சுமா இணையர் திட்டம் மேற்கொண்டிருக்கையில், அவரை



புதிய கூட்டமைப்பு தலைவராக்குகிறது என்றால் அது எழுந்தமானமான ஒரு செயற்பாடல்ல.

சமகாலத்தில், வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் கடந்த மூன்று நாட்களாக புதிய போராட்டமொன்று ஆரம்பமாகியுள்ளது. மாவை தலைமையில் பிரேரிக்கப்பட்டுள்ள புதிய கூட்டமைப்பை (கூட்டமைப்பு இலக்கம் - 2 என்று இப்போதைக்கு இதனைக் குறிப்பிடலாம்) ஆதரித்து, சகல தமிழ் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்து இத்தேர்தலைச் சந்திக்க வேண்டுமென்ற பதாதைகளுடன் மக்கள் நடத்தும் போராட்டம் இது. மனதார இந்தக் கோரிக்கையை ஏற்கும் நிலையில் சம்பந்தனோ சுமந்திரனோ இல்லையென்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

இந்தக் களநிலையில்தான் கூட்டமைப்பின் தலைவர்களை தமது அமைச்சர்கள் சகிதம் ரணில் கடந்த ஐந்தாம் திகதி சந்தித்து உரையாடினார். இக்கூட்டமானது, பத்தாம் திகதியிலிருந்து நான்கு நாட்களுக்கு தொடர வேண்டிய எதிர்காலப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தளவில் தாயக மண்ணில் திரட்சி பெற்றுவரும் தமிழ்த் தேசிய கட்சிகளின் இணைப்பு என்ற கோரிக்கை, அதற்காக மக்கள் நடத்தும் விழிப்புணர்வுப் போராட்டம் என்பவற்றை நீர்த்துப் போகச்செய்ய அருமருந்தாக அமையக் கூடியது உள்ளூராட்சித் தேர்தலை ரணில் பின்போடுவது. ரணிலுடனான ஷ தேனிலவை' ரகசியமாகப் பேண உதவக்கூடியது அவருடனான பேச்சுவார்த்தையைப் பகிரங்கமாக எச்சரிப்பது அல்லது முறித்துவிட்டு பந்தை அவர் பக்கமே உதைத்துத் தள்ளுவது.**

சந்தேகங்களையும் கேள்விகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அடிப்படைப் பிரச்சனைகள் வேறு, அரசியல் பிரச்சனைகள் வேறு என்று பிரித்து கையாளப்படும் இரண்டிலுமே இதுவரை எந்த முன்னேற்ற அறிகுறியும் காணப்படவில்லை, எல்லாமே பேச்சளவில்தான் என்ற ஐயம் வெளிப்பட ஆரம்பித்துள்ளது.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீளளித்தல், அரசியல் கைதிகள் விடுதலை என்பவை ஓர் அங்குலம்கூட முன்னேறவில்லை. அரசு வழங்கிய முன்னைய உறுதிமொழிகளை நிறைவேற்றாவிடின், பேச்சுவார்த்தையை தொடர்வதில் அர்த்தமில்லையென்று ஜனாதிபதி ரணிலிடம் தாங்கள் தெரிவித்ததாக கூட்டமைப்பினர் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

ரணில் தங்களை ஏமாற்றுகிறார் என்ற தொனியில் கடும் விசனத்துடன் சம்பந்தன் கருத்தை வெளியிட்டதையும் ஊடகங்கள் பிரசுரித்துள்ளன. கூட்டமைப்புக்கு சவாலாக இன்னொரு கூட்டமைப்பு உருவாகி வரும் நெருக்கடி, அதற்கு ஆதரவாக பொதுவெளியில் உருவாகி வரும் மக்கள் எழுச்சியின் பாதிப்பு என்பனவற்றிலிருந்து கொஞ்சமாவது விடுபடுவதற்காக சம்பந்தன் கடும்தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார் என்று எண்ண இடமுண்டு.

இவ்வாறான கருத்துக்கு ஏற்புடையதாக ரணிலுக்கு சுமந்திரன் விடுத்துள்ள எச்சரிக்கை வாசகங்கள் அமைந்துள்ளன. "இருதரப்புகளுக்கிடையில் இதுவரை இடம்பெற்ற பேச்சுகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. அடுத்த பேச்சுவார்த்தை பத்தாம் திகதி ஆரம்பமாவதற்கு முன்னர் தீர்வு தொடர்பான வரைபை அரசு தரவேண்டும். இல்லையேல் பேச்சுவார்த்தை தொடராது. எங்களை அரசு ஏமாற்ற முனையுமானால் மக்களை ஒன்று திரட்டி போராட்டங்களை முன்னெடுப்போம் (இதுதான் மாவையரின் வாலாய உச்சரிப்பு). மோசமான விளைவுகள் காத்திருக்கிறது" என்று சுமந்திரன் கர்ச்சித்துள்ளார்.

எந்த மக்களை ஒன்று திரட்டி போராடப் போகிறார் என்ற விபரம் இல்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் இணைக்குமாறு கூட்டமைப்பினரை நோக்கி மக்கள் நடத்தும் போராட்டத்தை மதிக்காத சுமந்திரனுடன் சேர்ந்து போராட எந்த மக்கள் தயாராக உள்ளனர் என்பது புரியவே இல்லை.

அபகரிக்கப்படும் தமிழர் காணிகள் தொடர்பாகவும், ராணுவம் சுவீகரித்துள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் கூட்டமைப்பினருக்கு ரணில் அளித்துள்ள பதில் வழுவழுப்பானது.

1. வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலித்திட்டம் ஆகியவை ஊடாக வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சுவீகரிப்பு விடயங்களை உடனடியாக நிறுத்துமாறு ரணில் உத்தரவிட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. இது உண்மையானாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தளவுக்கு இதனை ஏற்று செயற்படுவார்கள் என்பதில் நம்பிக்கையில்லை. கோதபாய ராஜபக்ச பதவி துறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் கூட்டமைப்பினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தமிழர் காணிகள் சுவீகரிப்புப் பற்றி அவரது கவனத்துக்குக் கொண்டுவந்த வேளை அது எதுவுமே தமக்குத் தெரியாதது போன்று நடித்ததும், இரண்டு அமைச்சர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்குமாறு சுமந்திரனிடம் கூறியதும் (எல்லாம் காற்றோடு காற்றாகப் போய்விட்டது) நினைவுக்கு வருவதைத் தடுக்க முடியவில்லை.

2. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆண்டுக்கணக்கில் வடக்கில் ராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் காணிகளில் ஒரு பகுதியை விடுவிப்பது தொடர்பில் ராணுவ அதிகாரிகளை ரணில் யாழ்ப்பாணத்தில் சந்தித்து பேசவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ரணில் தலைமையில் தேசிய பொங்கல் விழா (நவீன சொல்லாடல் இது) நடைபெறவுள்ளது. தமிழரின் தைப்பொங்கல் வேறு, அரசாங்கம் முன்னெடுக்கும் தேசிய பொங்கல் வேறு போன்று இது தெரிகிறது. தேசிய பொங்கல் விழாவில் உரையாற்றவிருக்கும் ரணில் அதே தினம் காணி அபிவிருத்தி தொடர்பாக ராணுவ அதிகாரிகளுடன் ஷஸைட்; கூட்டம் நடத்தப் போகிறாராம்.

நேர்மையாக இந்தக் காணிகளை மீளளிப்புச் செய்ய வேண்டுமானால், தேசிய பொங்கல் விழாவுக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரிகளை கொழும்புக்கு அழைத்து பேசி முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதி என்ற பதவி வழியாக ரணிலுக்குண்டு. ஆனால் அதனை அவர் செய்ய மாட்டார். தேசிய பொங்கல் விழா எந்த விக்கினமும் இன்றி வெற்றிகரமாக நிறைவேற வேண்டும், காணிகள் விடுவிப்பு என்று தமிழரை நம்ப வைப்பது அதற்கு வலுவூட்டுவதாக அமைய வேண்டுமென்பதே அவரது தந்திர அரசியல்.

சம்பந்தன் பாணியில் தீபாவளியில் தீர்வு, வருடப் பிறப்பில் தீர்வு, தைப்பொங்கலில் தீர்வு என்றவாறு, ரணிலும் சுதந்திர தினத்துக்கு முன் தீர்வு, தேசிய பொங்கல் விழாவுடன் தமிழர் காணி விடுவிப்பு என்று சொல்வதைக் கேட்டு நம்பி ஏமாறுவது தமிழர் தலையெழுத்தாகி விட்டது.

இப்போதுள்ள நிலைமையில் உள்ளூராட்சித் தேர்தல் என்பது நீதிமன்றத் தீர்விலும் அரசமைப்பு நடைமுறையிலும் தங்கியுள்ளது. தமிழரின் எந்தப் பிரச்சனையானாலும் ஏதோ ஒரு பெருநாள் அல்லது கொண்டாட்ட நாளுடன் இழுபறிக்குள் நகர்வதாக படம் காட்டப்படுகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தளவில் தாயக மண்ணில் திரட்சி பெற்றுவரும் தமிழ்த் தேசிய கட்சிகளின் இணைப்பு என்ற கோரிக்கை, அதற்காக மக்கள் நடத்தும் விழிப்புணர்வுப் போராட்டம் என்பவற்றை நீர்த்துப் போகச்செய்ய அருமருந்தாக அமையக் கூடியது உள்ளூராட்சித் தேர்தலை ரணில் பின்போடுவது. ரணிலுடனான 'தேனிலவை' ரகசியமாகப் பேண உதவக்கூடியது அவருடனான பேச்சுவார்த்தையைப் பகிரங்கமாக எச்சரிப்பது அல்லது முறித்துவிட்டு பந்தை அவர் பக்கமே உதைத்துத் தள்ளுவது.

# நிற்கும் ரயில் சேவை அச்சுறுத்தும் பயண பயம்!

யாழ்ப்பாண மக்களுடன் ரயில் பயணம் என்பது ஒன்றித்து விட்டது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் முதலே இயங்கிய ரயில் சேவை இடையில் போர் காலத்தில் (1990) நின்று போனது. ஆனால், போரின் பின்னர் - 2014ஆம் ஆண்டு முதல் மீண்டும் ஆரம்பமாகின. அண்மைக்காலமாக நாட்டில் எரிபொருள் விலை உச்சத்தை தொட்டு - பேருந்து பயணத்துக்கான கட்டணங்களும் சாதாரண மக்களின் கைக்கு எட்டாததாக மாறியுள்ள நிலையில், அவர்களுக்கு ஆபத்பாந்தவனாக கைகொடுத்தது ரயில் சேவைகளே. இந்நிலையில், வவுனியா - அநுராதபுரம் வரையான புகையிரதப் பாதை திருத்தப் பணிகளுக்காக 6 மாதங்கள் நிறுத்தப்படுகின்றது. இதனால், மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள். இது தொடர்பான அவர்களின் பதிவுகள் இங்கே...!

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## 6 மாத நிறுத்தம் அதிக பாதிப்பு!

**அனிஸ்ரன்**
*பயணி, அரியாலை*

வழமையாக கொழும்புக்கு செல்வதாக இருந்தால் புகையிரத வண்டியில்தான் செல்வது வழமை. ஏனென்றால், பேருந்துகளில் சென்றால் அது பாதுகாப்பு இல்லை போட்டிக்கு ஓடி விபத்துக்கு உள்ளாகும் நிலைமை மற் றும் பல்வேறுபட்ட பிரச்னை காரணமாக புகையிரதத் திலேயே நாங்கள் கொழும்பு சென்று வருவது வழமை. ஆனால், தற்போது ஆறு மாதங்களுக்கு இந்த புகையிரத சேவை நிறுத்தப்பட்டமை பெரும் பாதிப்பை ஏற்படுத் தப் போகின்றது. கொழும்பு செல்பவர்கள் என்னைப் போல பலர் ரயிலை விரும்பி பயணிக்கின்றனர்.

ஆனால், எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு இந்த ரயில் சேவை நிறுத்தப்பட்டதனால் எமக்கு கொழும்பு பயணம் என்பது பெரும் சவாலான ஒரு பயணமாக அமையப் போகின்றது. எனவே, இந்த அரசாங்கம் விரைவில் பாதைகளை செப்பனிட்டு வடக்குக்கான ரயில் சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## உள்ளூர் சேவைகள் நடக்கும்

**பிரதீபன்**
*யாழ்ப்பாண புகையிரத நிலைய அதிபர்*



புகையிரத பாதைதிருத்த வேலை காரணமாக யாழ்ப்பாணம் - கொழும்பு புகையிரத சேவையானது அநுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக உள்ளூர் புகையிரத சேவைகள் மாத்திரம் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் முறிகண்டி சேவையில் ஈடுபட்ட யாழ்ராணி உள்ளூர் புகையிரத சேவையானது தற்போது வவுனியா வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் கோரிக்கைக்கு அமைய யாழ்ராணி உள்ளூர் புகையிரத சேவையானது வவுனியா வரை நீடிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்தும் மாலை 3:30 மணிக்கு வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடவுள்ளது.

## யாழ்ப்பாணம் வருவது மிகச்சிரமம்

**லோஜினி**
*பயணி, கொழும்பு*



கொழும்பிலிருந்து ஒவ்வொரு விடுமுறைக்கும் யாழ்ப்பாணத்துக்கு வந்து போகின்றோம். அரச துறையில் பணியாற்றி வருகிறேன். ஒரு குடும்பம் யாழ்ப்பாணத்துக்கு வேறு மார்க்கமாக வருவதாக இருந்தால் 17 ஆயிரம் ரூபாய் தொடக்கம் 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்.

இந்த ரயில் சேவையை நிறுத்தினால் யாழ்ப்பாணத்துக்கு வருவது என்பது ஒரு கனவாகவே மாறிவிடும். அத்தோடு அரச ஊழியர்கள் மற்றும் நடுத்தர வர்க்க பொதுமக்களுக்கும் இந்த ரயில் சேவையானது ஒரு வரப்பிரசாதமாக இருக்கின்றது.

இந்த ரயில் சேவை ஆறு மாதம் நடைபெறாது எனத் தெரிவிக்கின்றார்கள். அது எந்தளவுக்கு சாத்தியம் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், புகையிரத சேவை நடைபெற்றால் அடிக்கடி நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போவது இலகுவாக இருக்கும். அல்லாது விட்டால் நாங்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்புவது என்பது மிகமிகச் சிரமமானதாக இருக்கும்.




## மாற்று ஒழுங்குகள் தயார்

**ரவீந்திரன்**
*வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர்*



கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை நாளை முதல் இடைநிறுத்தப்படவுள்ளது. வவுனியா அநுராதபுரம் பாதை திருத்த வேலை காரணமாக குறைந்தது ஆறு மாதங்களுக்கு இந்தத் திருத்த வேலைகள் நடைபெற இருப்பதால் ரயில் சேவை நடத்தப்படுகின்றது.

அந்த வகையில் கௌரவ வடக்கு ஆளுநர் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு புகையிரத திணைக்களத்தினருடன் இணைந்து சில மாற்று வளங்களை சுய நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

அந்த வகையில் குறிப்பாக பேசிய போக்குவரத்து ஆணைக்குழு இலங்கை போக்குவரத்து சபை அதிகார சபை, புகையிரதத் திணைக்களம் வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் இணைந்து என்ன மாற்றங்களை செய்யலாம் என்பதை தீர்மானித்து மூன்று வகையான தீர்மானங்களை நாங்கள் எடுத்திருக்கின்றோம்.

ஒன்று, யாழ்ப்பாணத்திலிருந்து செல்கின்ற யாழ்ராணி தற்போது முறிகண்டி வரை பயணிக்கின்றது. வவுனியா வரை செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

வவுனியாவில் இருந்து அநுராதபுரம் சென்று புகையிரதத்தில் கொழும்பு செல்ல விரும்புவோருக்காக வவுனியா அநுராதபுரத்துக்கு 20 பேருந்துகள் மேலதிகமாக சேவையில் ஈடுபடவுள்ளன.

மற்றையது, தனியார் போக்குவரத்து சேவை மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் அந்தந்த மாவட்டங்களில் இருந்து நேரடியாக அநுராதபுரத்துக்கு சென்று அங்கே பயணிகளை செல்லக்கூடியவாறு ஒழுங்கு செய்திருக்கின்றோம்.

நேரடியாக பேருந்துகளில் கொழும்புக்கு செல்லக்கூடியவாறான ஏற்பாடுகளும் செயல்படுகின்றன. குறிப்பாக, நேரடியாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பல குளிரூட்டப்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

தற்போது 38 பேருந்துகள் யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக கொழும்புக்கான சேவையில் ஈடுபடுகின்றன. அவைகள் தங்களுக்கு ஏற்ற முற்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அதை விட மேலதிகமாக 33 குளிரூட்டப்பட்ட பேருந்துகள் இருக்கின்றன. அந்த பேருந்துகளும் தற்போது கடந்தகால கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சேவையில் ஈடுபடவில்லை அந்த 33 பேருந்துகளையும் மீண்டும் சேவையில் ஈடுபடுமாறு நாங்கள் அதனோடு தொடர்புடையவர்களை நாங்கள் கோரியுள்ளோம். எனவே, உயர்ந்த சேவை நிறுத்தப்பட்டாலும் பொதுமக்கள் காண போக்குவரத்து சேவைகள் பங்கு பெற நின்று செயல்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோம்.

ஈழநாடு




# 11இல் மோதல்



2023ஆம் வருடப் பொங்கலுக்கு விஜய் நடிக்கும் "வாரிசு", அஜித் நடிக்கும் "துணிவு" ஆகிய படங்கள் வெளிவரும் என கடந்த சில மாதங்களாகவே சொல்லி வந்தார்கள்.

திகதியை அறிவிக்காமல் இழுத்தடிக்கப்பட்ட நிலையில் இரு படங்களும் வரும் ஜனவரி 11ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதலில் "துணிவு" படம் ஜனவரி 11ஆம் திகதியும், "வாரிசு" படம் ஜனவரி 12ஆம் திகதியும் வெளியாகும் என்றுதான் தகவல்கள் வெளியாகின.

அஜித், விஜய் இருவரின் படங்களும் 8 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரே நாளில் மோத உள்ளன. "துணிவு, வாரிசு" படங்களின் டிரைலர்களைப் பார்த்த பிறகு ரசிகர்களுக்கும் படங்கள் "சுமாராகத்தான்" இருக்குமோ என்ற எண்ணம் வந்துள்ளது. இரண்டு டிரைலர்களுக்கும் எதிர்மறை விமர்சனங்களும் வந்துள்ளன.




# வெளியாகும் முன்பே இலாபம்!

சூர்யா சிறுத்தை சிவா இயக்கத்தில் நடிக்கும் படத்தின் புதிய தகவல் வெளியாகியுள்ளது. "சூர்யா 42" என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தின் ஹிந்தி பதிப்பின் திரையரங்க உரிமை, சற்லைட் உரிமை மற்றும் டிஜிற்றல் உரிமை ஆகியவை 100 கோடி இந்திய ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளதாகவும் பென் ஸ்ருடியோஸ் என்ற நிறுவனம் இதனை வாங்கி உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ரஜினியுடன் மோகன்லால்

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படம் 'ஜெயிலர்'. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் அனிருத் இசையமைப்பில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நடிகர் ரஜினிகாந்த், ரம்யாகிருஷ்ணன், கன்னட நடிகர் சிவராஜ் குமார் உள்ளிட்டோர் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். இந்நிலையில், இப்படத்தில் நடிகர் மோகன்லால் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க இருக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.





# புதிய அவதாரம்

'தி பமிலி மான்" தொடரை இயக்கிய ராஜ் மற்றும் டீ. கே. இயக்கி உள்ள இணையத் தொடர் பார்சி. இதில் விஜய்சேதுபதி, ஷாஹித் கபூர், கே கே மேனன், ராஷி கண்ணா, அமோல் பலேகர், ரெஜினா காசண்ட்ரா மற்றும் புவன் அரோரா உள்பட பலர் நடித்துள்ளனர்.

இந்தத்தொடர் வருகிற பெப்ரவரி 10ம் தேதி அமேசன் தளத்தில் வெளியாகிறது. இது ஒரு க்ரைம் த்ரில்லர் தொடர். கோர்பரேட் நிறுவனங்களை எதிர்த்து நிற்கும் ஒரு தெருக்கூத்து கலைஞனின் கதை. இதில் தெருக்கூத்து கலைஞனாக விஜய் சேதுபதி நடித்துள்ளார்.

# அஜித்துக்கு வில்லன்!



துணிவு படத்தை அடுத்து விக்னேஷ் சிவன் இயக்கும் தனது 62ஆவது படத்தில் நடிக்க போகிறார் அஜித்குமார். அதிரடி - கதையில் உருவாகும் இந்தப் படத்தில் ஒரு பிரபல மான வில்லன் நடிகரைத்தான் நடிக்க வைக்க வேண்டும் என்று பலரிடத்தில் பேச்சு நடத்தி வந்த விக்னேஷ் சிவன் தற்போது அரவிந்த் சாமியிடம் பேச்சு நடத்தியுள்ளார்.

அதோடு, தனி ஒருவன் படத்தைப் போலவே இந்த படத்திலும் அரவிந்த்சாமி நடிக்க இருப்பதாகவும் கூறுகிறார்கள். மேலும் இதற்கு முன்பு சுரேஷ்மேனன் இயக்கத்தில் அரவிந்த்சாமி - ரகுவரன் இணைந்து நடித்த பாசமலர்கள் என்ற படத்தில் ஒரு சிறிய வேடத்தில் நடித்திருந்தார் அஜித் குமார். இதையடுத்து அவர்கள் எந்தப் படத்திலும் இணைய வில்லை. இந்த நிலையில் தற்போது ஒரு நீண்ட இடைவெளிக்கு பிறகு அஜித் நாயகனாக நடிக்கும் இந்த படத்தில் வில்லனாக நடிக்க போகிறார் அரவிந்தசாமி.




# திரைவிமர்சனம்




**திரைப்படம் - வி3**
**இயக்குநர் - அமுதவாணன்**
**நடிகர்கள் - நரேன், பாவனா, எஸ்தர், வரலட்சுமி**
**தயாரிப்பு - விஷ்ணு பிரபு**

பாலியல் வன்கொடுமைகளுக்கு தண்டனை தீர்வாகாது என்பதுடன் மாற்று வழியை வலியுறுத்தும் படம் தான் 'வி3'. வேலாயுதம் (ஆடுகளம் நரேன்) தனது மகள்கள் விந்தியா (பாவனா), விஜி(எஸ்தர்) ஆகியோருடன் வாழ்ந்து வருகிறார். ஒருநாள் இரவு வீடு திரும்பும் விந்தியா 5 நபர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்படுகிறார். குற்றவாளிகளை சுட்டுக் கொன்றுவிட்டதாக காவல் துறை சொல்ல, இது தொடர்பான வழக்கை மனித உரிமைகள் ஆணையம் கையிலெடுத்து விசாரிக்கிறது. இதன் விசாரணை அதிகாரியாக சிவகாமி (வரலட்சுமி சரத்குமார்) நியமிக்கப்படுகிறார். இறுதியில் உண்மையான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டனரா, இல்லையா என்பதுதான் 'வி3' சொல்லும் கதை.

மாவட்ட ஆட்சியர் கதாபாத்திரத்தில் வரலட்சுமி சரத்குமார் சிறப்புத் தோற்றத்தில் வந்து செல்கிறார். அவருக்கு பெரியளவில் வேலையில்லை என்றாலும் தனக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்துக்கு நியாயம் சேர்க்கிறார். அவரைத் தொடர்ந்து 'ஆடுகளம்' நரேனின் அழுத்தமான நடிப்பு காட்சிகளுக்கு உயிரூட்டுகிறது. மகளைப் பார்த்து உடைந்து அழும் இடங்களில் கவனிக்க வைக்கிறார்.

விந்தியா கதாபாத்திரத்தில் நடித்துள்ள பாவனா தேர்ந்த நடிப்பை வெளிபடுத்த, அவரது சகோதரியாக நடித்துள்ள எஸ்தர் நடிப்பில் வறட்சியை உணர முடிகிறது. இந்தக் கதாபாத்திரங்களை தவிர்த்து வரும் மற்ற துணைக் கதாபாத்திரங்களின் நடிப்பின் போதாமை அப்பட்டமாக தெரிகிறது. குறிப்பாக முதல்வராக நடித்திருப்பவர் தனக்கு கொடுக்கப்பட்ட வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது, எம்.எல்.ஏவாக நடித்திருப்பவருக்கான நடிப்பு மற்றும் அவருக்கான பலவீனமான எழுத்து, குரல்கொடுப்பு என செயற்கைதனம் துருத்திக்கொண்டு நிற்கிறது.

'பாலியல் வன்கொடுமைக்கு தண்டனை முழுமையான தீர்வாகாது' என்பது ஒருவரி கதை. அதைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள திரைக்கதையில் அடைக்க முடியாத ஓட்டைகள் பளிச்சிடுகின்றன. விசாரணை ஆணையத்துக்கான அதிகார வரம்புகள் என்ன என்பதறியாமல் கற்பனைக்கு தகுந்தவாறு அமைக்கப்பட்ட காட்சிகள், கதைக்கு தொடர்பில்லாத வரலட்சுமி சரத்குமாரின் தேவையற்ற பில்டப் காட்சிகள், வடமாநில பத்திரிகையாளரிடம் சாதி குறித்து எம். எல். ஏ. பேசும் தேவையற்ற வசனம், சுட்டுக்கொல்ல சொல்லப்படும் செயற்கையான காரணம் என காட்சிகளுடன் அயர்ச்சியும் நீள்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களை நல்லவர்களாக பிரதிபலிப்பதாகக்கூறி, அந்த இளைஞர்கள் கஞ்சா பயன்படுத்துவதாக காட்டியிருப்பது கதைக்குள் நிகழும் முரண்.

இப்படியாக நகரும் படத்தில் ஆலன் சபாஸ்டின் இசையில் பாடல்கள் ஆறுதல். சிவா பிரபு ஒளிப்பதிவில் இரவுக்காட்சிகள் கவனிக்க வைக்கின்றன. தவிர, பாலியல் வன்கொடுமைகளை களைய பாலியல் தொழிலை சட்டப்பூர்வமாக்க வேண்டும் என இயக்குநர் அமுதவாணன் இறுதியில் முன்வைக்கும் தீர்வு விவாதத்துக்கு உரியது.

மொத்தமாக பாலியல் வன்கொடுமையின் கொடூரத்தை திரை ஆக்கம் செய்து, அதற்கான தீர்வை விவாதத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்ற இயக்குநரின் மெனக்கெடல் வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த மெனக்கெடல் திரைக்கதையில் நழுவியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஈழநாடு



# எட்டும் தூரத்தில் வெற்றி எட்டவிடாத வெளிச்சம்!

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

விறுவிறுப்பாக அமைந்த கடைசி நாள் ஆட்டத்தின் கடைசி கட்டத்தில், பாகிஸ்தான் வெற்றிக்கு 15 ஓட்டங்களே தேவையிருக்க, நியூசிலாந்து வெற்றிக்கு ஒரு விக்கெட்டே தேவை இருந்தது. அதை வசப்படுத்த இரு அணியினரும் முனைப்புடன் செயல்பட்டு வந்த நிலையில், போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி முன்னதாகவே முடிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. பாகிஸ்தான் துடுப்பாட்டத்தில் சார்ஃப்ராஸ் அகமது அருமையாகச் செயல்பட, நியூசிலாந்து பந்துவீச்சில் மைக்கல் பிரேஸ்வெல் பலம் காட்டினார்.

மொத்தம் இரு போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இந்த 2-ஆவது ஆட்டமும் சமனானதை அடுத்து, சம்பியன் கோப்பையை இரு அணிகளும் பகிர்ந்துகொண்டன. ஆட்டநாயகன், தொடர்நாயகன் விருதை சார்ப்ராஸ் அகமது வென்றார்.

கடந்த இரண்டாம் திகதி தொடங்கிய இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, 131 ஓவர்களில் 449 ஓட்டங்கள் சேர்த்து முதல் இனிங்ஸில் ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக டெவன் கொன்வே 16 பௌண்ட்ரிகள், 1 சிக்ஸருடன் 122 ஓட்டங்கள் விளாசினார். பாகிஸ்தான் பந்துவீச்சில்அப்ரார் அகமது 4 விக்கெட்கள் வீழ்த்தினார். பின்னர் ஆடிய பாகிஸ்தான், 133 ஓவர்களில் 408 ஓட்டங்களுக்கு




அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அணியின் தரப்பில் சௌத் ஷகீல் 17 பவுண்டரிகள் உள்பட 125 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருக்க, நியூசிலாந்து பந்துவீச்சில் அஜாஸ் படேல், இஷ் சோதி ஆகியோர் தலா 3 விக்கெட்கள் சாய்த்திருந்தனர். இதையடுத்து முதல் இனிங்ஸில் 41 ஓட்டங்கள் முன்னலையுடன் 2-ஆவது இனிங்ஸை ஆடிய நியூசிலாந்து, 82 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 277 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதிகபட்சமாக மைக்கல் பிரேஸ்வெல் 11 பௌண்ட்ரிகள் உள்பட 74 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் தரப்பில் மிர் ஹம்ஸா குறைந்த ஓட்டங்களே கொடுத்து ஒரு விக்கெட் கைப்பற்றியிருந்தார். இறுதியாக, 319 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு 2ஆவது இனிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான், வியாழக்கிழமை முடிவிலேயே ஓட்டங்களின்றி 2 விக்கெட்களை இழந்து தடுமாற்றமான நிலையில் இருந்தது.

கடைசி நாளான வெள்ளிக்கிழமை போட்டியை இமாம் உல் ஹக், ஷான் மசூத் ஆகியோர் தொடர்ந்தனர். இதில் இமாம் 12 ஓட்டங்களுக்கு வெளியேற, மசூத் 5 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கேப்டன் பாபர் அஸாம் 5 பௌண்ட்ரிகளுடன் 27 ஓட்டங்களுக்கு விக்கெட்டை இழக்க, 6ஆவது வீரராக ஆடவந்த சர்ஃப்ராஸ் அகமது விக்கெட்டை இழக்காமல் ஓட்டங்கள் சேர்க்கத் தொடங்கினார்.

இதனால் பாகிஸ்தான் ஓட்ட எண்ணிக்கை உயரத் தொடங்கியது. மறுபக்கம் அவருக்குத் தகுந்த இணைப் பாட்டம் அமையாவிட்டாலும் துடுப்பாட்ட வீரர்கள் சிறிது சிறிதாக ஓட்டங்கள் சேர்த்து அரங்கம் திரும்பினர். சௌத் ஷகீல் 4 பௌண்ட்ரிகளுடன் 32, அகா சல்மான் 4 பௌண்ட்ரிகளுடன் 30, ஹசன் அலி 5 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். சதம் கடந்து பாகிஸ்தானின் ஒரே பலமாக நிலைத்திருந்த சர்ஃப்ராஸ் 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 118 ஓட்டங்களுக்கு சாய்க்கப்பட்டார்.

அத்துடன் 9 விக்கெட்களை இழந்திருந்த பாகிஸ்தான் வெற்றிக்கு 32 ஓட்டங்களே தேவையிருந்தது. தொடர்ந்து ஆடிய நசீம் ஷா - அப்ரார் அகமது கூட்டணி ஓட்டத் தேவையை 15ஆகக் குறைத்திருந்தபோது, வெளிச்சமின்மை காரணமாக ஆட்டத்தை மேலும் தொடர முடியாமல் போனது. இதனால் ஆட்டம் சமனானதாக அறிவிக்கப்பட்டது. அப்போது பாகிஸ்தான் 90 ஓவர்களில் 304 ஓட்டங்களை எட்டியிருந்தது. நசீம் 15, அகமது 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நியூசிலாந்து பந்துவீச்சாளர்களில் மைக்கல் பிரேஸ்வெல் 4, டிம் சௌதி, இஷ் சோதி ஆகியோர்தலா 2, மாட் ஹென்றி 1 விக்கெட் சாய்த்திருந்தனர்.

# மகளிர் ஐ. பி. எல். தொடர் அணிகளை வாங்க அழைப்பு

அங்குரார்ப்பண மகளிர் இந்தியன் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ள அணிகளை வாங்குவதற்கு முன்வருமாறு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த வருடம் வரை 3 அணிகளுக்கு இடையில் மகளிர் இருபது 20 சவால் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டுவந்தது. மகளிர் இருபது 20 சவால் கிரிக்கெட் போட்டியில் சுப்பநோவாஸ், வெலோசிட்டி, ட்ரெய்ல்ப்லேஸர்ஸ் ஆகிய அணிகள் பங்குபற்றின.

இந்த வருடம் முதல் தடவையாக மகளிர் இந்தியன் பிறீமியர் லீக் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

மகளிர் கிரிக்கெட் அரங்கில் கோடிக் கணக்கில் பணத்தைப் புரளச் செய்யும் போட்டியாக மகளிர் இந்தியன் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 இல் 6 அணிகளைக் கொண்ட மகளிர் இண்டியன் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி ஆரம்பிக்கப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜெய் ஷா கடந்த வருடம் அறிவித்திருந்தார்.

மகளிர் அணிகளை வாங்குவதற்கு இதுவரை எவரும் முன்வராத போதிலும் மகளிர் அணி ஒன்றின் உரிமைத்துவத்தைப் பெறுவதில் ராஜஸ்தான் றோயல்ஸ் ஆர்வம் கொண்டுள்ளதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆடவர் இந்தியன் பிறீமியர் லீக் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் 5 தடவைகள் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளராக நிட்டா அம்பாணி திகழ்கிறார். உலகிலேயே 8ஆவது செல்வந்தரான கோடீஸ்வரர் முக்கேஷ் அம்பானியின் மனைவியே நிட்டா அம்பானி ஆவார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின்




உரிமையாளர் பொலிவூட் நடிகர் ஷா ருக் கான் ஆவார். அவர்கள் மகளிர் அணிகளை வாங்குவதில் விருப்பம் கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இந் நிலையில் மகளிர் ஐ. பி. எல். விலை கோரல் மனுவுக்கான ஆவணங்களின் நகல் ஒன்றைப் பெறுவதற்கு 6,000 அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, கடந்த வருடம் ஐ. பி. எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்திய நாணயப்படி ஆயிரம் கோடி ரூபா பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

2022இலிருந்து அணிகளின் எண்ணிக்கை 10ஆக அதிகரிக்கப்பட்டுள்ள ஐ. பி. எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இந்த வருட அத்தியாயத்தில் இங்கிலாந்து சகலதுறை வீரர் சாம் கரன் அதிக விலைக்கு பஞ்சாப் கிங்ஸால் வாங்கப்பட்டுள்ளார்.

டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட ஐ. பி. எல். வீரர்களுக்கான ஏலத்தில் சாம் கரனை பஞ்சாப் கிங்ஸ், 185 மில்லியன் இந்திய ரூபாய்க்கு வாங்கியிருந்தது.

# வடபுலத்து வாழ்வியலையும் மண்வாசனையையும் பதிவு செய்துள்ள பாலை நிலம் திரைப்படம்

**பி.மாணிக்கவாசகம்**

ஈழத்து சினிமா என்பது வெறும் கலைமுயற்சி அல்ல தமிழ் மக்களின் விடுதலை மற்றும் உரிமைகள் சார்ந்த ஒரு அசைவியக்கம் என்று ஈழத்து சினிமா செயற்பாட்டாளர் காசிநாதர் ஞானதாஸ் கூறுகின்றார். இவர் ஈழுத்து சினிமா படைப்புலக முன்னோடியாகவும் கருதப்படுகின்றார். அந்த வகையில் பாலை நிலம் திரைப்படம் பற்றிய அவரது கருத்து கவனத்துக்கு உரியதாகின்றது.

ஈழத்து சினிமா கலைக்கு அப்பால் ஈழத் தமிழர்கள் சார்ந்த நிறைய விடயங்களைப் பதிவு செய்கின்றது. அதன் தொடர்ச்சியாகவே பாலை நிலம் திரைப்படம் திரைக்கு வந்துள்ளது என்பது காசிநாதரின் பார்வை.

பாலை நிலம் திரைப்படம் தமிழகத் திரைப்படங் களுக்கு ஒப்பான வகையில் உருவாக்கப்பட்டிருக்கின் றது, தமிழகத் திரைப்படங்களுக்கே உரித்தான பாடல்கள் நிறைந்த தன்மையை இந்தத் திரைப்படமும் கொண்டிருக்கின்றது. ஆயினும் வடபுலத்தின் மண் வாசனை திரைப்படமெங்கும் நிறைவாக வியாபித்திருக் கின்றது. இந்தப் படத்தயாரிப்பின் கமரா அந்த மண்வாசனையை மிக நுண்ணிய நிலைகளிலெல்லாம் அழகுறப் பதிவு செய்திருப்பதைக் காண முடிகின்றது.



கதை மாந்தர்களுடைய வாழ்வியலைக் குறிக்கின்ற இந்த மண்வாசனை அம்சங்கள் அனைத்தும் அந்தப் பிரதேசத்து மக்களின் பாரம்பரிய வாழ்வியல் நிலைமைகளைத் தத்ரூபமாகப் பதிவு செய்திருப்பது இந்தத் திரைப்படத்தின் சிறப்பு.

போர்ச்சூழலின் பின்னணியில் விளைந்த ஒரு காதல் கதையே திரைப்படத்தின் கரு. மனம் முழுதும் வியாபித்துள்ள காதலி ஒரு பக்கம். வாழ்க்கையின் மிகுந்த அன்புக்குரிய தாயார் ஒரு பக்கம். இரண்டுக்கும் இடையில் தவிக்கின்ற அமுதனே படத்தின் கதாநாயகன். கதாநாயகனின் தோன்றாத் துணையாக வருகின்ற மூர்த்தி அவனுடைய மாமா. உறவு முறையில் மாமனும் மருமகனுமாக இருப்பினும் தலைமுறை இடைவெளியையும் வயது வித்தியாசத்தையும் கடந்ததோர் இணை பிரியாத தோழமையே கதையை நகர்த்திச் செல்கின்றது.




போர்ச்சூழலின் வைத்திய வசதிகளற்ற நிலைமை கதாநாயகன் மற்றும் கதாநாயகியின் வாழ்க்கையில் குறுக்கிடுவது திரைக்கதையின் முதுகெலும்பாக மறைநிலையில் காணப்படுகின்றது. இளவயதினரிடையே முகிழ்க்கின்ற காதல் மொட்டவிழும் வகைமுறை இதமாக இனிமையாகப் பதிவாகியிருக்கின்றது. அதேவேளை, தசாப்தம் கடந்தும் நிலைத்து நீடித்திருக்கின்ற காதலின் வலிமையையும் அதன் வலிகளையும் படம் அழகுற பிரதிபலித்திருக்கின்றது. அமுதன் நித்தியா இருவரினதும் காதல் நிறைவேறுகின்றதா என்ற கேள்விக்குப் பதிலளிப்பதே திரைப்படத்தின் கிளைமாக்ஸ்.

போரினால் சிதைந்து போன கிராமத்தின் காட்சிகளைத் தத்ரூபமாக வெளிப்படுத்த படத்தில் கமரா முயற்சித்திருக்கின்றது. அந்த அழிவுக் காட்சிகள் திரைப்படத்தின் தலைப்பை நினைவூட்டுகின்றன. அமுதனும் அவனது மாமா மூர்த்தியும் கிராமத்தவர்களைச் சந்திக்கும் காட்சிகளில் எல்லாம் வடபுலத்து மக்களின் அடிப்படை வாழ்வியல் அம்சங்களும் அவர்கள் பயன்படுத்திய பாரம்பரிய பொருட்களும் அழகுற இரண்டறக் கலந்திருக்கின்றன.

வயலும் வயல் சார்ந்த நிலப்பரப்பும் காதல் காட்சிகளிலும்கூட கவினுறப் படமாக்கப்பட்டிருக்கின்றன.

போர் தின்ற நிலம் பொலிவிழந்து வளமிழந்து பாலை நிலமாகியிருப்பதைப் படம் மிக நேர்த்தியாகத் தொனி செய்திருக்கின்றது. ஆயினும் பாலை நிலம் என்ற படைத்தலைப்பு அதனையும்விட ஆழமான கருவைப் பதிவு செய்திருப்பது கதைப்போக்கின் முக்கிய அம்சமாகும்.

குறும்படங்களில் கவனம் குவித்திருந்த இளம் கலைஞர்கள், இப்போது முழு நீளத் திரைப்பட முயற்சியில் ஆழமாகக் காலூன்றியிருக்கின்றனர். அந்த வகையில் தூவானம், பாலை நிலம், வெந்து தணிந்தது காடு போன்ற திரைப்படங்கள் மனதில் நிழலாடுகின்றன.

பாலை நிலம் திரைப்படத்தின் கதநாயன், கதாநாயகி உள்ளிட்டவர்கள் திரைப்பட நடிப்புலகத்திற்குப் புதியவர்களாயினும் நடிப்புத் திறனை அழகுற வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். இது ஈழத்து முழுநீளத் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கான அடையாளமாக வெளிப்பட்டிருக்கின்றது.

குறுந்திரைப்படப் படங்களிலும், தமிழகத் திரைப்படங்களின் குறுங்காட்சிகளிலும், தமிழகத் திரைப்படங்களின் டிவிடிகளிலும் மூழ்கியுள்ள ஈழுத்து சினிமா ரசிகர்களுக்கு முழு நீளத் திரைப்படம் என்ற புதிய பாதையில் பயணத்தைத் தொடங்கியுள்ள பாலை நிலம் உள்ளிட்ட திரைப்படங்கள் புதிய திரைப்பட இரசனையை அள்ளி வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தத் திரைப்பட இரசனை ரசிகர்கள் மத்தியில் சென்றடைவது புதிய படைப்புக்களாகிய முழு நீளத் திரைப்படங்களின் விளம்பர உத்திகளிலேயே அதிகம் தங்கியிருக்கின்றது. அதுவே இரசிகர்களை சினிமா தியேட்டர்களை நோக்கிக் கவர்ந்த இழுக்க வல்லது. இதுவே இன்றைய ஈழத்து சினிமாவின் யதார்த்தம் என்று துணிந்து கூறலாம்.

---




## வியுக்தியார் பதில்கள்

**சி. சிவசுதன், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் தனது இலக்கு என்றும், தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறாரே. இந்த புத்தாண்டில் நல்ல தீர்வு வரும் என்ற நம்பிக்கை உங்களுக்கு வந்திருக்கின்றதா?

**வியுக்தியார்:** எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு என்று அவரே சொல்லிவிட்ட பின்னர் தீர்வு வரும் என்று நம்புவதற்கு நான் என்ன புத்தி சுவாதீனம் இல்லாத ஆள் என்று நினைத்துவிட்டீர்களா? அவர் எந்தத் தீர்வைத் தர விரும்பினாலும் தமிழர்களின் அனைத்துத் தரப்புக்களுமே ஏற்றுக்கொள்ளப்போவதில்லையே. அப்படியிருக்கையில் நாட்டிலுள்ள எல்லாத்தரப்பும் என்று சொன்னால், அஸ்கிரிய பீடத்திலிருந்து, ஞானசாரர் மட்டுமன்றி, நம்மட பொன்னம்பலம் வரைக்கும் திருப்திப்படுத்தி ஒரு தீர்வைக் கொண்டுவருவதென்றால் நடக்கின்ற காரியமா?

**என். ரவீந்திரன், வதிரி, கரவெட்டி.**

**கேள்வி:** தமிழ் தேசிக் கட்சிகள் எல்லாவற்றையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்வாங்கவேண்டும் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் மட்டுமன்றி சில அரசசார்பற்ற நிறுவனங்களும் அண்மைக் காலமாக போராடத் தொடங்கியிருக்கின் றனவே. இது நல்லது என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** கூட்டமைப்பை உருவாக்கியபோது தமிழர் அரசியல் எப்படியிருந்ததோ அதைவிட மோசமான நிலையில்தான் இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. ஆனால் அப்போது சிலர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும், பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது இரகசியமல்லவே. அதனால்தான் அப்படியொரு கூட்டை உருவாக்க முடிந்தது. ஆனால் இன்று அப்படியொரு சக்தி நம்மத்தியில் இல்லை. இவர்களையெல்லாம் ஒன்றிணைத்து ஓரணியில் கொண்டுவருவதென்றால் அது கல்லில் நார் உரிக்கும் வேலைதான். அதைவிட முக்கியமானது, இந்த தமிழ் தேசியக் கட்சிகள் என்றால் எவை எவை என்பது. தமிழ் இனம் ஒரு தேசிய இனம். அந்த இனத்தின் மத்தியில் அரசியல் செய்பவை எல்லாம் தமிழ் தேசியக் கட்சிகள் தானே. அதிகம் ஏன் தமிழீழமே தமிழர்களின் ஒரே திர்வு என்று வாக்கெடுப்பு நடாத்திய ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட தமிழ் தேசியக் கட்சிதானே. எல்லோரும் ஓரணியில் வந்தால் நல்லதுதானே.

**எல். ஜெயரூபன், பார் வீதி, மட்டக்களப்பு**

**கேள்வி:** நமது நாட்டை இன்று பொருளாதார நெருக்கடியை விட மோசமாக பாதித்திருப்பது இந்த போதைவஸ்து பாவனைதான் என்பது சகலரும் அறிந்த விடயம். அந்த போதைவஸ்து வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பாதாள உலக ஜனாம்பவானான கஞ்சிப்பானை இம்ரானை பலத்த பிரயத்தனம் செய்து கைதுசெய்தார்கள். சில வருடங்கள் சிறையில் இருந்த அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட உடனேயே நாட்டைவிட்டு தப்பிச் சென்றிருக்கின்றார். தப்பிச் சென்றதை மாத்திரமல்ல, அவர் எப்போது எப்படி இந்தியாவுக்கு தப்பிச் சென்றார் என்றும் இப்போது கூறுகிறார்கள். இனி என்ன அவர் எங்காவது இருந்துகொண்டு மீண்டும் போதைவஸ்தை இலங்கைக்கு அனுபிக்கொண்டிருப்பார். இப்படியெனில் இந்த நாட்டில் போதையை ஒழிக்கமுடியுமா?

**வியுக்தியார்:** பிணையில் விடுவிக்கப்பட்டாலும் அவர் ஒரு ஆபத்தானவர் என்பது சகலருக்கும் தெரிந்ததுதான். அப்படியான ஒருவர் இவ்வளவு விரைவாக நாட்டை விட்டு தப்பிச் சென்றிருக்கின்றார். அதுமாத்திரமல்ல, அவர் எப்படிதப்பிச் சென்றார் என்பதையும் நேரில் பார்த்தவர்கள் போல சொல்கிறார்கள். அவர்களை - அதுதான் அவர் தப்பிச் சென்ற செய்தியை வெளியிட்டவர்களுக்குத்தான் அவர் தப்பிச் சென்றதில் தொடர்பு இருக்கும்போலத்தான் தெரிகின்றது. அவ்வளவு தெளிவாக அவர் தப்பிச் சென்றதை கூறியிருக்கிறார்கள். ஆனால் அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பதை தேடிக்கொண்டிருக்கின்றார்களாம். இவையெல்லாம் ஒரேயொரு விடயத்தைத்தான் தெளிவாக சொல்கிறது. இந்த நாடு உருப்படாது என்று.

# அந்திப்பூ

மனோ சின்னத்துரை

சிவண்ணை கோயில் பக்கம் வரக் கூடாது என்ற முணுமுணுப்புகள் பெரிதாகி, இன்று இந்த விவகாரத்திற்காகவே ஆலய நிர்வாகம் நிர்வாகத்தைக் கூட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டது.

“கோயிலுக்குள்ள உதுகள அனுமதிக்கேலாது. இது புனிதமான இடம். முன்மாதிரியாக நாங்கள் நடந்துகொள்ள வேணும். தெய்வக்குற்றத்திற்கும் நாங்கள் ஆளாகேலாது.”

“அவனை வரவேண்டாமெண்டால் பிறகென்ன பிரச்சினை?”

“எத்தின தரம் சொல்லியாச்சு. சிவண்ணைக்கு விளங்குற மாதிரியில்லை“

“கொஞ்சம் விபரம் குறைஞ்ச ஆள் தானே! பத்திரமா சொல்லிப் பாக்கிறது”

“ஆர்! சிவண்ணையோ! விபரம் குறைஞ்ச ஆளோ! வாற வரியம் எழுபதாகப்போகுது. இந்த வயதில அவருக்கு லவ் பண்ணத்தெரியுது. கோயில் ஒழுங்கு முறையள் சொன்னால் விளங்காதோ?”

சிவண்ணை, குடும்ப உறவுகள் இறந்துபோக தனித்துப்போனார். தனிக்கட்டையாகத் திரிந்த அவரை நெருங்கின உறவுகளும் சாக்குப் போக்குச்சொல்லி விலத்தி வைத்துக்கொண்டார்கள். கண்ட இடத்தில் மட்டும் அன்பொழுக விசாரித்து அனுதாபம் கொட்டுவதோடு அவர்கள் உறவுகள் முடிந்தன.

யுத்த இடப்பெயர்வுகள், கொரோனா எல்லாவற்றையும் தாண்டி சிவண்ணை உயிர் பிழைத்துக் கொண்டிருப்பது ஆச்சரியம் தான். பற்களும் ஆட்டம் கண்டு கொண்டுண்டுபோகத் தொடங்கி விட்டன. முன் வாய்ப்பல்லு இரண்டும் கொடுப்புப் பல்லு இரண்டும் இல்லை. உடல் மட்டும் வாட்ட சாட்டமாக இருந்தது. எந்தக் கடின வேலையையும் செய்துமுடிக்கும் தென்பு உடலில் இருந்தது. படுத்தெழும்பக் கூடிய அளவில் அவருக்கு வீடு இருந்தது. சில சுவர்கள் வெடிப்புகளைக் கண்டும், ஒடுகள் சில காணமல் போயுமிருந்தன. இவை பற்றியெல்லாம் சிவண்ணைக்கு கவலை கிடையாது. கோயிலே தஞ்சமென்றிருந்தார். கோயில் பூமரங்களுக்கு தண்ணீர் ஊற்றுவது, கோயில் கூட்டிக் கழுவுவது, வீதி கூட்டுவது, அன்னதான வேளைகளில் ஓடிஆடி வேலை செய்வது என அவரைப் பொறுத்தமட்டில் எதுவித குறையுமில்லாது காலங்கள் கடந்து கொண்டிருந்தன. அற்ப புகழ்ச்சிகளுக்கு மயங்கி அவரும் உடலை முறித்துக் கொண்டிருந்தார். வயிறாரக்கூடிய அளவுக்கு கோயில் பிரசாதங்கள் கிடைத்தன. அதுதான் அவருக்கான ஊதியம்

2.

சிவசுந்தரமலரும் தனித்துப்போன பெண். அறுபதைத் தாண்டிய வயது. பார்ப்பவர்களுக்கு புத்தி குறைவான பெட்டை மாதிரித் தெரிந்தாலும் உண்மையில் சுந்தரமலர் அப்படியல்ல. இரண்டு சகோதரங்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். நல்ல நிலபுலன்காரி. அதைவிட சகோதரிமாரின் வீடுவளவு நில புலன்களை பார்க்கவேண்டிய பொறுப்பும் சுந்தரமலருக்குத்தான். சுந்தரமலர் ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை என்பதற்கு பலரும் பலவிதமாகப் பேசினார்கள்.

“காதல் தோல்வி. அவன் ஏமாத்திப்போட்டு வெளிநாட்டுக்குப் போட்டான். அவனையே யோசிச்சு யோசிச்சு சுந்தரமலர் இப்பிடியாப் போச்சு”என்று ஒரு கதை.

“சுந்தரமலர் கலியாணம் கட்டி கொஞ்சநாளில் புருஷன் விட்டிட்டு ஓடியிட்டான்” என்று இன்னொரு கதை.

“இந்தியன் ஆமிக்காலத்தில ஆமிக்காரரோட தொடர்பில இருந்தவள்” என்று என்னுமொரு கதை.

எந்தக் கதைகளையும் காதில் போட்டுக்கொள்ளாது வெளிநாட்டு யூரோக்களுடன் சுந்தரமலரின் காலம் கலகலப்பாகவே கழிந்தது.

3.

சின்னையா வாத்தியாருக்கு பொம்பிளையளோட கதைக்கிறதெண்டால் ஒரு தனிப்புழுகம். வலிய வலியப்போய் லொள்ளுப் பகிடியள் விட்டுக்கொண்டிருப்பார். சுந்தரமலரோடயும் அவற்றை பொழுது நல்லாத்தான் போனது. இரட்டை அர்த்தத்திலும் சில பகிடியள் விட்டுப் பார்த்திருக்கிறார். மனிசிக்காரி இல்லாத நேரத்தில இவற்றை சேட்டை கூடவாக இருக்கும்.



சுந்தர மலருக்கு விளங்கினாலும் “என்ன வாத்தியார் இண்டைக்கு ஓவரா இருக்கு” என்று மெல்லிய முறைப்போடு நழுவிவிடுவாள்.

வாத்தியார் இப்ப புதுச்சுகம் தேடினார். சிவண்ணையையும் சுந்தரமலரையும் சேர்த்து வைச்சு பகிடி பண்ணத் தொடங்கினார். “இஞ்ச பாரடி உனக்கும் பெயர் சிவ எண்டு தொடங்குது. சிவத்துக்கும் சிவ எண்டு தொடங்குது. நல்ல பொருத்தம். நான் பேசட்டே” என்று வம்பளக்கத் தொடங்கினார்.

“இனி உப்பிடி ஏதாவது கதைச்சியளெண்டால் நான் இஞ்சாலிப்பக்கம் வரமாட்டன்” என்றபடி முறைத்துக் கொண்டு போனாள் சுந்தரமலர்.

4.

சிவண்ணை கோயில் பூந்தோட்டத்தில் பூப்பறித்துக்கொண்டு நின்றார். அந்தப்பக்கத்தால் போன சுந்தரமலர் சடக்கெனத் தரித்து நின்றாள்.

“சிவண்ணை சாப்பிட்டியே!”

ஒருநாளுமில்லாத இந்தக் கேள்வியால் சிவண்ணை தடுமாறிப்போனாலும் பூப்பறிப்பதிலேயே குறியாயிருந்தார்.

சுந்தரமலருக்குத் தன்னை நம்ப முடியாதிருந்தது. இதென்ன புதுப் பழக்கம்? நான் ஏன் சிவண்ணையை விசாரிக்கிறன். மனம் தடுமாறிய சிந்தனையில் அவள் மூழ்கினாள்.

மறுநாள் சுந்தரமலர் தெருவோரம் போனபோது மடத்தில் படுத்துக்கிடந்த சிவண்ணை “சுந்தரி” என்றார்.

திடுக்கிட்டுத் திரும்பிய சுந்தரமலர் சிரித்தாள். அவள் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. புதிதாய்க் கிடைத்த பெயர்! மகிழ்ச்சியில் சிலிர்த்தாள். “சுந்தரி! சுந்தரி!!” திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்தாள். “ம்..நல்லத்தான் இருக்கு.” தன்னுடைய பெயருக்கு ஓர் புதிய அர்த்தம் பிறந்ததாக உணர்ந்தாள்.

கிருஷ்ணர் பள்ளிகொள்வதுபோல படுத்துக்கிடந்த சிவண்ணையும் சிரித்தார்.

5.

நான் இலங்கைபோகத் தயாரானேன். எனது பயணத்தை அறிந்த சுந்தரியின் சகோதரிமார் என்னைச் சந்திக்க வேண்டும் என்றார்கள்.

“ஒரு பொருளும் கொண்டுபோகமுடியாது. என்ன கெஞ்சினாலும் என்னால முடியாது“ என்பதில் உறுதியாக இருந்தேன்.

“அண்ணை ஒரு உதவி. நீங்கள் கட்டாயம் செய்யவேணும். உங்களால தான் முடியும்” என்றார்கள்.

“எனக்கு ஏற்கனவே நாப்பது கிலோ தாண்டிவிட்டது” என்றேன்.

“அதில்லையண்ணை. இது குடும்பப் பிரச்சினை. எங்கட மானம்போகுது. நீங்கள்தான் காப்பாத்தவேணும்” என்றார்கள். இரண்டு கிழமை லீவில போறன் அதுக்குள்ள இது வேற. ஆனாலும் இது ஒரு புதுப்பிரச்சனை. என்னதான் என்று ஒருமுறை பார்த்து விடுவமே! “முடிந்த வரை முயற்சிக்கிறேன்“ என்றேன்.

6.

ஊர் அல்லோலகல்லோல பட்டுக் கிடந்தது. யாரைப் பார்த்தாலும் சிவண்ணையையும் சுந்தரியைப்பற்றியும் மட்டுமே பேசினார்கள். நாட்டின் பொருளாதரப்பிரச்சினை, வறுமை, பஞ்சம் பசி, பட்டினி எல்லாம் மறந்து கிடந்தார்கள். எல்லோர் முகங்களிலும் நாணச்சரிப்பு இழையோடியது. வெளியில் என்னென்ன பேசினாலும் ஆழ்மனங்கள் மகிழ்ச்சியில் ஊறத்தான் செய்தன.

சின்னையா வாத்தியார் கடுங்கோபத்திலிருந்தார். “வயசுக்கு ஏற்றமாதிரி நடந்து கொள்ள வேண்டாமே! இதைப்பாத்து இளசுகளல்லே தறிகெட்டுப் போகப்போகுதுள். உதைக் கண்டிச்சு அறுக்கைப் படுத்திப்போடவேணும்” என்று அவர் போவோர் வருவோருக்கெல்லாம் வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

நிர்வாக சபைகூடி என்ன முடிவெடுத்தாலும் சிவண்ணை அதைப்பற்றியொன்றும் அலட்டிக்கொள்வில்லை. வழமை போல கோயிலுக்குப்போனார். ஐயரோ அல்லது எவருமோ சிவண்ணைக்கு முகம் கொடுக்கவில்லை.

சிவண்ணை பசியோடிருந்தார்.

சுந்தரி நேராகவே சிவண்ணையிடம் போனாள். “சிவண்ணை நீ வீட்டவா சாப்பிடலாம்” என்றாள். சிவண்ணை பேச்சமூச்சின்றி அவள் பின்னாலே போனார்.

7. ஊர் கிடக்கிற நிலைமையில நான் என்னத்தைக் கதைக்கிறது? கதைத்தாலும் எடுபடும்போலத் தெரியவில்லை. என்னுடைய மருமகள்கார பெட்டையிட்ட மெதுவாக விசயத்தைக் கேட்டேன்.

“ஓம் அவை இப்ப ஒரு வீட்டிலதான் இருக்கினம். இருக்கட்டுமன்! இருந்தாலென்ன இப்ப?” என்று நெத்திமுட்டாகக் கேட்டாள். அவள் துணிச்சலை மனதுக்குள் பாராட்டினேன்.

அதுதானே! இருந்தாலென்ன! இருக்கட்டுமன்! இன்னும் வாழப்போற கொஞ்சக் காலத்தை ஆளாளளுக்கு ஒரு துணையாய் சந்தோசமாய் வாழ்ந்திட்டுப்போகட்டுமன்!

நான் சுந்தரியின்ர சகோதரிமாருக்கு என்னத்தைச் சொல்லுறது!

ஊரில் பலருடனும் உரையாடிய போது சிவண்ணை சுந்தரி இணையை உள்ளூர ரசித்தார்கள். ஆனால், வெளியில் ஆக்ரோசமாக எதிர்த்தார்கள். எதிர்ப்பின்மூலம் தம்மை சகட்டு மேனிக்கு மிக உயர்ந்த ஒழுக்கவாதிகளாக நிறுவ முயன்றுகொண்டிருந்தார்கள்.

8.

நான் சுந்தரி வீட்டுக்குப் போனேன். என்னைக்கண்டதும் சுந்தரி அச்சப்பட்டாள்! நான் சினேகபூர்வமான புன்கையை உதிர்த்து அவளைத் தைரியப் படுத்தினேன். முற்றத்துக் கொடியில் சிவண்ணையின் வேட்டி பளிச் என்று வெண்மையாய் காய்ந்துகொண்டிருந்தது. முற்றம் அழகாக கூட்டப்பட்டிருந்தது. பூமரங்கள் வண்ண வண்ணமாய் பூத்துக்கிடந்தன. சிவண்ணை முகத்தில் எதுவித மாற்றமுமில்லை. என்னை அவர் கணக்கெடுக்கவும் இல்லை. கொட்டிலில் கட்டியிருந்த மாடு “ம்..ம்.பா..“ என்று அடிவயிற்றால் கத்தியது. சிவண்ணை ஒரு கத்தை வைக்கோலை எடுத்துக் கொண்டு கொட்டிலுக்குப்போனார்.

## இலத்தீன் அமெரிக்காவில் வன அழிப்பை தடுக்கும் பூர்வகுடிகள்

# சிலி நாட்டில் தேசிய இன விடுதலையை வேண்டிடும் ‘மப்புச்சே’ மக்களின் பூர்வீகத்தை மீட்கும் போராட்டம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிலி நாட்டின் தெற்கு பகுதியில் வாழும் பூர்வகுடி “மப்புச்சே” (Mapuche ) இனம். இந்த மக்கள் தங்கள் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரும் மக்களாக அறியப்படுகிறார்கள். ஆதிக்க, ஆக்கிர மிப்பு சுரண்டலுக்கு உள்ளான ஓர் இனம், இன விடுத லையை வலியுறுத்தி இன்றும் போராடி வருகிறார்கள்.

**பூர்வீகத்தை மீட்கும் போராட்டம்**

மப்புச்சே மக்கள் மொத்த சிலி நாட்டின் மக்கள் தொகையில் 11வீ இவர்கள் உள்ளனர். மப்புச்சே இனமக்கள் சிலி நாட்டில் தெற்கில் “பயோ - பயோ” ஆற்றை எல்லையாகவும், மேற்கே பசிபிக் பெருங்கட லையும், கிழக்கே அர்ஜென்டினா நாட்டு எல்லையையும் கொண்டு “அரௌகேனியா பகுதியில்” (Araucania Region) வாழ்கின்றனர்.

விவசாயம் இவர்களுக்கு அடிப்படை பொருளாதார மாக இருக்கின்றது. இவர்கள் மட்டுமின்றி இம்மண் ணின் பிற பூர்வகுடிமக்களான அய்மாரா, பாலிநேசியன், ரபானுய் இன்னும் பல பூர்வகுடி மக்களும் சிலி நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

சிலி மற்றும் அர்ஜென்டீனாவில் வாழ்கின்ற மப்புச்சே மக்களின் கலாச்சாரம் என்பது கி.மு 500 அல்லது 600க்கு முன்பானது என்று அகழ்வாராய்ச்சிகள் குறிப் பிடுகின்றன.

**ஒடுக்கப்படும் பூர்வகுடி மக்கள்**

தென் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவை ஒட்டிய சிலி நாட்டின் தெற்கு பகுதியில் வாழும் பூர்வ குடி “மப்புச்சே” இனம். இந்த மக்கள் தங்கள் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரும் மக்களாக அறியப்படுகிறார்கள்.

காலனித்துவ சுரண்டலுக்கு உள்ளான ஒரு இனம் இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரு கின்றது. ஏகாதிபத்திய நலனுக்காகவே மக்களுக்கு எதிரான அரசுகளும் சர்வாதிகாரிகளும் பல்வேறு நாடுக ளில் உருவாக்கப்படுகின்றன.

உலகெங்கும் ஏகாதிபத்திய நலனுக்காக ஒடுக்கப் படும் பூர்வகுடி மக்களும், தேசிய இன மக்களும் தங்கள் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடி வருகின்றனர். குறிப்பாக இத்தகைய விடுதலை உரிமை போராட்டங்களை வல்லாதிக்க நாடுகளின் நலனுக்காக அந்தந்த நாடுகளில் இருக்கும் அரசுகள் ஒடுக்கிவருவது பன்னெடுங்காலமாக தொடர்ந்து வருகிறது.

**சொந்த மண்ணிலே உரிமை மறுப்பு**

சொந்த நிலத்திலேயே மப்புச்சே மக்களின் குடியுரி மையும், தேசமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அவர்க ளுக்கான உரிமை மறுக்கப்பட்டது. அம்மக்களின் மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் சிலி அரசு எந்த அங்கீ காரமும் வழங்கிடவில்லை.

இன்றுவரை தங்கள் இன உரிமைக்காகவும் நிலத்திற் காகவும் சிலி மற்றும் அர்ஜென்டினாவில் மப்புச்சே மக்கள் போராடி வருகின்றனர். அரௌகேனியா நிலப் பரப்பில் வாழ்ந்து வந்த இவர்கள் ஸ்பானிய காலனி ஆதிக்கத்தின் வரலாற்றில் அரௌகேனியான்கள் (Araucanians) என்று அழைக்கப்பட்டனர்.

ஸ்பானிய காலனியத்தில் இருந்து சிலி விடுதலை பெற்றதை தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் ஐரோப்பிய மற்றும் “மெஸ்டிசோ” சிலியர்கள் மப்புச்சே மக்கள் வாழ்ந்து வந்த அரௌகேனியா பகுதியை ஆக்கிர மிக்க தொடங்குகின்றனர்.

**காலனி ஆதிக்கத்தில் மக்கள் படுகொலை**

ஸ்பெயின் காலனிய தங்கச்சுரங்க பணியில் வேலை செய்த மப்புச்சே மக்கள் பலர் இறந்துபோனார்கள். ஸ்பெயின் காலனி அரசு தங்கள் படைகளில் மப்புச்சே மக்களை இணைத்து போரிட வைத்தனர். இதனால் மப்புச்சே மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து போனது.





ஸ்பெயின் காலனித்துவத்திற்கு பின்னர், மப்புச்சே இனத்தினர் வாழ்ந்து வந்த வளமான நிலத்தை அபகரிக்க வும், அந்நிலங்களில் விவசாய உற்பத்தியை பெருக்கி வும் சிலி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. 19ஆம் நூற்றாண்டில் காலனிய காலத்திற்கு பின்னர் சிலி நாட்டின் பணப்பயிர் தொழிலுக்கான நிலப்பரப்பு விரிவடைய தொடங்கியது.

இச்சூழலில் மப்புச்சே மக்கள் வாழும் வடக்கு அரௌகேனியா நிலப்பரப்பில் இன்றளவும் நில ஆக்கிரமிப்பு சண்டைகளும், வன்முறைகளும் சிலி அரசி னால் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மப்புச்சே மக்களின் பாரம்பரிய கல்வி முறைகளும் அரசினால் ஒழிக்கப்பட்டுவிட்டது.

**காடுகள் அழிப்பும் நில அபகரிப்பும்**

வரலாற்று ஆசிரியர்களின் தகவற்படி அரசின் நில அபகரிப்பு கொள்கை, பஞ்சம், நோய் தொற்று போன்ற காரணங்களால் மப்புச்சே இன மக்கள் தொகை ஐந்து லட்சத்தில் இருந்து வெறும் இருபத்தி ஐந்தாயிரமாக சுருங்கி போனதாக குறிப்பிடுகின்றார்கள். இதனால் எண் ணற்ற மப்புச்சே மக்கள் தங்கள் சொந்த நிலத்தைவிட்டு




அகதிகளாக வெளியேறி வேறு இடங்களுக்கு இடம்பெயரும் அவலம் ஏற்பட்டது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில், குறிப்பாக பிரேசில், காடுகளை அழித்து பணப்பயிர்களை வளர்க்கும் பெரு நிறுவனங்களின் வேட்டைக்காடாக மாறியுள்ளது. இக் காடுகளில் வாழ்ந்து வரும் தொல் பழங்குடியினரை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தும் பணிகளை அந் நாடுகளின் மேற்குலக சார்பு அரசுகள் செய்து வரு கின்றன.

இதற்கு எதிராக பல இடங்களில் பழங்குடி மக்கள் போராடி வருகின்றனர். மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் பெருநிறுவனங்கள் சிலியின் ஆயிரக்கணக்கான ஏக்கர் வால்டிவியன் காட்டு நிலப்பரப்பு அழித்துள்ள னர். அந்நிலத்திற்கு ஒவ்வாத அந்நிய மரங்களான சவுக்கு மற்றும் தைல மரங்களை பயிர் செய்கின்றனர்.

**சிலியில் இயற்கை கனிம வளம்**

சிலியில் குவிந்திருக்கும் இயற்கை கனிம வளங்களை குறிவைத்து வந்த ஸ்பானிய காலனிய வரலாற்றை தொடர்ந்து விடுதலை பெற்ற சிலியின் அதிகாரவர்கம் தீவிர முதலாளித்துவத்தை ஆதரித்து வந்தது.

3 ஆண்டுகளான தைல மரம் நாளொன்றுக்கு 20 லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சிவிடுகிறது. மேலும், இம்மரங்களை வளர்க்க ஏராளமான இரசாயன உரங் களை கொட்டி நிலத்தை மலடாக்குவதாக மப்புச்சே மக்கள் குமுறுகின்றனர். இப்படியாக வளர்க்கப்படும் மரங்கள் சீனா, ஜப்பான், அமெரிக்கா, இத்தாலி மற்றும் உலகெங்கும் ஏற்றுமதியாகின்றது.

**சர்வாதிகார அதிபர் அகஸ்டோ பினோச்சே**

சிலி நாட்டின் முன்னாள் ராணுவ சர்வாதிகார அதிபர் அகஸ்டோ பினோச்சே (Augusto Pinochet 1973 – 1990) மப்புச்சே மக்களின் போராட் டத்தை ஒடுக்க தீவிரவாத தடுப்பு சட்டத்தை இயற்றினார்.

அந்த சட்டத்தை பயன்படுத்தி இன்றைய அரசும் போராடும் மப்புச்சே மக்களை ஒடுக்கி வருகிறார்கள். போராடி வரும் மப்புச்சே மக்களின் மீது தீவிரவாத பாதுகாப்பு சட்டம் பிரயோகப்படுத்துவதையும், போராட் டத்தின் நிலவரத்தை கண்டறிய ஐ.நா மன்றம் பென் எமெர்சன் என்ற அதி காரியை சிலி நாட்டிற்கு அனுப்பிவைத் தது. அவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தீவிரவாத தடுப்பு சட்டத்திற்கு எதிராக ஐ.நா மன்றம் தனது கண்டனத்தை ஜீலை 2013ல் பதிவு செய்தது. தங்கள் பூர்வீக நிலத்தை சிலி அரசிடம் இருந்து மீட்டு தங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த பகுதி களை தன்னாட்சி பிரதேசமாக அறிவித்திட வேண்டும் என்பதே மப்புச்சே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

**மப்புச்சே இன விடுதலைக்காக போராடும் அமைப்பு**

மப்புச்சே இன விடுதலைக்காக போராடும் “குவார் டினடோரா அறவுக்கோ மல்லேக்கோ” (Coordinadora Arauco Malleco – CAM ) எனும் அமைப்பாகும். இதன் தலைவர் 53 வயதான எக்டர் லைட்டுள் ( Hector Llaitul ) கல்லூரி மாணவராக இருந்த காலம் முதலே இடதுசாரி அமைப்புகளுடன் இணைந்து இயங்கி வருபவர்.

இவர் அகஸ்டோ பினோச்சே சர்வாதிகார அரசுக்கு எதிராக போராடியவர். 1998ல் மப்புச்சே தலைவர்களு டன் இணைந்து CAM போராட்ட அமைப்பை தோற்று வித்தார். இந்த அமைப்பானது மப்புச்சே மக்களின் நிலங்களை, அரசு மற்றும் அரசின் ஆதரவு பெற்ற பெருநிறுவனங்களிடம் இருந்து மீட்பதை பிரதான கோரிக்கையாக முன்நிறுத்துகின்றது.

எக்டர் லைட்டுள் பலமுறை சிலி அரசாங்கத்தினால் தீவிரவாதி முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்பட் டுள்ளார். தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாக 2017ல் கைது செய்யப்பட்டார். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தும் சிலி ராணுவத்தால் கூறப்பட்ட பொய் குற்றச்சாட்டுகள் என நிரூபிக்கப்பட்டு ஓராண்டு சிறைவாசத்திற்கு பிறகு விடுதலையானார்.

**வன அழிப்பை எதிர்த்து போராட்டம்**

ஊயுஆ அமைப்பு வனஅழிப்பை செய்திடும் பெருநிறுவனங்களின் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்திட அந்நிறுவனங்களின் ரயில் மற்றும் சாலை போக்குவ ரத்தை தடுப்பது, தொழிற்சாலை எந்திரங்களை சேதப் படுத்துவது என முதலாளிகளுக்கும் அவர்களின் அர சுக்கு எதிராகவும் மூர்க்கமாக போராடி வருக்கின்றனர்.

அதே நேரம், ஊயுஆ அமைப்புக்கு எதிராகவும், மப்புச்சே இன மக்களுக்கு எதிராகவும் சிலி அரசு தனது காவல்துறையையும், ராணுவத்தையும் ஏவி அவர்களின் நியாயமான போராட்டத்தை அடக்கி ஒடுக்கி வருகிறது.

**சமத்துவ சமூகம் உருவாக வேண்டும்**

மப்புச்சே மக்களின் விடுதலை, மப்புச்சே நாட்டில் ஒரு சமத்துவ சமூகம் உருவாக வேண்டும் என்பதே எக்டரின் கனவாக உள்ளது.

2019ல் சிலி தலைநகரில் மக்கள் மெட்ரோ ரயில் கட்டண உயர்வுக்கு எதிராகவும், வளர்ந்து வரும் பொரு ளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் கடுமையான தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த தொடர் போராட்டத்தின் வெற்றியாக செபஸ்டியன் பினேராவின் அரசாங்கம் வெளியேற்றப்பட்டது.

இந்த அரசியலமைப்பு திருத்தம் மப்புச்சே மக்கள் கோரும் விடுதலைக்கு வழி வகுத்திடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதன் முடிவு எவ்வாறாக இருந்தாலும் மப்புச்சே மக்களுக்கான ஒரே தீர்வாக அம்மக்களின் விடுதலைக்காகப் போராடும் அமைப்புகள் முன்வைப்பது தனிநாடு என்பதே ஆகும். இந்த தீர்வுக்கான இலக்கை நோக்கிய மப்புச்சே மக்களின் பயணம் தொடரும் என்பதில் ஐயமில்லை!

பல அடக்குமுறைகளை எதிர்கொண்டாலேயே அவர்களின் போராட்டத்தை தீவிரப்படுத்தியது. மப்புச்சே இளைஞர்கள் தங்கள் பூர்வீக நிலங்களையும் தன்னாட்சி பிரதேச உரிமையையும் பெறுவது மட்டுமே இதற்கான தீர்வாயக அமையும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

# புனர்வாழ்வு சட்டத்தில் மிகவிரைவில் திருத்தம்

கொழும்பு, ஜன. 08

புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே நபர்கள் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

குறித்த சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டதன் பின்னர் எந்தவொரு நபரும் தாமாக முன்வந்து புனர்வாழ்வு நிலையத்திற்கு செல்ல முடியும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கம்பளையில் புதிதாக புனர்வாழ்வு மையம் ஒன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

தற்போது புனர்வாழ்வு மையங்களில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே அதிகமாக காணப்படுவதால், எதிர்வரும் காலங்களில் அதிகாரிகளின் அனுமதியின்றி வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், குறித்த நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருப்பின், மருத்துவ சிகிச்சைகளுடன் தொழில்சார் பயிற்சிகளையும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன சுட்டிக்காட்டினார். (அ)

# பருவ மழை இன்மையால் விவசாயத்துக்கு பாதிப்பு

கிளிநொச்சி, ஜன. 08

பல பகுதிகளில் பெரும்போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் பருவ மழை இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் நீர் இல்லாது பதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நெற்கதிர்கள் உருவாகும் நிலையில் பயிருக்கு தேவையான நீர் இல்லாத காரணத்தினால் வயல் நிலங்கள் வறட்சியடைந்து வருகின்றன.

இதனால் வளர்ச்சியும் குன்றியே காணப்படுகின்றது.

இந்த நிலையில் சில விவசாயிகள் தம்மால் இயன்றவரை குளங்களுக்கு அருகே உள்ள வயல்களுக்கு பம்பிகள் மூலம் நீர் பாய்ச்சி வருகின்றனர்.

அத்துடன் சிலர் இரவு பகல் பாராமல் தொடர்ச்சியாக 5 நாட்கள் 6 நாட்களாக வயல்களிலே தங்கி நின்று நீர் பாய்ச்சும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மழையை மாத்திரம் நம்பியுள்ள மானாவாரி பயிர்ச்செய்கையே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது. மழையின்மை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# அனுரவுடன் மொட்டு பேச்சு

கொழும்பு, ஜன. 08

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தவர் ஒருவருக்கும் இடையில் இரகசிய பேச்சுவார்த்தை ஒன்று நடந்துள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தற்போதைய நெருக்கடி குறித்து அனுரகுமார திஸாநாயக்க, விசாரித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர், கட்சிக்குள் பிளவு அல்ல கட்சி சிதறி போயுள்ளது என கூறியுள்ளார்.



ஸ்ரீங்கா பொதுஜன பெரமுன ஏற்கனவே சில அணிகளாக பிரிந்து சென்றுள்ளது. பொதுஜன பெரமுனவின் கூட்டணி கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார பிரிந்து சென்றுள்ளனர்.

ராஜபக்ஷ ஆதரவாளர்களும் பிரிந்து சென்றுள்ளனர் பொதுஜன பெரமுனவின் முக்கிஸ்தரும் ராஜபக்ஷ ஆதரவு அணியாக இருந்த டலஸ் அழகப்பெரும, ஜீ.எல்.பீரிஸ் போன்றோரும் கட்சியில் இருந்து பிரிந்து சென்றுள்ளனர்.

மேலும் அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, ஜோன் செனவிரட்ன தனி அணியாக பிரிந்துள்ளனர்.

இதனிடையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பசில் ராஜபக்ஷ அணி, நாமல் ராஜபக்ஷ, நிமல் லான்ஸா அணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அணி என மேலும் பிளவுபட்டுள்ளதாக அனுரகுமார தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் 38 இலங்கையர்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்

புதுடில்லி, ஜன. 08

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் 38 பேரின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

அவர்களின் கடவுச்சீட்டுகள் சென்னையிலுள்ள இலங்கை துாதரகத்தினால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு அவர்களின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவுக்கு முகவர்களால் அழைத்துச்செல்லப்பட்டபோது கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் 38 இலங்கையர்கள், கர்நாடக மாநிலத்தின் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 38 இலங்கையர்களும் நேற்று முன் தினம் முதல் தொடர் உண்ணாவிரதத்தை முன்னெடுத்திருந்தனர்.

தற்போது கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதால், நாடு திரும்புவதற்காக இந்திய அரசின் அனுமதிக்கு காத்திருப்பதாக குறித்த இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

கல்வி tv CHANNEL-1

**08.01.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**08.01.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 2021ஆம் ஆண்டுக்கான கணக்குகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை

கொழும்பு, ஜன. 08

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின், 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள், இது வரையில் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ருவிட்டர் பதிவின் ஊடாக அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின், முன்மொழியப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்



தொடர்பில், கலந்துரையாடுவதற்கு, அதன் உறுப்பினர்கள், அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், அவர்கள் தயார்ப்படுத்தலின்றி கூட்டத்தில் முன்னிலையாகி இருந்தமையால், வெறுமையாகவே கூட்டத்தை நிறைவுசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

வெளிநாடு சென்றுள்ளதாகக்கூறி, கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின் தலைவர், கூட்டத்தில் முன்னிலையாகவில்லை.

அத்துடன், ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரி தொடர்பில் தகவல் இல்லையெனவும், கலாநிதி ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இலவச வீடு ஜுலை வரை மட்டுமே!

கொழும்பு, ஜன. 08

போராட்டகாரர்களின் தாக்குதல் காரணமாக வீடுகள் உட்பட சொத்துக்களை இழந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பத்தரமுல்லை வியத்புர வீடமைப்புத் தொகுதியில் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் அவர்கள் எதிர்வரும் ஜுலை மாதம் வரை மாத்திரமே இலவசமாக தங்கியிருக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர், அந்த வீடுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தினால், வீடுகளுக்கான வாடகை பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அறவிடப்படும். வியத்புர வீடமைப்பு தொகுதியில் உள்ள வீடொன்றின் மாத வாடகை சுமார் 70 ஆயிரம் ரூபா.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளை கொள்வனவு செய்ய விரும்பினாலும் அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஏற்கனவே அந்த வீடுகளை கொள்வனவு செய்ய தயாராக இருப்பதாக கூறப்படுகிறது. ஒரு வீட்டின் விலை சுமார் இரண்டு கோடி ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்கள் தாக்குதல்கள் மற்றும் தீ வைப்பு சம்பவங்களால் பொதுஜன பெரமுனவின் 82 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீடுகளையும் சொத்துக்களையும் இழந்தனர்.

இவர்களில் குறிப்பிடத்தக்களவினர் பத்தரமுல்லை வியத்புர வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளை தற்காலிகமாக இலவசமாக பெற்றுக்கொண்டுள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 1,200 மெற்றிக் தொன் சிவப்பு சீனி சிக்கியது

கொழும்பு, ஜன. 08

வெள்ளைச் சீனி என்ற போர்வையில், நாட்டுக்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரத்து 200 மெற்றிக் தொன் சிவப்பு சீனி, சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதன் பெறுமதி 241 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளால், நேற்று முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, களனி பகுதியில் உள்ள களஞ்சியம் ஒன்றிலிருந்து 600 மெற்றிக் தொன் சிவப்பு சீனித் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேலும் 600 மெற்றிக் தொன் சிவப்பு சீனி, கொழும்பு துறைமுகத்தில் 30 கொள்கலன்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

களனி பிரதேசத்தில் மீட்கப்பட்ட சிவப்பு சீனியை நாட்டுக்கு கொண்டுவந்த இறக்குமதியாளரால், கொழும்பு துறைமுகத்தில் கைப்பற்ற சீனித் தொகையும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. (அ)




# தாமரை கோபுரத்துக்கு இதுவரை 5 இலட்சம் பார்வையாளர் வருகை

கொழும்பு, ஜன. 08

தாமரை கோபுரம் பொதுமக் களின் பாவனைக்காக திறக்கப்பட்டதில் இருந்து இன்று டன் 5 இலட்சம் பார்வையாளர்களை எட்டியுள்ளது என தாமரை கோபுர முகாமைத்துவ தலைவர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மாத்தறை பிரதேசத்தில் இருந்து நேற்று முன் தினம் வருகை தந்த 500,000 ஆவது பார்வையாளரை வரவேற்று ரிக்கெட் வழங்கப்பட்டதுடன், அவருக்குப் கண்ணாடியில் அமைக்கப்பட்ட தாமரைக் கோபுர நினைவு பரிசிலும் வழங்கப்பட்டது.

பொதுமக்களின் பார்வைக்காக கோபுரம் திறக்கப்பட்ட நாளிலிருந்து ரூ.268 மில்லியனுக்கும் அதிகமான வருவாய் கிடைத்துள்ளது.

மேலும் 4,083 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் தாமரைக் கோபுரத்தை பார்வையிட்டுள்ளனர். (அ)

# கடந்த ஆண்டு மது விற்பனை 50 வீதத்தால் குறைந்துள்ளது

கொழும்பு, ஜன. 08

வரி அதிகரிப்பு மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக கடந்த வருடம் மதுபான விற்பனை 50 வீதத்தால் குறைந்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை கலால் திணைக்களத்தின் பேச்சாளரும், வருமான நடவடிக்கை பிரிவின் மேலதிக கலால் ஆணையாளருமான கபில குமாரசிங்க தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டுக்கான கலால் வருமானம் 140 பில்லியன் ரூபாயாக இருந்த நிலையில், கடந்த வருடம் கலால் வருமானம் 170 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. (அ)

# இன்று முதல் விவசாயிகளுக்கு சீனாவின் டீசல் விநியோகம்!

கொழும்பு, ஜன. 08

சீனாவினால் வழங்கப்பட்ட 6.98 மில்லியன் லீற்றர் டீசல் நாளை முதல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சினால் உருவாக்கப்பட்ட புதிய செயலி மூலம் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஹெக்டேரில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு இந்த எரிபொருளை இலவசமாக வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

## மகிந்தவிடம்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் அவரின் கனவுக்கு நேர்ந்த கதியை நாமெல்லோரும் கடந்த வருட நடுப்பகுதியில் கண்டோம். அந்த கதிக்கு பின்னரும் அரசியலில் இருந்து ஓய்வுபெற மகிந்த தயாராக இல்லை. அவர் களது பொதுஜன பெரமுனவே இன்னும் ஆளும் கட்சி யாக இருக்கிறது. ஜனாதிபதியாக விக்கிரமசிங்க இருக்கின்ற போதிலும் அவரது ஆட்சியை பின் னால் இருந்து இயக்கும் வல்லமையைக் கொண் டவர்களாக ராஜபக்சாக்கள் விளங்குகிறார்கள். இது துரதிர்ஷ்டவசமானது என்ற போதிலும் அதுவே நடைமுறை யதார்த்தம்.

இத்தகைய சூழ்நிலையில் மகிந்த ஜனாதிபதியின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்தழைப்பை வழங்கி குறைந்த பட்சம் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படுவதற்கு வசதியாக சிங்கள அரசியல் சமுதாயம் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் கருத்தொருமிப்பு ஏற்படுவதற்கு உதவினால் கடந்த காலத்தில் இனப்பிரச்சினையைக் கையாள்வதில் இழைத்த மோசமான தவறுகளுக்கு சிறியளவிலேனும் ஒரு பிராயச்சித்தத்தை தேடிக்கொள்ளமுடியும்.

போரின் முடிவுக்கு பிறகு கிடைத்த வாய்ப்பை தவறவிட்ட அவருக்கு வரலாறு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. அதையும் அவர் தவற விடுவாரா?



## தமிழரசு,...

ராசா ஈழநாட்டுக்கு தெரிவித்தார்.

ஆயினும் இந்த யோசனை தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகளின் தலைவர்களுடன் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள கூட்டத்தில் பேசியே இறுதித் தீர்மானம் எட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மட்டக்களப்பில் நடந்தது. எதிர்வரும் உள்ளூராட்சித் சபைத் தேர்தல் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், கலையரசன், சிவஞானம் சிறிதரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், எஸ்.யோகேஸ்வரன் உட்பட மத்திய செயற்குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் குறித்தே இந்தக் கூட்டத்தில் அதிகம் பேசப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் ஆகியன தனித்தனியே போட்டியிடுவது என்றும், ஆயினும் தேர்தல் பிரசாரத்தில் மூன்று கட்சிகளும் ஒரே மேடையில் பிரசாரத்தில் ஈடுபடுவது என்றும், இதன்போது ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் பிரசாரங்களை மேற்கொள்வதில்லை என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தனர் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஈழநாட்டுக்கு தெரிவித்தார்.

ஆயினும் இந்த யோசனை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனும், நாளை நடைபெறவுள்ள கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்திலும் பேசியே இறுதித் தீர்மானத்தை எட்டுவது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் இணைக்கத்தின் அடிப்படையிலேயே தேர்தலில் போட்டியிடுவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## கூட்டமைப்பை...

குறித்து கூட்டமைப்பின் தலைமை பதிலளிக்கவேண்டும் என்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகளின் தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

நேற்றைய கூட்டத்தில் இந்தக் கடிதம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வதில்லை என கூட்டத்தில் கலந்துகொண்டவர்களால் ஏகோபித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அவர்களது காலத்திலும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், எனவே தொடர்ந்தும் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்றும் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. (அ)

## பிரிந்து...

சென்ற சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை மீண்டும் கூட்டமைப்பில் இணைப்பதா என்பது தொடர்பில் கூட்டமைப்பின் இணைப்புக் குழு கூடி தீர்மானம் எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு கூட்டம் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

இதன்போது, கூட்டமைப்பில் புதிய கட்சிகளை இணைத்து செயற்படவேண்டும் எனக் கோரி அதன் பங்காளிகளான ரெலோ, புளொட் கட்சித் தலைவர்களால் அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது, கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் முன்னர் எந்தக் கட்சியில் இருந்தார்களோ, அந்தக் கட்சிகளில் இணைந்து கொள்ளலாம் என்றும், உதாரணத்துக்கு அனந்தி சசிதரன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் இணைந்துகொள்ளலாம் என்றும், சிவாஜிலிங்கம், சிறிகாந்தா ஆகியோர் ரெலோவில் இணைந்துகொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

அத்துடன் பங்காளிக் கட்சியாக இருந்து விலகிச் சென்ற சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை மீண்டும் கூட்டமைப்பில் இணைப்பதா என்பது தொடர்பில் கூட்டமைப்பின் இணைப்புக் குழு கூடி தீர்மானம் எடுக்கும் என்றும் கூறப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியினரையும் அரவணைத்துச் செல்லவேண்டுமென வடக்கு அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். இது குறித்து கருத்துப் பரிமாறப்படவில்லை. (அ)

## கூட்டமைப்பின்...

மையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதிருப்தியை வெளியிட்டுள்ளமை தொடர்பில் பிரதமர் கருத்துரைக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சிக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது. அந்த முதலாவது அமர்வில் தமிழ் மக்களுக்குத் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உடன்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக அடுத்த சர்வகட்சிப் பேச்சு எதிர்வரும் 10, 11, 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இந்த இரண்டாம்கட்டப் பேச்சுக்கு முன்னர் ஒரு முன்னேற்பாடாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் தொடர்பிலும் இதர விடயங்கள் தொடர்பிலும் அவர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகளுக்கு அமைய அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறும். அதன்போது கூட்டமைப்பினரின் முன்மொழிவுகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். ஆதலால், கூட்டமைப்பினரின் தற்போதைய அதிருப்தி நிலையை ஏற்க முடியாது. ஏனெனில், சர்வகட்சிக் கூட்டமானது அதன் சரியான திசையை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது - என்றார். (அ)

## உள்ளூராட்சித்...

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வி.சந்திரலிங்கம் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் தமது கட்டுப்பணத்தை செலுத்தினர்.

வவுனியா மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள நிலையில் புதிதாக தரமுயர்த்தப்பட்ட வவுனியா மாநகர சபையில் போட்டியிடுவதற்காகவே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்போது, ஜனநாயக இடதுசாரி முன்னணி முதல் முறையாக வவுனியா நகரசபையில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளோம். மக்கள் வருகின்ற தேர்தலில் சிந்தித்து வாக்களிக்கவேண்டும். மக்களது அபிவிருத்தி, ஊழலற்ற ஆட்சி என்பவற்றுக்காக மக்களது பொருளாதார நிலமைகளை கருத்தில் கொண்டு நாம் போட்டியிடுகின்றோம். இதன் மூலம் மக்களுக்கு விடிவு கிடைக்க வேண்டும் என கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வி.சந்திரலிங்கம் தெரிவித்தார். (அ)

# மனோ கணேசனுக்கு தமிழக அரசு அழைப்பு

கொழும்பு, ஜன. 08

சென்னையில் ஜனவரி 11ஆம்,12ஆம் திகதிகளில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில், தமிழக அரசு நடத்தும் அயலக தமிழர் தின விழாவில், சிறப்பு விருந்தினராக பங்கேற்குமாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட எம்பி.யுமான மனோ கணேசனுக்கு தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

“தாய் தமிழ்நாட்டில் பிரமாண்ட கொண்டாட்டம். அயலக தமிழர் தினம். உலகெங்கும் உள்ள சாதனை தமிழர்களுடன் கலை நிகழ்சிகள், உலக தமிழ் சங்கங்களுடன் கலந்துரையாடல், நலத்திட்டங்கள், சிறப்பு அமர்வுகள். சிறப்பு விருந்தினர் உரைகள்” என்ற நிகழ்ச்சி நிரல்களுடன், தமிழக அரசின் சிறுபான்மையினர், அயலக தமிழர் மற்றும் மறுவாழ்வு துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் விழா நடைபெறும் என தமிழக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இதுபற்றி மனோ கணேசன் எம்பி கூறியுள்ளதாவது:

இந்த வருடம் இலங்கையில் வாழும் இலங்கை இந்திய மலையக தமிழர்கள் இலங்கைக்கு வந்த 200 ஆவது வருடமாகும். இவ்வருடத்தில், நமது மக்களின் பிரதான அரசியல் இயக்கமான, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் என்ற முறையில், இவ்விழாவில் மிக்க மன மகிழ்வுடனும், உரிமையுடனும் நான் கலந்து கொள்ள உள்ளேன்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள், உண்மையில் “தமிழக வம்சாவளி தமிழர்கள்” என்றும் கருதப்பட வேண்டும் என்ற சிந்தனையை தமிழக அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருவேன். உலகெங்கும், தமிழர்களை உழைப்பிற்காக பிரிட்டிஷ் அரசு கொண்டு சென்றது. கொண்டு வந்தது. தன்னிச்சையாகவும், வர்த்தக வியாபார நோக்கங்களிலும் தமிழர்கள் குடிபெயர்ந்து வந்தார்கள்.

மலேசியா, சிங்கப்பூர், பீஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா, பர்மா ஆகிய நாடுகளுக்கும், தமிழகத்தின் தென் திசை மாவட்டங்களிலிருந்து இலங்கைக்கும் வந்த தமிழர்களில், தாயகம் திரும்பியோரை தவிர, ஏனையோர் அந்தந்த நாடுகளின் குடிமக்களாக வாழ்கிறார்கள். மலேசியா, சிங்கப்பூர், பீஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் சிறப்பாக வாழும் நமது இனத்தவரில், இலங்கையில் மாத்திரம் கணிசமானோர் அவல வாழ்வு வாழும் உண்மையை உரக்க கூறுவேன்.

நவீன அடிமைத்துவம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் டொமொயா ஒபோகாடா, இலங்கையில் பெருந்தோட்டங்களில் தமிழர்கள், சிறுபான்மையினர் என்ற முறையில் ஒடுக்கப்படுகிறார்கள் என்று கூறியுள்ள செய்தியை தமிழக முதல்வரது அரசின், மக்களின், உலகெங்கும் இருந்து வந்து விழாவில் கூடும் தமிழ் பிரதிநிதிகளின் கவனத்துக்கு கொண்டு வருவேன்-எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## அரசுடனான...

ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

தற்போது நடக்கும் பேச்சில் தமக்கு நம்பிக்கையில்லையெனவும், பிரதமர் தினேஸ் குணவர்த்தன பேச்சுக்களுக்கு வந்து வாய் திறக்காமல் இருப்பது பெரமுனவின் நகர்வில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் பணிப்புரைகளை செயற்படுத்துவதற்கு இராணுவத் தரப்பு தயக்கம் காட்டி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சில் முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அமெ....

இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இந்திய வம்சாவளியான இந்த பெண் அதிகாரி பாதுகாப்பு துறை சம்பந்தமான நிபுணர் என பேசப்படுகிறது.

இலங்கை வரும் அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் சுமோனா, அதன் பின்னர் இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கும் விஜயம் செய்ய உள்ளார். இதன்போது இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் காணப்படும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதனிடையே இந்திய அரசின் உயர் மட்ட அதிகாரிகள் பலர் இலங்கைக்கு விஜயம் செய்தற்காக கடந்த சில தினங்களில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள பின்னணியில், ஜோ பைடனின் உயர் மட்ட பாதுகாப்பு பிரதிநிதி இலங்கைக்கு விஜயம் செய்வது முக்கியத்துவம் மிக்கது என பேசப்படுகிறது. (அ)

## சாதாரண தர...

துள்ளார்.

பரீட்சைத் திகதி தொடர்பிலான அனுமதி கல்வி அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பின்னர் அது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## அடுத்த...

மையில் ஜனவரி 12ஆம், 13 ஆம் திகதிகளில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகின்றது.

அண்டை நாடுகளின் தலைவர்களை தவிர, ஆபிரிக்கா அங்கோலா, கானா, நைஜீரியா, மொசாம்பிக், செனகல், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், உஸ்பெகிஸ்தான், மங்கோலியா, ஐக்கிய அரபு இராட்சியம், பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

நிதி, சுற்றுச்சூழல், வெளியுறவு, எரிசக்தி, சுகாதாரம், கல்வி மற்றும் வர்த்தக நிலைகளில் “உலகளாவிய தெற்கின் குரல்” என்னும் தொனிப்பொருளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

நான்கு அமர்வுகள் ஜனவரி 12ஆம் திகதியும், ஆறு அமர்வுகள் ஜனவரி 13ஆம் திகதியும் நடைபெறும்.

மொத்தத்தில் இந்த மாநாட்டுக்காக புதுடில்லி 120 நாடுகளுக்கு அழைப்புகளை அனுப்பியுள்ளது. (அ)

## யாழ்-இந்தியா...

யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரன் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜெயசேகரன் -

ஏற்கனவே நாங்கள் திட்டமிட்டதன் அடிப்படையில் அந்த சந்திப்பு இடம்பெற்றது. பெருந்தொகையான வர்த்தகர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு தமது ஆர்வங்களை வெளிப்படுத்தினர்.

காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கான இந்த கப்பல் சேவையில் பொருட்களை ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் என்பன இடம்பெற உள்ளன.

இதன்போது பல்வேறு பிரச்னைகள் தொடர்பிலும், என்னென்ன பொருட்களை ஏற்றுமதி செய்தல், என்னென்ன பொருட்களை இறக்குமதி செய்தல் என்பது தொடர்பிலும் வர்த்தகர்களினால் கலந்த ஆலோசிக்கப்பட்டது.

காங்கேசன் துறை துறைமுகத்திற்கு அண்மையில் உள்ள காரைக்கால் துறைமுகத்தின் ஊடாக இந்த பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி இடம்பெற உள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மக்கள் இனியும் மொட்டுவிடம் ஏமாறுவதற்குத் தயார் இல்லை

## கூறுகிறார் ஹேஷா விதானகே

கொழும்பு, ஜன. 08

மக்கள் இனியும் மொட்டுக் கட்சியினரிடம் ஏமாறுவதற்குத் தயாரில்லை, அவர்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மொட்டுக் கட்சியினர் இன்னும் அவர்களின் இயலாமையை ஒத்துக் கொள்ளாமல் மேலும் மேலும் பொய்களைச் சொல்லிக்கொண்டு அரசியல் செய்கின்றனர்.

நேர்மையாக அரசியல் செய்ய முடியாவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட வேண்டும். அப்படிச் செய்யாது மக்களை ஏமாற்றும் வேலையை அவர்கள் செய்து வருகின்றனர்.

மக்கள் இனியும் ஏமாறுவதற்குத் தயாரில்லை. மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள். அவர்கள் சரியான தலைவர்களுடன் பயணிக்க விரும்புகின்றார்கள். இதை மொட்டுக் கட்சியினரிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

2022 மிகவும் மோசமான வருடம். 2023 இல் மீண்டெழுவதற்கு மக்கள் முயற்சி செய்யவேண்டும்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் எழுந்து நின்றது போல் எம்மாலும் எழுந்து நிற்க முடியும்.

ஆனால், மக்கள் இந்தப் பொய்யர்களை திருடர்களை விரட்டிவிட்டு சரியான தலைவர்களுடன் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நிறைந்த வருடம். மக்கள் இதைச் சரியாகப் பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்-என்றார். (அ)

# தேர்தல் ஆணைக்குழுவில் முரண்பாடுகள் கிடையாது

## ரோஹன ஹெட்டியாரச்சி கூறுகிறார்



கொழும்பு, ஜன. 08

தேசிய தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடு கிடையாது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடு நிலவி வருவதாக சிலர் குற்றம் சுமத்தி வரும் போதிலும் உறுப்பினர்கள் மத்தியில் அவ்வாறான முரண்பாட்டு நிலைமைகள் தென்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்து கொண்டிருந்தாலும் அது தேர்தல் அறிவிப்பைப் பாதிக்காது என அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தப்படுவதனை சீர்குலைப்பதற்கு ஒரு சில தரப்பினர் சூழ்ச்சி செய்யும் முயற்சிகளை அவதானிக்க முடிவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த ஆண்டு ரூ.45,000 பெறுமதியான போஷாக்கு உணவு

கொழும்பு, ஜன. 08

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 45,000 ரூபா போஷாக்கு உணவு கொடுப்பனவை வழங்கும் திட்டம் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 20,000 ரூபாவாக போசாக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டம் இந்த வருடம் 45,000 ரூபாவை வழங்கும் திட்டமாக திருத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்ப காலத்தில் 6 மாதங்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும்போது 4 மாதங்கள் என 10 மாத காலத்திற்கு புதிய திட்டம் பலன்களாக வழங்கப்பட உள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதாந்தம் 4500 ரூபா வீதம் 10 மாதங்களுக்கு போஷாக்கு கொடுப்பனவு வழங்கப்படும் என பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து மணிவண்ணன் தரப்பு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையிலான அணியினர் உள்ளூராட்சி சபை தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். சேர் பொன் இராமநாதன் வீதியில் உள்ள அலுவலகத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.



இதன்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அக்கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி யாழ்ப்பாணத்தில் களமிறங்குகிறது

யாழ்ப்பாணம், ஜன. 08

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வாழைப்பழச் சீப்பு சின்னத்தில் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளரும் சட்டத்தரணியுமான மைத்திரி குணரத்ன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து கட்சி நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிலரே யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் செயற்பட்டனர் ஆனால் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர்.

இலங்கை முழுவதும் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறுவோம்-என்றார். (அ)

## சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த

# சிங்கப்பூரில் இருக்கும் சட்டங்களை இலங்கையில் பயன்படுத்த திட்டம்

கொழும்பு, ஜன. 08

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுவத்துவதற்கான புதிய சட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சிங்கப்பூரில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களை சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் கூறினார். சில சமூக ஊடக செயற்பாட்டாளர்களின் நட வடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

இலங்கையில் பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் உள்ள போதிலும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டங்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# மரண அறிவித்தல்

மலர்வு 03 - 10 - 1958



உதிர்வு 29 - 12 - 2022

## இம்மனுவேல் செபதாஸ் ராஜகுமார் (குமார்) பெனடிக்ற்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வாழ்ந்தவரும் தற்போது லண்டன் குறோய்டன் நகரில் வாழ்ந்தவருமான இம்மனுவேல் செபதாஸ் ராஜகுமார் அவர்கள் 29.12.2022 வியாழனன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை பெனடிக்ற் - லூர்ட்ஸ் தங்கரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் - சிவக்கொழுந்து (லண்டன்) தம்பதிகளின் அன்பு மருமகனும், கலா அன்னமலர் (கலா) அவர்களின் அன்புக் கணவரும், டிவினியாவின் அன்புத் தந்தையும், இமல்டா, மல்லிகா, கிறிஸ்ரி, காலஞ்சென்ற சாந்தி மற்றும் ஹெலன் (வயலற்), ஜெசி, டள்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை நிக்கலஸ் மற்றும் மனோகரன், ஜசிந்தா(ஜிண்), லிகோரி (ஜெயா), காலஞ்சென்ற சௌந்தர ராஜன் மற்றும் லக்கி டொமினிக் ஆகியோரின் அன்பு மைத்துனரும், றஜித்தா - ராஜன், றஞ்ஜித்தா - சதீஸ், நிரோஷன் - ஜனனி, கிறிஸ்தோபர் - எமிலி, தர்சினி (தொட்டமகள் - Goddaughter) - மத்தியூ, றிட்சி, கெல்சி, றயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திரேசி - லவன், லவினியா - சரவணன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், நிக்கலா, ஷோன் (தொட்டமகன்- Godson), ஜொசுவா, லக்ஸ்மி, காட்டர், எமி, சொபியா, இசபெல், நோவா, ஜேகப்,ஜொசுவா, சகானா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி 11.01.2023 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு St. Mary's Church, 70 Wellesley Rd, Croydon, CR0 2AR, LONDON தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் 11.01.2023 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு Croydon Cemetery, Mitcham Road, Croydon, CR9 3AT, LONDON எனும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
**கலா** (மனைவி - லண்டன்) 0044 7477392568
**கிறிஸ்ரி** (சகோதரர் - லண்டன்) 0044 7868728572
**வயலற்** (சகோதரி - லண்டன்) 0044 7886286950
**டள்சி** (சகோதரி - கனடா) 0014164767876

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.